

கல்கி

KALKI 17·1·1971
40 காசு

தமிழ் மக்களுக்கு எமது மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்!



பொங்கல்
சிறப்பிதழ்

கல்கி

பொருளடக்கம்


சாதாரண, தை 4
ஜனவரி 17, 1971

அட்டைப்படம்: அறுவடைக் காட்சி: வித்யாவ்ரதா

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம் :	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00




மறக்காதே!
சிறிய புன்னகை விடச்
அதிக பலனைத் தரும்
நம்மிருவருக்கு மிடையில் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் இந்திராவின் வெற்றி நமது வெற்றிதான்!
இந்திராவுக்கு எதிரான ஓட்டு சுதந்திரத்துக்கு ஆதரவான ஓட்டு

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா • பாரதியார்



மலர் 30

இதழ் 25

பொங்கலுக்கு ஒரு சங்கற்பம்

தமிழ்நாடு சட்டசபையைக் கலைப்பதற்குக் கவர்னரைக் கொண்டு உத்தரவு பிறப்பித்து விட்டார், முதன் மந்திரி அவர்கள். மனம் போனபடி அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதில் பிரதமரை மிஞ்சிவிட்டார் முதல்வர் என்பது ராஜாஜியின் கருத்துரை. "ஜனநாயகத்துக்கே குழி பறிக்கும் வகையில் இதுபோல் அதிகாரத்தைப் பயன்படுத்துவது வன்மையான கண்டனத்துக்குரியது" என்கிறார் ராஜாஜி.

சட்டசபையைக் கலைத்து, மீண்டும் மாநில ஆட்சிக்குப் புதுத் தேர்தலை ஏற்பாடு செய்திருப்பதற்குப் பல காரணங்களை முதன் மந்திரி கூறியிருக்கிறார். ஆனால் பொதுவாக அனைவராலுமே இதன் உட்காரணத்தை ஊகிக்க முடியும். சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தி. மு. க. பதவி ஏற்றபோது அதற்கிருந்த நற்பெயர், நாளாவட்டத்தில் நலிந்து கொண்டே வந்திருக்கிறது. அடுத்த ஓராண்டில் இந்த மதிப்பையும் மக்களின் ஆதரவையும் மேலும் இழந்து விடுமுன்னரே தேர்தலை நடத்திவிடலாமென்று தமிழக ஆளும் கட்சி எண்ணியிருக்கக்கூடும்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னிருந்த சூழ்நிலை வேறு, இன்றுள்ள சூழ்நிலை வேறு. அப்பொழுது இருபதாண்டுகள் தொடர்ச்சியாகப் பதவியில் இருந்ததால் அதிகார போதை கொண்டிருந்த காங்கிரஸை எப்படியும் பதவியிலிருந்து இறக்கி, ஒரு மாற்று ஆட்சியைப் பரீட்சை பார்ப்பதற்கு அவசியத் தேவை ஏற்பட்டது. இதை முன்விட்டே சுதந்திரக் கட்சி தி. மு. க. வுக்கு ஆதரவு அளித்தது. தி. மு. க. ஆட்சிக்கு வந்த பின்பும் திரு அண்ணாதுரை அவர்கள் ஜீவியவந்தராக இருந்தபோது கூடியவரையில் விவேகம் சார்ந்த நிதானத்துடனேயே நிர்வாகம் நடந்து வந்தது. ராஜாஜியின் கருத்துக்களுக்கு திரு அண்ணாதுரை தந்த மதிப்பை நாடு அறியும். திரு அண்ணாதுரை அவர்கள் புற்று நோய்க்காக நியூயார்க்கில் சிகித்சை பெற்று வந்தபோது ராஜாஜிக்கு எழுதிய கடிதத்தின் வாசகங்கள் மறக்கவொண்ணாதவை:

> நம் நாட்டின் அரசியல் நிலை கண்டு அவ்வப்போது நான் கவலை கொள்கிறேன். எனினும் என் சகாக்களுக்கு வழிகாட்டவும், மக்களை முன்நின்று நடத்திச் செல்லவும் தாங்கள் அங்கு இருக்கிறீர்கள் என்பதனால் தன்னம்பிக்கையும் ஊக்கமும் அடைகிறேன். தாங்கள் இவ்வளவு பொறுமையுடன் விதைத்து வரும் விதைகள் பாலைவனத்தில் விழுந்திராது எனத் திண்ணமாகக் கருதுகிறேன். எதிர்காலத்தில் அந்த வித்துக்களிலிருந்து பசுமையான வயல்கள் விளையும் என நம்புகிறேன்.

துரதிருஷ்டவசமாக திரு அண்ணாதுரை அவர்கள் மறைந்த பின், அவரது நம்பிக்கைக்கான காரணங்களும் தேய்ந்து மறையலாயின.

சோஷலிஸத்துக்கு மாற்றுக் கருத்துக்களை மதித்து ஆராயும் போக்கு நாளடைவில் நலிந்தது; நில உச்ச வரம்புக் குறைப்பு முதலிய அதிதீவிர சோஷலிஸ நடவடிக்கைகள் மலிந்தன; ராஷ்டிரபதித் தேர்தல் முதலியவற்றில் தி.மு.க. வின் பரிபூரண ஆதரவு ஸ்ரீமதி இந்திராவுக்கே என்பது உறுதியாயிற்று; கடைசியில் நகரசபைத் தேர்தல்களில் கம்யூனிஸ்டுகளுடன் தி. மு. கழகம் கூட்டணி அமைத்துக் கொண்ட பின் சுதந்திரக் கட்சி அதனுடன் உறவை முறித்துக் கொள்வது அத்தியாவசியமாயிற்று.

சாஸனத்தைச் சிதைத்து, சுதந்திரங்களைப் பறித்து, வன்முறைகள் கண்ணெதிரே பெருகும்போதும் கவனியாதது போல் நடந்துகொண்டு வரும் ஸ்ரீமதி இந்திராவின் கட்சியினருக்கும் அவரை ஆதரிப்பவர்களுக்கும் இனியும் ஆதரவு தந்தால் ஜனநாயக வாழ்முறையே அழிய வேண்டியதுதான். எனவே நான்கு ஆண்டுகளுக்கு முன்பிருந்த சூழலில் தி.மு.க.வுக்கு ஆதரவு கோரி அந்தரங்க சுத்தமாக வேண்டுகோள் விடுத்த நாம், இன்றைய சூழலில் அந்தரங்க சுத்தமாக விடுக்கும் வேண்டுகோள் அதற்கு

நேர் மாறானது. இந்திரா — கம்யூனிஸ — தி.மு.க. கூட்டணிக்கு எதிர்ப்பாக அமையும் ஜனநாயக முன்னணிக்கே மக்கள் தங்கள் மேலான வாக்குகளை அளிக்க வேண்டுகிறோம்.

இந்த வேண்டுகோளை மிகுந்த நம்பிக்கையுடன் விடுக்கிறோம். ஏனெனில் பொதுவாக நம் மக்கள், தி. மு. க வின் தேர்தல்காலப் பிரசாரங்கள் விரித்த வாய்ப்பந்தலின் பந்தத்திலிருந்து மெல்ல மெல்ல விடுபட்டு வருவதாகவே தெரிகிறது. சமீபத்திய நகரசபைத் தேர்தல்களில் பத்து நகரசபைகளில் ஏழு நகரசபைகளை தி. மு. க. கைப்பற்றி யிருப்பினும், ஸ்தான ரீதியாகப் பார்க்கும் போது தி. மு. க. 95 ஸ்தானங்களையும், ஸ்தாபன காங்கிரஸ் 94 ஸ்தானங்களையும் பெற்றிருப்பதைக் காண்கிறோம். கல்லூரி மொழி விஷயமாக தி. மு. க.வின் போக்கில் இளைஞர்களும் அவர்களது பெற்றோர்களும் கொண்டுள்ள அதிருப்தி குறிப்பிடத் தக்கது. தொன்றுதொட்டு வந்துள்ள சமய விஷயங்களில் தி. மு. க. அரசு கூசாமல் தலையிட்டுச் செய்யும் மாற்றங்கள் ஆஸ்திகர்களின் உள்ளங்களைப் புண்படுத்தியுள்ளது. ரூபாய்க்கு மூன்று படி அரிசி என்ற கோஷத்தில் தொடங்கி, படி அரிசி என்பதாகத் தேய்ந்து, அதுவும்கூட அனைவருக்கும் கிட்டாமலிருப்பதிலிருந்து பொதுவாக மக்கள் அனைவருக்குமே வார்த்தை ஜாலம் வேறு, நிர்வாகத் திறன் வேறு என்ற தெளிவு ஏற்பட்டிருக்கிறது. தி. மு. கழகத்துக்குள்ளேயே இருக்கும் பிளவுகளும் அவ்வப்போது பல உருவங்களில் வெளிப்பட்டுக் கொண்டிருப்பதால் அக்கட்சியின் செல்வாக்கு மங்கிக் கொண்டே வருகிறது. அகில இந்திய உணர்வுக்கு மாறான போதனைமொழித் திட்டம், தனிக் கொடித் திட்டம், அதிகபட்ச மாநில சுயாட்சிக் கோரிக்கை முதலியன தேசிய ஐக்கியத்தை விரும்புவோருக்கெல்லாம் தி. மு. க. குறித்து ஐயப்பாடுகளை எழுப்பியுள்ளன. லாட்டரி, மதுபான உற்பத்தி முதலிய திட்டங்களால் தர்மசிந்தனை படைத்தவருக்கெல்லாம் தி.மு.க.விடம் பற்றுக் குறைந்து விட்டது.

சென்ற தேர்தலில் தி. மு. க.வை ஆதரித்த வாக்காளர்களில் ஒரு கணிசமான பகுதியினர், ராஜாஜி என்ற சத்திய—தர்ம மூர்த்தியின் ஆதரவு இன்று அக்கட்சிக்குக் கிடையாது என்பதாலேயே, வரவிருக்கும் தேர்தலில் அதற்கு வாக்குத்தர விரும்பவில்லை.

இந்திய ஜனநாயகம் பறிமுதலாகாமல் இருக்க வேண்டும் என்பதொன்றே இன்று அதிமுக்கியமான பிரச்னை. எனவே ஜனநாயக வாழ்வுக்குக் குழி பறித்துவரும் இந்திரா — கம்யூனிஸக் கூட்டுடன் தொடர்புடைய எவருக்கும் தங்களது வாக்கு கிடையாது என்று மக்கள் பிரதிக்ஞை செய்துகொள்ள வேண்டும். நமக்கு வாழ்வும் வளமும் தரும் சூரிய நாராயணன் இந்தப் பொங்கல் திருநாளன்று மக்கள் இவ்வாறு சங்கற்பம் பூணுவதற்கு அவர்களது அறிவில் தனது அருளொளியைப் பாய்ச்சட்டும்!

ராஜாஜியின் கருத்துக்கள்

தம்முடைய அரசியல் தந்திர உபாயத்துக்குச் சாதகமாக இருக்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகப் பிரதமர் மக்கட்சபையைக் கலைக்கச் செய்திருக்கிறார். இதுபோல் இதுவரை நடந்ததில்லை. எதிர்க்கட்சிகளுக்கு அதிகபட்சமான பிரதிகூலங்கள் இருக்கும் சூழ்நிலையில், அடுத்த பொதுத் தேர்தல் என்பதை ஒரு முடிந்து போன விஷயமாகப் பிரதமர் ஏற்பாடு செய்து விட்டார். இது குறித்து அவருக்குத் தர்ம ரீதியாகவோ, அரசியல் சாஸன அடிப்படையிலோ எவ்விதமான மன உறுத்தலும் இல்லை. நடக்கவிருப்பதை நான்

ஆஸ்திக அன்பர் உதவுக! இசையன்பர் ஊக்குக!

ஆண்டவனோடு தொடர்புடைய திருத்தலங்களைப் போலவே பரமபாகவதர்களுடன் தொடர்பு கொண்ட இடங்களும் புண்ணிய க்ஷேத்திரங்களாகின்றன. ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் இன்றைய வடார்க்காடு மாவட்டத்திலுள்ள வாலாஜாப்பேட்டைக்கு விஜயம் செய்து தங்கியிருந்து ராம பக்தியை, நாத வித்தையைப் பரப்பியிருக்கிறார். வாலாஜாப்பேட்டை வேங்கடரமண பாகவதர் வழியாக தியாகையரின் சிஷ்ய பரம்பரை ஒன்றே உருவாகியது. எனவே ராமனடியார்களுக்கும், சங்கீத ரசிகர்களுக்கும் வாலாஜாப்பேட்டை ஒரு புண்ணிய ஸ்தலமாகும். அங்கு ஸ்ரீ தியாகப் பிரம்மம் தங்கியிருந்த இல்லம் ஓர் இசைக் கோயிலேயாகும். தற்போது அந்த இல்லத்தை ஸ்ரீ தியாகப் பிரம்ம பஜனை மண்டபமாக புனர் நிர்மாணிக்க நன்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வீட்டுக்குரிமையாளரான ஸ்ரீமதி கிருஷ்ணவேணி அம்மையார், அதனை பஜனாலயமாக்கி, அங்கு ஸ்ரீ ஸீதா—ராமர்களின் விக்ரஹத்தையும், ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் பிம்பத்தையும் பிரதிஷ்டை செய்து நித்திய பூஜைகள் நடத்துவதற்கு அரும்பாடு பட்டு வருகிறார். தமது பங்கில் ஏராளமான நிதியம் இத்திருப்பணிக்காக அவர் வழங்கியுள்ளார். அரசாங்க அறக்கட்டளைத் துறையிலிருந்தும் நிதி உதவிக்கு வாக்குப் பெற்றிருக்கிறார். இருப்பினும் சுமார் ஒரு லட்ச ரூபாய் தேவைப்படும் இந்தப் புண்ணிய கைங்கரியத்துக்குப் பொதுமக்களின் திரவிய சகாயம் நிறையத் தேவைப்படுகிறது. உத்தமமான திருப்பணியில் பங்குபெற நிதி அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ பி. இ. ஆள்வார், 2, கென்னட்ஸ் லேன், லக்ஷ்மி மோஹன் வாட்ஜ், எழும்பூர், சென்னை—8.

சாமானியப் பொதுத் தேர்தலாகக் கருத வில்லை. பல கட்சிகள் பல கொள்கைகளைக் கூறி அவற்றுக்கு மக்களின் ஒப்புதலைக் கேட்கும் வழக்கமான பொதுத் தேர்தலைப் போன்றது அல்ல இது. பிரதமர் அரசியல் சாஸனத்தைக் கிழித் தெறிந்து விட்டு மக்களின் சுதந்திரங்களை அழித்து, ஜனநாயகத்துக்குப் பதில் சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கு நாடு ஒப்புக் கொள்கிறதா என்ற ஒரே அம்சத்துக்காக நடக்கும் பொதுஜன வாக்கெடுப்பே இது எனக் கருதுகிறேன்.



சென்னை மியூஸிக் அகாடமியின் இவ்வருட இசை மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் அவர்களுக்கு 'சதஸ்' வைபவத்தில் மைசூர் கவர்னர் ஸ்ரீ தர்மவீரா அவர்கள் 'ஸங்கீத கலாநிதி' விருதினை வழங்கினார்.

★

ஏற்றுமதி செய்வதற்காக மதுபான வகைகளைத் தயாரிக்கத் தமிழக அரசாங்கம் செய்துள்ள உத்தேசம் அரசியலைப் பற்றிய விஷயம் அல்ல; இது நன்னெறியைக் குறித்த விஷயமே ஆகும். நம் ராஜ்யத்தில் உள்ளவர்கள் மது அருந்தலாகாது எனக் கருதும் அரசாங்கம், மதுவைத் தயாரித்துப் பிறர் குடிப்பதற்காக அனுப்பி வைப்பது நெறியற்ற செயல்.

உணவுப் பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்குவதே இன்று அவசியம். உணவுக்கு உபயோகமாகும் பழங்களையும், தானியங்களையும், கரும்பையும் போதைப் பொருளான மதுவின் உற்பத்திக்குத் திருப்புவது தகாது.

நன்னெறிக் கொள்கைகளை மறந்துவிட்டாலும் — உணவுப் பொருளைப் போதைப் பொருளாக்கச் செலவிடுவதை மறந்தாலும் — வெறும் வியாபார அடிப்படையில் பார்த்தால்கூட இங்கு மது உற்பத்தித் தொழில் படுதோல்வியே அடையும். அந்நிய நாட்டு மது வகைகளுடன் நாம் போட்டியிட்டு, லாபகரமாகத் தொழில் நடத்த எண்ணுவது அறிவீனம்.

★

'ஹிந்து'ப் பத்திரிகை (டிச. 29) கூறுவது வருமாறு:

> காங்கிரஸ் பிளவுண்டதிலிருந்து மக்களின் பெயரைச் சொல்லியே ஏராளமான காரியங்களைச் செய்தாகி விட்டது. இப்போது அந்த மக்களே தங்கள் கருத்தைச் சொல்லத் தருணம் வந்திருக்கிறது. கொள்கைகளிலும் திட்டங்களிலும் மட்டுமின்றி, இவற்றை அமுல் செய்வதில் பின்பற்றப்படும் அசாதாரணமான உபாயங்களிலும் மக்கள் கவனம் செலுத்தி அபிப்பிராயம் தெரிவிக்க இதுவே தருணம். சிறுபான்மை பலத்தில் நடத்தப்படும் சர்க்காரின் கண்மூடித்தனமான உபாயங்களைப் பார்த்து விட்டோம். முன்னுக்குப் பின் செய்த முரண்பாடுகளைப் பார்த்துவிட்டோம். சிறுபான்மை சர்க்கார் ஆட்சி பீடத்திலிருந்து இறங்காமலிருப்பதற்கே இக்காரியங்களில் அது ஈடுபட வேண்டியதாயிற்று. தேசம் எதிர்கொள்ள வேண்டிய பிரச்னைகளுக்கு வலுவும் ஸ்திரத் தன்மையும் வாய்ந்த சர்க்காரே தேவை. இன்று ஒவ்வொரு பிரஜையும் விவேகத்துடன் வோட்டுப் போட வேண்டும். மிகவும் கடினமான பாதையில் தேசத்தை முன்னேற்றியாக வேண்டும் என்பது அனைவரும் ஒப்புக் கொள்கிற விஷயம். இந்தப் பணியை விவேகத்துடனும், சக்தியுடனும் ஆற்றக் கூடியவர்களையே மக்கள் பார்லிமெண்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

வாக்காளர்களில் எண்பது சதவிகிதத்தினர் விஷயஞானமில்லாதவர்கள். 'ஹிந்து' எதிர்பார்ப்பதை இவர்களிடம் பெற முடியுமா என்பதே கேள்வி. தேர்தல் நிதி சேர்ப்பதிலும், வாக்காளர்களுக்கு இருக்கும் ஓரளவு விஷயஞானத்துக்குக் கரி பூசுவதிலும் பிரதமருக்கு வசதிகளும் அவகாசமும் அதிகம். பார்லிமெண்டு ஆட்சி முறையின் நல்ல அம்சங்களை யெல்லாம் அற்றுப் போகச் செய்யும் ஊழல் சக்திகள் நம் நாட்டில் தலை எடுத்துள்ள போதிலும், நல்லதே நடக்கும் என்ற நம்பிக்கையை நாம் விடாதிருப்போமாக!







1. ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் பஜகோவிந்த விஷ்ணு ஸஹஸ்ரநாம இசைத்தட்டை ஐ. நாவில் மனித உரிமை தினத்தன்று (டிஸம்பர் 10) பிரதம அதிகாரி ஸ்ரீ ஸி.வி. நரஸிம்மன் வெளியிட்டார். அமெரிக்காவில் இவ்விசைத் தட்டின் விற்பனை உரிமை பெற்ற 'பீடர்ஸ் இண்டர்நேஷனல்' தலைவர் ஸ்ரீ பந்தோஸ் இசைத்தட்டைப் பெற்றுக் கொண்டார். ஐ. நா. வில் இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியான ஸ்ரீ ஸென் அவ்வமயம் உடன் இருந்தார்.

2. ஸ்ரீமதி எம். எஸ்ஸின் முழு நேரக் கச்சேரியான மூன்று இசைத் தட்டுக்கள் சென்ற டிஸம்பர் 20ந் தேதி வெளியானதை ரஸிகர்கள் அறிவர்.



பம்பாயில் இந்தத் தொகுப்பை ஸங்கீத கலாநிதி செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாஸய்யர் வெளியிட்டார். டாக்டர் நாராயண மேனன் தலைமை தாங்கினார்.

3. டில்லியில் இசைத் தட்டுத் தொகுப்பை வெளியிட்டவர் ஸங்கீத கலாநிதி ஸ்ரீ டி. கே. ஜெயராமய்யர். ஸ்ரீ ஸி. வி. நரஸிம்மன் தலைமை வகித்தார்.

4. சென்னையில் ஸங்கீத கலாநிதி முடிகொண்டான் வெங்கட ராமய்யர் வெளியிட்டார். ஸ்ரீ டி. டி. கே. அவர்கள் தலைமை தாங்கினார். ஸ்ரீ அக்னிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியாரும், டாக்டர் வே. ராகவனும் பாராட்டுரை வழங்கினர்.

5. பெங்களூரில் வித்வான் ஸ்ரீ சென்னகேசவய்யா இசைத் தட்டுக்களை வெளியிட்டார். இவ்விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகிறார் ஸ்ரீ டி. வி. குண்டப்பா.



காயத்ரீ திருவிழா

தமிழ் நாட்டில் அனைவரும் பகவானைத் தியானித்து வழிபடும் நாட்கள் பொங்கல் வாரம். மக்களும் ஆடும் மாடும் பசுவும் காக்கையும் குருவியும் ஒன்றாகி ஆதித்த பகவானுக்கு பூஜை செலுத்தும் மூன்று நாட்கள் பொங்கல் விழாவாகும். சூரியனிடமிருந்து நாம் அனைத்தையும் பெறுகிறோம். ஜீவராசிகளைத்தும் மரம், செடி, கொடி எல்லாம் அவனிடமிருந்துதான் உயிருக்கு வேண்டியனவனைத்தையும் பெறுகின்றன. இது சமயக் கொள்கை மட்டிலுமல்ல, பௌதிக விஞ்ஞானத்தின் மூலம் காணும் உண்மையுமாகும்.

சர்வாச்சரிய மயமான ஆகாயத்தைப் போன்ற கோயில் வேறு இல்லை. அந்தக் கோயிலில் கண்ணைக் கூசும் ஜோதியாய் ஜொலிக்கும் சூரியனைப் போன்ற மூர்த்தி வேறு இல்லை. புலன்களுக்குப் புலனாகாத பரம் பொருளின் வியக்த ரூபம் ஆவான். பீஷ்ம பிதாமகர் சொல்லியிருக்கிறபடி பொங்கல் பண்டிகை ஆதித்தனை தியானிக்கும் காயத்ரீ மந்திரத்தின் விழாவாகும்.


ஓம் தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி.
தியோ யோநஹ் ப்ரசோதயாத்

ஆதித்தியனுடைய ஜோதியைத் தியானிக்கிறோம். அது நம் உள்ளங்களில் புகுந்து நற்கருமங்களில் நம்மைத் தூண்டுவதாகுக. இந்த ஆதித்தமூர்த்தி நம்முடைய பக்தியை எதிர்பார்க்கும் வெறும் லிங்கம் மட்டுமல்ல. சக்தி கொண்ட பரம்பொருளின் பிரதிநிதியே ஆகும். உணவு, ஆரோக்கியம், பலம், விவேகம் எல்லாவற்றுக்கும் மூலம் சூரியனே. இந்தப் பூமண்டலத்துக்கு அவனே பகவான்.





ஜாக்பாட் ஹவுஸ்



ஜாக்பாட் குதிரைப் பந்தயம் விளையாடி அதன் மேல் எழுந்த மாளிகைக் கதை அல்ல ஜாக்பாட் ஹவுஸ். ஒரு ஜோஸியர் குடும்பத்தைச் சுற்றி வரும் ஒரு கதைதான். குடும்பத்தைச் சுற்றி வருகிறது என்பதற்காகக் குடும்பக் கதை என்றும் கூறிவிட முடியாது. ஜோசியருக்குத் துடிப்பும் மிடுக்கும் எழிலும் மிக்க, சந்திரா என்று ஒரு பெண் இருக்கிறாள் என்பதற்காக இதை முழுவதும் காதற் கதை என்று முடிவு கட்டிவிட முடியாது. ஜோஸியர் வீட்டைச் சுற்றி ஆள் நடமாட்டம் அதிகம் இருக்கிறது என்பதற்காகக் குற்றங்களும் துப்புகளும் மலிந்த கதையோ என்று கணக்குப் போட்டால் அது தப்பாக முடியும்.

இப்படிப்பட்ட ஒரு சிறந்த(?) கதையை எக்ஸ்பிரஸ் மனமகிழ் மன்றத்தார் தேர்ந்தெடுத்து மேடை ஏற்றி யிருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு என்ன துணிச்சல் இருக்க வேண்டும்? அதற்காகத் 'துணிந்து புனைந்த சித்திரம்' என்று அடைமொழி கொடுத்து விடலாமா என்றால் முடியாது; அவர்களுடைய துணிச்சலுக்கு மெய்யான காரணம், நடிப்பாற்றல். இதை நம்பி இயக்குனர் பொறுப்பை ஏற்றாரே ஸ்ரீ பூர்ணம் விசுவநாதன். அவருடைய துணிச்சலுக்குக் காரணம் ஸ்ரீகேஸியின் நகைச்சுவை மிளிரும் வசனங்கள்.

எனவே எடுத்த எடுப்பிலேயே களை கட்டி விட்டது மேடை. ஜும் பாயாக வந்த திரு கிருஷ்ணராஜன் மேடை இலக்கணத்தை நன்றாய்ப் பயின்றவர் போல வெளுத்துக் கட்டினார்! ஜோஸியராக வந்த ஸ்ரீ கோவிந்தராஜன் நிஜமாக ஜாக்பாட் பந்தயத்துக்குப் போகிறவர்களுக்குக் கூட ஜோஸியம் கூறும் ஆற்றல் பெற்றவர் போலத் தோன்றுகிறது. ஏனென்றால் நல்ல வேஷப் பொருத்தத்தோடு மூத்து சாமி ஐயராகத் தோன்றிய ஸ்ரீ பா. சீனிவாசனுக்கும் பிறக்கப் போவது 'ஆணா பெண்ணா?' என்னும் பழைய நகைச்சுவையைப் புது மெருகு கூட்டி மயக்கி விட்டார் ரசிகர்களை! சந்திராவாக வரும் ஷோபாவின் நடிப்பிலே நயத்தைக் காண்கிறோம். ஆனந்த கபாலியாக வந்த திரு ராஜேந்திரன் தம் தோற்றத்திலே மிடுக்கைக் காட்டி மனத்தில் இடம் பெறுகிறார். கந்தராக வரும் பல்தேவ் தம் நடிப்பில் பழைமையும் புதுமையும் கலந்து சுவை கூட்டுகிறார். கார்த்திக்காக வரும் திரு வைத்தியலிங்கம் தம் குடுகுடு நடிப்பால் சிரிக்கவும் வைத்துச் சிந்திக்கவும் வைக்கிறார். இப்படி நடிப்புத் திறத்தால் ஜாக்பாட் ஹவுஸையே பாலித்திடும் எக்ஸ்பிரஸ் மனமகிழ் மன்றத்தார், மனம் வைத்தால் மேடைக் கலையில் மெருகுற முடியும்.

கிரிக்கெட்டில் மட்டுமா
அரசியல்?
அரசியலிலும்
கிரிக்கெட் உண்டு!



இம்மாதம் இரண்டாவது வாரத்தில் இந்தியாவுக்கு வருகிற பிரிட்டிஷ் பிரதமர் எட்வர்ட் ஹீத் ஒரு விளையாட்டு வீரருங்கூட. பாய்மரம் விரித்த படகோட்டுவதில் நிபுணர். இந்த வருஷத்தின் தலைசிறந்த பாய்மரப் படகோட்டி என்ற புகழ் பிரதமர் ஹீத்துக்குக் கிடைத்திருக்கிறது. லண்டன் படகோட்டக் கலை எழுத்தாளர்கள் அவருக்கு இந்தக் கௌரவத்தை வழங்கியிருக்கிறார்கள். சிட்னி -- ஹோபார்ட் என்ற பிரசித்திபெற்ற பந்தயத்தில் அவர் மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறார்.

1970ம் வருஷப் பொதுத் தேர்தலில் ஹீத் வெற்றி பெற்ற போது, கென்ட் கிரிக்கெட் கிளப்பின் தலைவர் -- கிரிக்கெட் மன்னர் காலின் கௌட்ரீ அவருக்கு ஒரு கிரிக்கெட் பந்தைப் பரிசாக அளித்தார். ஹீத்தின் தொகுதியான பெக்ஸ்லி, கென்டிலிருந்த தொகுதி. அவர் கென்டிலே பிறந்தவர்! அவரது கன்ஸர்வேடிவ் கட்சிக்கு மக்கள் சபையில் தேர்தலின் போது முப்பது இடங்கள் பெரும்பான்மையாகக் கிடைத்திருந்தன.

இக்காரணங்களால் அந்தப் பந்தில் "காப்டன் ஈ. ஆர். ஜீ. ஹீத் -- 30 'நாட் அவுட்'! அவருடைய கென்ட் கோஷ்டியின் அன்பளிப்பு" என்று பொறிக்கப்பட்டிருந்தது.



மோகினித் தீவு



அமரர்

கல்கி

அந்த இங்கிலீஷ் ஸினிமா கொஞ்சங்கூட நன்றாயில்லை. ''ஏண்டா அப்பா இங்கே வந்தோம்? காசைக் கொடுத்துத் தேளைக் கொட்டிக் கொண்ட கதையாயிருக்கிறதே!'' என்ற எண்ணம் உண்டாயிற்று.

அந்தப்படத்தில் குதிரைகள் குடல் தெறிக்க ஓடிக் கொண்டிருந்தன.

ஒரு மனிதனும் இன்னொரு மனிதனும் கத்திச் சண்டை போட்டார்கள்.

ஒரு யுவனும் ஒரு யுவதியும் காதல் புரிந்தார்கள்.

மறுபடியும் குதிரைகள் ஓடின.

இரண்டு மனிதர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டார்கள்.

ஒரு யுவனும் ஒரு யுவதியும் காதல் புரிந்தார்கள்.

குதிரைகள் எவ்வளவு வேகமாக ஓடினாலும் படம் மட்டும் மெள்ள மெள்ள நகர்ந்து கொண்டிருந்தது.

கத்திச்சண்டை பொய், துப்பாக்கிக் குண்டு பொய், காதலும் பொய்.

இந்த அபத்தத்தை எத்தனை நேரம் சகித்துக்கொண்டிருப்பது? எழுந்து போய்விடலாமா என்று தோன்றியது.

இந்தச் சமயத்தில் இடைவேளைக்காக விளக்குப் போட்டார்கள். சாதாரணமாக ஸினிமாக் கொட்டகைகளில் இடைவேளை வெளிச்சம் போட்டதும் பெரும்பாலான ரசிகர்கள் சுற்று முற்றும் திரும்பிப் பார்ப்பது வழக்கம். அதன் காரணம் என்னவென்பது அன்று எனக்கு விளங்கிற்று. ஸினிமாத் திரையில் உயிரற்ற பொம்மை முகங்களைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போன கண்கள் உயிருள்ள உண்மை மனிதர்களின் முகங்களைப் பார்க்க விரும்புவது இயல்புதானே? தெரிந்த முகம் ஏதேனும் தென்படுகிறதா என்று நானும் அன்றைக்குத் திரும்பிப் பார்த்தேன். இந்த உபயோகமற்ற ஸினிமாவைப் பார்க்க வந்த அசட்டுத்தனத்தை இன்னும் யாரேனும் ஓர் அறிமுகமான மனிதருடன் பகிர்ந்து கொள்வதில் சற்று நிம்மதி உண்டாகலாம் அல்லவா?

அவ்வாறு சுற்று முற்றும் பார்த்தபோது தெரிந்த முகம் ஒன்று உண்மையிலேயே தெரிந்தது. யார் என்பது உடனே புலப்படவில்லை. அந்த மனிதரும் என்னைப் பார்த்து ஒரு புன்னகை புரிந்தார். நான் பட்ட அவதியை அவரும் பட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றியது.



சமிக்ஞையினால் நாங்கள் முகமன் சொல்லிக் கொண்டிருந்த சமயத்தில், என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு ரஸிகர், ''சுத்தப் பாடாவதிப் படம்! ஒன்றேகால் ரூபாய் தண்டம்!'' என்று இரைச்சல் போட்டுக் கொண்டு எழுந்து போனார்.

சற்றுத் தூரத்திலிருந்து புன்னகை புரிந்த மனிதர் அந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது என்று பரபரப்புடன் எழுந்துவந்து என் பக்கத்து நாற்காலியில் உட்கார்ந்தார்.

''என்ன சேதி?'', ''என்ன சமாசாரம்?'' ''வீட்டில் எல்லோரும் சௌக்கியமா?'' ''படம் சுத்த மோசமாயிருக்கிறதே!'' என்று க்ஷேமலாபங்களை விசாரித்துக் கொண்டே, அந்த மனிதர் யாராயிருக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். பேச்சு வாக்கில்



பண்டித ஜவாஹர்லால் நேருவின் அறுபதாம் ஆண்டு பூர்த்தி விழாவை முன்னிட்டு "நேரு அபிநந்தன் கிரந்த்" என்னும் ஞாபகார்த்த வாழ்த்து நூல் ஒன்று ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் வெளியிடப் பட்டது. இந்த நூலை 1950 ஜனவரி 28ந்தேதி பாபு ராஜேந்திர பிரஸாத் ஜவாஹர்லாலிடம் சமர்ப்பித்தார். "நேரு அபிநந்தன்" புத்தகத்தில் பண்டித நேருவைப் பற்றிய புகழ்மாலைகளைத் தவிர இந்தியாவின் வெவ்வேறு பிராந்திய மொழிகளில் நூலாசிரியர்கள் எழுதிய கதைகள்—கட்டுரைகளும் வெளியிடப்பட்டன. மேற்படி புத்தகத்தின் பதிப்புக் குழு கேட்டுக் கொண்டதன் பேரில் "கல்கி" அவர்கள் தமிழ் நாட்டின் புராதனப் பண்பாட்டை விளக்கும் முறையில் எழுதியது மோகினித் தீவு என்னும் இக்கதை. இதன் ஆங்கில—ஹிந்தி மொழிபெயர்ப்புக்கள் நேரு அபிநந்தன் புத்தகத்தில் வெளியாயின.

"இப்போது எங்கே ஜாகை?" என்று கேட்டேன்.

"ஜாகையாவது, மண்ணாங்கட்டியாவது? ஜாகை கிடைக்காதபடியினாலே தான் சினிமாக் கொட்டகையிலாவது பொழுதைப் போக்கலாம் என்று வந்தேன். இங்கேயும் இந்த லட்சணமாயிருக்கிறது. மறுபடியும் பர்மாவுக்கே திரும்பிப் போய்விடலாமா என்றுகூட ஒவ்வொரு சமயம் தோன்றுகிறது" என்றார்.

பர்மா என்ற வார்த்தையைக் கேட்டதும் அந்த மனிதரைப் பற்றி எனக்கு நினைவு வந்து விட்டது.

அந்த மனிதர் என் பழைய சிநேகிதர். கற்பனையும் ரஸனையும் படைத்தவர். கவிதையிலும் காவியத்திலும் முழுகியவர். அப்படிப்பட்ட மனிதர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவது அபூர்வம்தானே? பாரத நாட்டில் பிழைக்க வழியில்லை என்று கண்டு பர்மாவுக்குப் போனார். இவருடைய அதிருஷ்டம் அங்கேயும் தொடர்ந்து சென்றது. இவர் போய்ச் சேர்ந்த சில நாளைக்கெல்லாம் ஜப்பான் யுத்தம் மூண்டது. ஜப்பானிய சைன்யங்கள் மலாய் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டு பர்மாவின் மீது படையெடுத்து வந்தன. ஜீவனோபாயம் தேடிப் பர்மாவுக்குச் சென்ற சிநேகிதர் ஜீவன் பிழைத்தால் போதும் என்று தாய்நாட்டுக்குப் புறப்பட வேண்டியதாயிற்று. தப்பிப் பிழைத்தவர் சென்னை வந்து சேர்ந்த புதிதில் ஒரு தடவை அவரைப் பார்த்தேன். அந்தச் சமயம் சென்னை நகரைக் காலி செய்துவிட்டுச் சென்னைவாசிகள் ஓடிக் கொண்டிருந்த சமயம். ஆகையால் அப்போது அவரிடம் அதிகம் பேசுவதற்கு முடியவில்லை. அன்று பிரிந்தவரை இன்றைக்குச் சினிமாக் கொட்டகையில் பார்த்தேன். "வாழ்க சினிமா!" என்று வாழ்த்தினேன். ஏனெனில் 'பாஸ்கரக் கவிராய'ரிடம் பேசிக் கொண்டிருப்பதில் எனக்கு மிக்க பிரியம் உண்டு. கவிதா லோகத்தில் அடிக்கடி சஞ்சரித்துக் கொண்டிருந்தவராதலால் அவருக்குக் 'கவிராயர்' என்ற பட்டம் நண்பர் குழாத்தில் அளிக்கப்பட்டிருந்தது.

"நீங்கள் அதிர்ஷ்டசாலி! மகா யுத்தத்தின் மிக முக்கியமான அரங்கம் ஒன்றில் தாங்கள் யுத்தம் நடந்த காலத்தில் இருந்தீர்கள் அல்லவா? ஜப்பானிய விமானங்கள், வெடிகுண்டுகள், பீரங்கி வேட்டுகள் இவற்றின் சத்தத்தை யெல்லாம் உண்மையாகவே கேட்டிருப்பீர்கள் அல்லவா? நாங்கள் அதை யெல்லாம் சினிமாவில் பார்த்துக் கேட்பதுடன் திருப்தி யடைய வேண்டியிருக்கிறது. உங்கள் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!" என்றேன் நான்.

"தூரத்துப் பச்சை கண்ணுக்கு அழகு; தூரத்து வெடிச் சத்தம் காதுக்கு இனிமை!" என்றார் நண்பர்.

"அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"இவ்வளவு தூரத்தில் நீங்கள் பத்திரமாயிருந்தபடியால் என்னை அதிர்ஷ்டக்காரன் என்கிறீர்கள். நீங்களும் என்னுடன் இருந்திருந்தால் அதை அதிர்ஷ்டம் என்று சொல்வீர்களா என்பது சந்தேகம்தான்."

"சந்தேகமே இல்லை. நிச்சயமாக அது உங்கள் அதிர்ஷ்டம்தான். அந்த நெருக்கடியான சமயத்தில், ஜப்பானிய சைன்யம் ரங்கூனை நோக்கி வந்து கொண்டிருந்தபோது, பர்மாவில் உங்களுக்கு எத்தனையோ ரஸமான அநுபவங்கள் ஏற்பட்டிருக்கும். அவற்றையெல்லாம் உங்களிடம் கேட்க விரும்புகிறேன். ஒருநாள் சொல்ல வேண்டும்."

"ஒரு நாள் என்ன? இன்றைக்கே வேண்டுமானாலும் சொல்லுகிறேன்.. ஆனால் பர்மாவில் இருந்த சமயத்தில் எனக்கு அவ்வளவு ரஸமான அநுபவங்கள் ஏற்பட்டன என்று சொல்ல முடியாது. பர்மாவிலிருந்து இந்தியா

வுக்குக் கப்பலில் திரும்பி வந்தபோது தான் மிக அதிசயமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அதைக் கேட்டால் நீங்கள் ரொம்பவும் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்'' என்றார் பாஸ்கரர்.

''பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. கட்டாயம் அந்த அநுபவத்தைச் சொல்ல வேண்டும். அப்படியானால் நீங்கள் கப்பலிலா திரும்பி வந்தீர்கள்? கப்பலில் உங்களுக்கு இடம் கிடைத்ததே, அதுவே ஒரு அதிர்ஷ்டம் தானே?'' என்றேன் நான்.

இந்தச் சமயத்தில் ''சுத்தப் பாடாவதிப் படம்!'' என்று சொல்லிவிட்டுப் போன மனிதர் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவருடைய இடத்தில் உட்கார்ந்திருந்த என் சிநேகிதரைக் குத்துச் சண்டைக்காரனைப் போல் உற்றுப் பார்த்தார். நண்பரும் அஞ்சா நெஞ்சம் கொண்ட வீரனைப் போல் அவரைத் திரும்ப உற்றுப் பார்த்தார்.

நெருக்கடியைத் தீர்க்க எண்ணங் கொண்ட நான், ''இந்தப் பாடாவதிப் படத்தைப் பார்த்த வரையில் போதும்; வாருங்கள், போகலாம்!'' என்று கூறி நண்பரின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போனேன்.

கடற் கரைக்குப் போய்ச் சேர்ந்தோம். பூரண சந்திரனின் பால் நிலவில் கடற்கரையின் வெண் மணல்பரப்பு வெள்ளி முலாம் பூசி விளங்கியது. கடற்கரைச் சாலையில் வைரச் சுடர் விளக்குகள் வரிசையாக ஜொலித்தன. காசு செலவின்றிக் கடற் காற்று வாங்க வந்த பெரிய மனிதர்களின் மோட்டார் வண்டிகள் ஒவ்வொன்றாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தன. பௌர்ணமியானாலும் கடல் அலைகள் அன்றைக்கு அடங்கி ஒலித்துத் தம்புராவின் சுருதியைப் போல் இனிய நாதத்தை எழுப்பிக் கொண்டிருந்தன.

''பர்மாவிலிருந்து வருவதற்குத் தங்களுக்குக் கப்பலில் இடம் கிடைத்ததாகும்? அது ஓர் அதிர்ஷ்டம்தானே? தரை மார்க்கமாக வந்தவர்கள் பட்ட கஷ்டங்களைக் கேட்டால் அப்பப்பா! பயங்கரம்!'' என்றேன்.

''ஆம்; தரை மார்க்கமாகக் கிளம்பி வந்தவர்கள் எத்தனையோ கஷ்டப்பட்டார்கள். பலர் வந்து சேராமல் வழியிலேயே மாண்டு போனார்கள். தரை மார்க்கம் அவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்று தெரிந்துதான் நான் கால் நடைப் பிரயாணிகளுடன் கிளம்பவில்லை. கப்பலில் இடம் பெறுவதற்குப் பெரும் பிரயத்தனம் செய்தேன். கடைசியில் தூரத்தில் ஜப்பான் பீரங்கிக் குண்டுகள் சத்தம் கேட்கத் தொடங்கிய நேரத்தில் இரங்கூன் துறைமுகத்திலிருந்து கிளம்பிய கப்பல் ஒன்றில் எனக்கு இடம் கிடைத்தது. அந்தவரைக்கும் நான் அதிர்ஷ்டசாலிதான்!'' என்றார் நண்பர்.

மேலும் நான் தூண்டிக் கேட்டதன் பேரில் பாஸ்கர கவிராயர் அந்தக் கப்பல் பிரயாணக் கதையை விவரமாகக் கூறத் தொடங்கினார்:

முதல் அத்தியாயம்

இரங்கூனிலிருந்து புறப்பட்ட கப்பலில் இடம் கிடைத்த வரையில் நான் பாக்கியசாலிதான். சந்தேகம் இல்லை. ஆனால் அந்தக் கப்பலில் பிரயாணம் செய்ய நேர்ந்ததை ஒரு பாக்கியம் என்று சொல்ல முடியாது. நரகம் என்பதாக ஒன்று இருந்தால் அது கிட்டத்தட்ட அந்தக் கப்பலைப் போலத்தான் இருக்க வேண்டும். அது ஒரு பழைய கப்பல். சாமான் ஏற்றும் கப்பல். அந்தக் கப்பலில் இந்தத் தடவை நிறையச் சாமான்களை ஏற்றியிருந்ததோடு, 'ஐயோ! போகட்டும்!' என்று சுமார் ஆயிரம் ஜனங்களையும் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். பாரம் தாங்க மாட்டாமல் அந்தக் கப்பல் திணறியது. கப்பல் நகர்ந்தபோது பழைய பலகைகளும் இல்சுளும் வலி பொறுக்க மாட்டாமல் அழுதன. அதன் மீது பலமான காற்று அடித்த போது ஆயிரம் கட்டை வண்டிகள் நகரும்போது உண்டாகும் சத்தம் எழுந்தது. அந்தக் கப்பலில் குடிகொண்டிருந்த அசுத்தத்தையும் துர்நாற்றத்தையும் சொல்லி முடியாது. இப்போது நினைத்தாலும் குடலைப் பிடுங்கிக் கொண்டு வருகிறது. ஆயிரம் ஜனங்கள், — பல நாட்கள் குளிக்காதவர்கள் — உடம்பு வியர்வையின் நாற்றமும், தலைமயிர் சிக்குப் பிடித்த நாற்றமும், குழந்தைகள் அசுத்தம் செய்த நாற்றமும், பழைய ரொட்டிகள், ஊசிப் போன தின்பண்டங்களின் நாற்றமும், ''கடவுளே! எதற்காக மூக்கைப் படைத்தாய்!'' என்று கதறும்படி செய்தன.

கப்பலில் ஏறியிருந்த ஜனங்களின் பீதி நிறைந்த கூச்சலையும் ஸ்திரீகளின் சோகப் புலம்பலையும், குழந்தைகளின் காரணமில்லாத ஓலத்தையும் இப்போது நினைத்தாலும் உடம்பு நடுங்கு

கிறது. ஒவ்வொரு சமயம், ''இந்த மாதிரி ஜனங்கள் உயிர் பிழைத்து இந்தியா போய்ச் சேருவதிலே யாருக்கு என்ன நன்மை? இந்தக் கப்பல் கடலிலே மூழ்கிப் போய்விட்டால் கூட நல்லது தான்!'' என்று படுபாதகமான எண்ணம்கூட என் மனத்தில் தோன்றியது. உலக மெங்கும் பரவியிருந்த ராட்சத யுத்தத்தின் விஷக் காற்று இப்படி எல்லாம் அப்போது மனிதர்களின் உள்ளத்தில் கிராதக எண்ணங்களை உண்டு பண்ணி யிருந்தன.

இவ்விதம் இந்த அழகான கப்பலில் ஒரு நாள் பிரயாணம் முடிந்தது. மறு நாள் பிற்பகலில் கம்பியில்லாத் தந்தி மூலம் பயங்கரமான செய்தி ஒன்று வந்தது. ஒரு ஜப்பானிய 'குரூஸர்' அந்தப் பக்கமாக வந்து கொண்டிருக்கிறது என்பதுதான் அந்தச் செய்தி. கப்பலின் காப்டனுக்கு இப்படி ஒரு செய்தி வந்திருக்கிறது என்பது எப்படியோ அந்தக் கப்பலில் இருந்த அவ்வளவு பேருக்கும் சிறிது நேரத்துக்கெல்லாம் தெரிந்து போய்விட்டது. கப்பல் நாயகனுக்கு வந்த செய்தி ஒரே ஒரு 'குரூஸர்' கப்பலைப் பற்றியதுதான். கப்பல் பிரயாணிகளுக்கு அந்தச் செய்தி பரவிய போது ஒரு 'குரூஸர்' ஒரு பெரிய ஜப்பானிய கப்பற் படை ஆகிவிட்டது! ஸப்மரைன் என்னும் நீர்மூழ்கிகளும், டிஸ்ட்ராயர் என்னும் நாசகாரிகளும், டிரெட்நாட் கப்பல்களும், விமான தளக் கப்பல்களுமாகப் பேச்சு வாக்கில் பெருகிக்கொண்டே போயின. ஏற்கனவே பயப்பிராந்தி கொண்டிருந்த ஜனங்களின் நிலைமையை இப்போது சொல்ல வேண்டியதே யில்லை. இராவணன், மாண்டு விழுந்ததைக் கேட்ட இலங்கா புரிவாசிகளைப் போல் அவர்கள் அழுது புலம்பினார்கள்.

இதுகாறும் சென்னைத் துறை முகத்தை நோக்கிச் சென்ற கப்பல் இப்போது திசையை மாற்றிக்கொண்டு தெற்கு நோக்கிச் சென்றது. ஓர் இரவும் பகலும் பிரயாணம் செய்த பிறகு சற்றுத் தூரத்தில் ஒரு தீவு தென்பட்டது. பசுமை போர்த்த குன்றுகளும், பாறைகளும், வானளாவிய சோலைகளும் அந்தத் தீவில் காணப்பட்டன. திருமாலின் விசாலமான மார்பில் அணிந்த மரகதப் பதக்கத்தைப் போல் நீலக் கடலின் மத்தியில் அந்தப் பச்சை வர்ணத் தீவு விளங்கியது. மாலை நேரத்துச் சூரியனின் பசும் பொன் கிரணங்கள் அந்த மரகதத் தீவின் விருட்சங்களின் உச்சியைத் தழுவி விளையாடிய அழகைக் கம்பனையும் காளிதாஸனையும் போன்ற மகா கவிகள் வர்ணிக்க வேண்டும். எந்த நிமிஷத்தில் கப்பலின் மீது ஜப்பானியக் குண்டு விழுந்து கூண்டோடு கைலாச மாகக் கடலில் மூழ்கப் போகிறோமோ என்ற பீதி கொண்டிருந்த நிலையிலேகூட அந்தத் தீவின் அழகைப் பார்த்த உடனே பிரயாணிகள் 'ஆஹா'காரம் செய்தார்கள்.

கப்பல் தீவை நெருங்கிச் செல்லச் செல்ல, பிரயாணிகளுக்கு மறுபடியும் கவலை உண்டாயிற்று. அந்தத் தீவின் மேலே கப்பல் மோதிவிடப் போகிறதே என்றுதான். ஆனால் அந்தப் பயம் சடுதியில் நீங்கிற்று. தீவின் ஒரு பக்கத்தில் கடல் நீர் உள்ளே புகுந்து சென்று ஓர் இயற்கைத் துறைமுகத்தைச் சிருஷ்டித்திருந்தது. அந்தக் கடல் நீர் ஓடைக்குள்ளே கப்பல் புகுந்து சென்றது. சிறிது நேரத்துக்கெல்லாம் கப்பல் நின்றது. நங்கூரமும் பாய்ச்சியாயிற்று. கப்பல் நின்ற இடத்திலிருந்து பார்த்தால் நாலா புறமும் பச்சைப் போர்வை போர்த்திய குன்றுகள் சூழ்ந்திருந்தன. வெளியிலே அகண்ட சமுத்திரத்தில் பிரயாணம் செய்யும் கப்பல்களுக்கு அந்த இயற்கைத் துறைமுகத்துக்குள்ளே கப்பல் நங்கூரம் பாய்ச்சி நிற்பது தெரிய முடியாது.

கப்பல் நின்று சிறிது நேரம் ஆனதும் நானும் இன்னும் சிலரும் கப்பல் நாயகரிடம் போனோம். நிலைமை எப்படி என்று விசாரித்தோம். ''இனி அபாயம் ஒன்றுமில்லை; கம்பியில்லாத் தந்தியில் மறுபடியும் செய்தி வரும் வரையில் இங்கேயே நிம்மதியா யிருக்கலாம்'' என்றார் காப்டன். பிறகு அந்தத் தீவைப் பற்றி விசாரித்தோம். அதற்குப் பெயர் 'மோகினித் தீவு' என்று காப்டன் கூறி இன்னும் சில விவரங்களையும் தெரிவித்தார். இலங்கைக்குத் தென் கிழக்கே மூன்று நாள் பிரயாண தூரத்தில் அந்தத் தீவு இருக்கிறது. அநேகருக்கு அத்தகைய தீவு ஒன்று இருப்பதே தெரியாது. தெரிந்தவர்களிலும் ஒருசிலருக்குத்தான் இம்மாதிரி அதற்குள்ளே கடல் புகுந்து சென்று இரகசிய இயற்கை ஹார்பர் ஒன்றை சிருஷ்டித்திருக்கிறது என்று தெரியும். அது சின்னஞ் சிறிய தீவு தான். ஒரு கரையிலிருந்து இன்னொரு கரைக்கு மூன்று காத தூரத்துக்கு மேல் இராது. தற்சமயம் அந்தத் தீவில் மனிதர்கள் யாரும் இல்லை. ஒரு காலத்தில் நாகரிகத்தில் சிறந்த மக்கள் அங்கே வாழ்ந்திருக்க வேண்டும் என்பதற்கான சின்னங்கள் பல இருக்கின்றன. அஜந்தா எல்லோரா, மாமல்லபுரம் முதலிய இடங்களில் உள்ளவை போன்ற பழைய காலத்துச் சிற்பங்களும், பாழடைந்த கோயில்களும் மண்டபங்களும் அந்தத்

தீவில் இருக்கின்றன. வளம் நிறைந்த அந்தீவில் மக்களைக் குடியேற்றுவதற்குச் சில முயற்சிகள் செய்யப்பட்டன. அவை ஒன்றும் பலன் தரவில்லை. சில நாட்களுக்கு மேல் அந்தத் தீவில் வசிப்பதற்கு எவரும் இஷ்டப்படுவதில்லை. ஏதேதோ கதைகள் பல அந்தீவைப் பற்றிச் சொல்லப் படுகின்றன.

''அதோ தெரிகிறதே, அந்தக் குன்றின் மேல் ஏறிப் பார்த்தால் நான் சொன்ன பழைய காலத்துச் சிற்ப அதிசயங்களை யெல்லாம் பார்க்கலாம். இதற்கு முன்னால் ஒரே ஒரு தடவை நான் அக் குன்றின் மேல் ஏறிப் பார்த்திருக்கிறேன். ஆனால் தீவுக்குள்ளே போய்ப் பார்த்தது கிடையாது!'' என்றார் கப்பல் நாயகர்.

இதைக் கேட்டதும் அந்தக் குன்றின் மேல் ஏறிப் பார்க்க வேண்டும் என்கிற அடக்க முடியாத ஆர்வம் என் மனத்தில் ஏற்பட்டு விட்டது. பழைய காலத்துச் சிற்பம், சித்திரம் இவற்றில் எனக்கு உள்ள சபலம்தான் உங்களுக்குத் தெரியுமே! காப்டன் கூறிய விவரங்களைக் கேட்ட இன்னும் சிலரும் என் மாதிரியே ஆசை கொண்டதாகத் தெரிந்தது. எல்லாருமாகச் சேர்ந்து கப்பல்நாயகரிடம் ''இங்கே கப்பல் வெறுமனே தானே நின்று கொண்டிருக்கிறது? படகிலே சென்று அந்தக் குன்றின் மேல் ஏறிப் பார்த்து விட்டு வரலாமே?'' என்று வற்புறுத்தினோம். கப்பல் நாயகரும் கடைசியில் எங்கள் விருப்பத்துக்கு இணங்கினார்.

''இப்போதே மாலையாகி விட்டது. சீக்கிரத்தில் திரும்பி வந்துவிட வேண்டும். நான் இல்லாத சமயத்தில் ஏதாவது முக்கியமான செய்தி வரலாமல்லவா?'' என்று சொல்லி விட்டு, கப்பலில் இருந்த படகுகளில் ஒன்றை இறக்கச் சொன்னார். காப்டனும் நானும் இன்னும் நாலைந்து பேரும் படகில் ஏறிக் கொண்டோம். தாம் இல்லாதபோது ஏதேனும் செய்தி வந்தால் கொடி சமிக்ஞை மூலம் அதைத் தெரியப்படுத்துவது எப்படி என்று தம்முடைய உதவி உத்தியோகஸ்தரிடம் காப்டன் தெரிவித்துவிட்டுப் படகில் ஏறினார்.

அந்த இடத்தில் கொந்தளிப்பு என்பதே இல்லாமல் தண்ணீர்ப் பரப்பு தகடு போல் இருந்தது. படகை வெகு சுலபமாகத் தள்ளிக் கொண்டு போய்க் கரையில் இறங்கினோம். கரையோரமாகச் சிறிது தூரம் நடந்து சென்ற பிறகு வசதியான ஓர் இடத்தில் குன்றின் மீது ஏறினோம். குன்றின் உயரம் அதிகம் இல்லை. சுமார் ஐந்நூறு அல்லது அறுநூறு அடிதான் இருக்கலாம். என்றாலும் சரியான பாதை இல்லாதபடியால் ஏறுவதற்குச் சிரமமாகவே இருந்தது. மண்டி வளர்ந்திருந்த செடிகள் கொடிகளுக்குள்ளே புகுந்து அவற்றைக் கையால் ஆங்காங்கே விலக்கி விட்டுக் கொண்டு ஏற வேண்டியிருந்தது. ''முன்னே நான் பார்த்ததற்கு இப்போது காடு அதிகமாக மண்டிவிட்டது'' என்றார் கப்பல் நாயகர். நல்ல வேளையாக அப்படி மண்டியிருந்த செடிகள் முட்செடிகள் அல்ல. ஆகையால் அரை மணி நேரத்துக்குள் குன்றின் உச்சிக்குப் போய்ச் சேர்ந்தோம்.

சூரியன் மறையும் தருணம். மஞ்சள் வெயிலின் கிரணங்கள் இன்னமும் அந்தப் பச்சைத் தீவின் உச்சிச் சிகரத்தின் மீது விழுந்து அதற்குப் பொன் மகுடம் சூட்டிக் கொண்டிருந்தன.

''அதோ பாருங்கள்!'' என்றார் கப்பல் நாயகர்.

அவர் சுட்டிக்காட்டிய திசையை நோக்கினோம். பார்த்த கண்கள் பார்த்தபடியே அசைவின்றி நின்றோம். 'திகைத்தோம்', 'ஸ்தம்பித்தோம்', 'ஆச்சரியக் கடலில் மூழ்கினோம்' என்றெல்லாம் சொன்னாலும், உள்ளபடி சொன்னதாகாது. இந்த உலகத்தை விட்டு வேறோர் அற்புதமான சொப்பன லோகத்துக்குப் போய்விட்டோம் என்று சொன்னால், ஒரு வேளை பொருத்தமாயிருக்கலாம். வரிசை வரிசையாக விஸ்தாரமான மணி மண்டபங்களும், கோவில் கோபுரங்களும், ஸ்தூபங்களும், விமானங்களும் கண்ணுக்கு எட்டிய தூரம் காட்சி அளித்தன. பர்மாவில் உள்ளவை போன்ற புத்தர் கோயில்கள், அஜந்தாவில் உள்ளவை போன்ற புத்த விகாரங்கள், தமிழகத்தில் உள்ளவை போன்ற விஸ்தாரமான பிராகார மதில்களுடன் கூடிய கோயில்கள், வானளாவிய கோபுரங்கள், தேர்களைப் போலும், ரதங்களைப் போலும் குன்றுகளைக் குடைந்து அமைத்த ஆலயங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள், ஸ்தூபி வைத்த விமானங்கள், ஸ்தூபியில்லாத மாடங்கள், பாறைகளில் செதுக்கிய அபூர்வமான சிற்பங்கள், நெடிய பெரிய சிலைகள், — ஆகா! அவ்வளவையும் பார்ப்பதற்கு ஆண்டவன் இரண்டே கண்களைக் கொடுத்திருப்பது எவ்வளவு பெரிய அநியாயம் என்று தோன்றியது.

அந்தக் காட்சியைப் பார்க்கப் பார்க்க ஒரு பக்கம் சந்தோஷமாயிருந்தது. இன்னொரு பக்கத்தில் காரணம் தெரியாத மனச் சோர்வும் உற்சாகக் குறைவும் ஏற்பட்டன. — 'காரணந்

தெரியாத' என்று சொன்னேனா? தவறு! தவறு! — காரணம் தெளிவாகவே இருந்தது. அந்த அதிசயச் சிற்பங்கள் எல்லாம் மிக மிகப் பழைமையானவை; பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் எந்த மகாபுருஷர்களாலோ கட்டப்பட்டவை; நெடுங்காலமாகப் பழுது பார்க்கப் படாமலும் செப்பனிடப்படாமலும் கேட்பாரற்றுக் கிடந்து வருகிறவை! நாலாபுறமும் கடலில் தோய்ந்து வரும் உப்புக் காற்றினால் சிறிது சிறிதாகத் தேய்ந்து மழுங்கிப் போனவை. ஒரு காலத்தில் இந்தத் தீவில் வாழ்ந்த மக்கள் குதூகலமாயும், கோலாகலமாயும், கலைப் பண்பு நிறைந்த வாழ்க்கை நடத்தியிருக்க வேண்டும். இப்போதோ அத்தீவு ஜன சூனியமாக இருக்கிறது. வௌவால்களும், நரிகளும், எலிகளும், பெருச்சாளிகளும் அந்த மண்டபங்களில் ஒருவேளை வாசம் செய்யக் கூடும். அந்தத் தீவைப் பார்த்தவுடன் உண்டாகிய குதூகலத்தைக் குறைத்து மனச் சோர்வை உண்டாக்குவதற்கு இந்த எண்ணம் போதாதா....?

சற்று நேரம் நின்ற இடத்தில் நின்று பார்த்த பிறகு எங்களில் ஒருவர், தீவின் உட்புறம் சென்று மேற்கூறிய சிற்ப அதிசயங்களையெல்லாம் அருகிலே போய்ப் பார்த்துவிட்டு வர வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தார். யோசனையை நான் ஆமோதித்தேன். ஆனால் கப்பல் நாயகர் அதற்கு இணங்கவில்லை. "இராத்திரியில் இந்தத் தீவில் தங்குவது, உசிதமில்லை. மேலும், நாம் சீக்கிரம் கப்பலுக்குத் திரும்பாவிட்டால் கப்பலில் உள்ள பிரயாணிகள் வீணாகப் பீதி கொள்வார்கள். அதனால் ஏதேனும் விபரீதம் விளைந்தால் யார் ஜவாப்தாரி? கூடவே கூடாது! வாருங்கள், போகலாம்!" என்றார்.

அவர் கூறியபடியே நடந்து காட்டினார். அவரைப் பின்பற்றி மற்றவர்களும் போனார்கள். நானும் சிறிது தூரம் அவர்களைத் தொடர்ந்து போனேன். ஆனால் போவதற்கு என் உள்ளம் இணங்கவில்லை. ஏதோ ஒரு மாய சக்தி என்னைப் போகவொட்டாமல் தடுத்தது. ஏதோ ஒரு மர்மமான குரல் என் அகக் காதில், 'அப்பனே! இந்த மாதிரி சந்தர்ப்பம் உன் ஆயுளில் இனி ஒரு முறை கிடைக்குமா? அந்த மூடர்களைப் பின் தொடர்ந்து நீயும் திரும்பிப் போகிறாயே?' என்று சொல்லிற்று. குன்றின் சரிவில் அவர்கள் இறங்கத் தொடங்கிய பிறகு நான் ஒரு பெரிய மரத்தின் பின்னால் மறைந்து நின்று கொண்டேன்.

அது அப்படி ஒன்றும் பிரமாதமான விஷயம் இல்லை. இங்கிருந்து சத்தம் போட்டுக் கூப்பிட்டால் கப்பலில் உள்ளவர்களுக்குக் காது கேட்டுவிடும்.

இராத்திரி எப்படியும் கப்பல் கிளம்பப் போவதில்லை. "பொழுது விடிந்த பிறகுதான் இனிப் பிரயாணம்" என்று கப்பல் நாயகர் சொல்லிவிட்டார். பின் எதற்காக அந்த நரகத்தில் ஓர் இரவைக் கழிக்க வேண்டும்? அப்பப்பா! அந்தக் கப்பலில் எழும் துர்நாற்றமும், பிரயாணிகளின் கூச்சலும்! — அதையெல்லாம் நினைத்தாலே குடலைக் குமட்டியது. அந்தக் கப்பலுடனே ஒப்பிடும் போது இந்தத் தீவு சொர்க்கத்துக்குச் சமானமல்லவா? தீவில் துஷ்ட மிருகங்களே இல்லை என்று கப்பல் நாயகர் நிச்சயமாய்ச் சொல்லியிருக்கிறார். பின் என்ன பயம்? சிறிது நேரத்துக்கெல்லாம் பூரண சந்திரன் உதயமாகிவிடும். பால் நிலவில் அந்தத் தீவின் அற்புதங்கள் மேலும் சோபை பெற்று விளங்கும் — இவ்விதமெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டே மரத்தின் பின்னால் மறைந்து நின்றேன்.

போனவர்கள் படகில் ஏறினார்கள். கயிற்றை அவிழ்த்துவிட்டார்கள். படகு கொஞ்ச தூரம் சென்றது. அப்புறம் யாரோ நான் படகில் இல்லை என்பதைக் கவனித்திருக்க வேண்டும். படகு நின்றது. காப்டனும் மற்றவர்களும் சர்ச்சை செய்யும் சப்தமும் கேட்டது. மறுபடியும் படகு இந்தக் கரையை நோக்கி வந்தது. என் நெஞ்சு 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. கரை ஓரமாகப் படகு வந்து நின்றதும் கையைத் தட்டினார்கள்; உரத்த குரலில் சத்தம் போட்டுக் கூப்பிட்டார்கள். காப்டன் கைத் துப்பாக்கியை எடுத்து ஒரு தடவை வெடி தீர்த்தார். மேலும் சிறிது நேரம் காத்துக் கொண்டிருந்தார்கள். நானோ அசையவில்லை. மறுபடியும் படகு நகரத் தொடங்கிக் கப்பலை நோக்கிச் சென்றது. 'அப்பாடா!' என்று நான் பெரு மூச்சு விட்டேன்.

பிறகு அந்த மரத்தின் மறைவிலிருந்து வெளியில் வந்தேன். அந்தக் குன்றிலேயே மிக உயரமான சிகரம் என்று தோன்றிய இடத்தை நோக்கி நடந்தேன். இதற்குள் சூரியன் அஸ்தமித்து நன்றாய் இருட்டி விட்டது. சிகரத்திலிருந்து கீழே பார்த்தேன். கோபுரங்கள் மண்டபங்கள் எல்லாம் இருட்டில் மறைந்திருந்தன. "நல்லது; சந்திரன் உதயமாகி வரட்டும்!" என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டு

உட்கார்ந்தேன். அந்தத் தீவின் சரித்திரம் யாதாயிருக்கும் என்று மனத்துக்குள் ஏதேதோ கற்பனை செய்து கொண்டிருந்தேன்.

இத்தனை நேரமும் காற்றே இல்லாமலிருந்தது. இப்போது தென் திசையிலிருந்து குளிர் பூந்தென்றலாக வீசத் தொடங்கியது. 'பூந்தென்றல்' என்று சொன்னேனல்லவா? அது உண்மையான வார்த்தை. ஏனெனில், அந்த இனிய காற்றில் மல்லிகை, பாரிஜாதம், பன்னீர், செண்பகம் ஆகிய மலர்களின் சுகந்தம் கலந்து வந்தது. சற்று நேரத்துக்குப் பிறகு பூவின் மணத்தோடு அகில் புகை — சாம்பிராணிப் புகை — சந்தனத் தூள் புகையின் மணமும் சேர்ந்து வரத் தொடங்கியது.

இந்த அதிசயத்தைப் பற்றி நான் எண்ணிக் கொண்டிருக்கையில், மற்றோர் அதிசயம் ஏற்பட்டது. மாலை நேரங்களில் ஆலயங்களில் அடிக்கப்படும் ஆலாட்ச மணியின் சத்தம் வருவது போலக் கேட்டது. மணிச் சத்தம் எங்கிருந்து வருகிறது என்ற வியப்புடன் நாலுபுறமும் நோக்கினேன். ஆகா! அந்தக் காட்சியை என்னவென்று சொல்வேன்? பூரண சந்திரன் கீழ்வானத்தில் உதயமாகிச் சிறிது தூரம் மேலே வந்து அந்தத் தீவின் கீழ்த் திசையிலிருந்த மரங்களின் உச்சியில் தவழ்ந்து தீவின் பள்ளத்தாக்கில் பால் நிலவைப் பொழிந்தது. அந்த மோகன நிலவொளியில் முன்னே நான் சூரிய வெளிச்சத்தில் பார்த்த கோயில் கோபுரங்கள், புத்த விஹாரங்கள், மணி மண்டபங்கள், ஸ்தூபங்கள், விமானங்கள் எல்லாம் நேற்றுத்தான் நிர்மாணிக்கப்பட்டவை போலப் புத்தப் புதியனவாகத் தோன்றின. பல நூறு வருஷத்துக் கடற்காற்றில் அடிபட்டுச் சிதிலமாகிப் போன பழைய காலத்துச் சிற்பங்களாக அவை தோன்றவில்லை.

அந்த அற்புதக் காட்சியும், ஆலாட்ச மணி ஓசையும், மலர்களின் மணத்துடன் கலந்து வந்த அகில் சாம்பிராணி வாசனையும்,—இவையெல்லாம் உண்மைதானா அல்லது சித்தப் பிரமையா என்று நான் சிந்தித்துக் கொண்டிருக்கையில், இதுவரை பார்த்த அதிசயங்களைக் காட்டிலும் பெரிய அதிசயம் ஒன்றைக் கண்டேன். 'ஜனசஞ்சாரமற்ற நிர்மானுஷ்யமான தீவு' என்றல்லவா கப்பல் நாயகர் சொன்னார்? அந்தத் தீவின் உட்பகுதியிலிருந்து — சிற்பங்களும் சிலைகளும் இருந்த பகுதியிலிருந்து இரண்டு பேர் வந்து கொண்டிருந்தார்கள். நான் இருந்த திசையை நோக்கியே அவர்கள் வந்தார்கள். நான் இருப்பதைப் பார்த்து விட்டுத்தான் வருகிறார்களோ என்று தோன்றியது. சீக்கிரமாகவே குன்றின் அடிவாரத்தை அடைந்து அதில் நான் இருந்த சிகரத்தை நோக்கி ஏறத் தொடங்கினார்கள். அதைப் பார்த்ததும் எனக்கு முதலில் ஓட்டம் எடுக்கலாமா என்று தோன்றியது. ஆனால் எங்கே ஓடுவது? எதற்காக ஓடுவது? தண்ணீர்க் கரை ஓரம் ஓடிச் சென்று கூச்சல் போடலாம். கூச்சல் போட்டால் கப்பலில் உள்ளவர்கள் வருவார்களா? என்ன நிச்சயம்?

இதற்குள் கொஞ்சம் தைரியமும் பிறந்து விட்டது. ''எதற்காக ஓட வேண்டும்?'' என்றும் தோன்றிவிட்டது. ஓட யத்தனித்திருந்தாலும் பயன் விளைந்திராது. என் கால்கள் ஓடும் சக்தியை இழந்து நின்ற இடத்திலேயே ஊன்றிப் போய்விட்டன. குன்றின்மேல் ஏறி வருகிறவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தேன். ஒரு கணமும் என் கண்களை அவர்களிடமிருந்து அகற்ற முடியவில்லை. அவர்கள் யார், இங்கே எப்போது வந்தார்கள், எதற்காக வந்தார்கள், எவ்விதம் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்றெல்லாம் தெரிந்து கொள்வதில் அவ்வளவு ஆர்வம் எனக்கு உண்டாகி விட்டது.

சில நிமிஷங்களுக்கெல்லாம் அவர்கள் அருகில் நெருங்கி வந்து விட்டார்கள். இருவரும் கை கோர்த்துக் கொண்டு நடந்து வந்தார்கள். அவர்களில் ஒருவர் ஆடவர்; இன்னொருவர் பெண்மணி. இருவரும் நவயௌவனப் பிராயத்தினர். மன்மதனையும் ரதியையும் ஒத்த அழகுடையவர்கள். அவர்கள் உடுத்தியிருந்த ஆடைகளும் அணிந்திருந்த ஆபரணங்களும் மிக விசித்திரமாயிருந்தன. ஜாவாத் தீவிலிருந்து நடனம் ஆடும் கோஷ்டியார் ஒரு தடவை தமிழ் நாட்டுக்கு வந்திருந்தார்களே, பார்த்ததுண்டா? அம்மாதிரியான ஆடை ஆபரணங்களை அவர்கள் தரித்திருந்தார்கள்.

நான் நின்ற இடத்துக்கு அருகில் மிக நெருக்கமாக அவர்கள் நெருங்கி வந்தார்கள். என் முகத்தை உற்றுப் பார்த்தார்கள். நான் அணிந்திருந்த உடையை உற்றுப் பார்த்தார்கள். என் மனத்தில் ஆயிரம் கேள்விகள் எழுந்தன. அவர்களைக் கேட்பதற்குத்தான். ஆனால் ஒரு வார்த்தையாவது என்னுடைய நாவில் வரவில்லை.

முதலில் அந்த யௌவன புருஷன் தான் பேசினான். ''வாருங்கள், ஐயா! வணக்கம்!'' என்று நல்ல தமிழில் என்னைப் பார்த்துச் சொன்னான். என் உடம்பைப் புல்லரித்தது. (தொடரும்)

காலஞ்சென்ற ஸ்ரீ க்ரெஸ்ஸி ஏ. மாரிஸன் அவர்கள் விஞ்ஞான-வர்த்தக-சமூகத் துறைகளில் கியாதி பெற்ற ஓர் அமெரிக்கப் பேரறிஞர். காந்த அலைப் பிரதேசத்தில் ஆக்ஸிஜனையும் நைட்ரஜனையும் பிரிப்பதற்கு வழி கண்டுபிடித்தவர். இவர் நியூயார்க் விஞ்ஞான அகாடமியின் தலைவராக இருந்திருக்கிறார். கடவுள் உண்டு, கட்டாயம் உண்டு, கண்டிப்பாக உண்டு என்பதற்கு இந்தப் பிரபல விஞ்ஞானி ஏழு அழுத்தமான காரணங்களை இலக்கியச் சுவையுடன் விவரிக்கிறார்.



இறைவனை

நாம் இன்னமும் விஞ்ஞான யுகத்தின் உதய காலத்தில்தான் இருக்கிறோம். விஞ்ஞானத் துறையில் புதிதாகப் பரவி வரும் ஒவ்வோர் அறிவொளிக் கீற்றும் பேரொளி படைத்த ஒரு சிருஷ்டி கர்த்தாவின் கைத்திறனையே வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. டார்வின் காலத்திலிருந்து நாம் பிரம்மாண்டமான விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைச் செய்திருக்கிறோம். உண்மையைக் காண வேண்டும் என்பதில் எவ்விதச் சொந்தச் சார்பும் இன்றி எளிமையாகச் செல்வோமாயின், ஞானத்தில் வேரூன்றிய நம்பிக்கையுடன் முன்னேறுவோமாயின், இந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் மூலம் மேலும் மேலும் ஆண்டவன் இருக்கிறான் என்ற உணர்வினை நெருங்குவதாகவே தெரியும்.

என்னுடைய கடவுள் நம்பிக்கைக்கு ஏழு காரணங்களை விரல் விட்டு எண்ணிக் காட்ட முடியும்.

முதலாவது, சற்றும் பிழையற்ற கணித நியதியைக் கொண்டு, நமது இந்தப் பிரபஞ்சம் ஒரு மகத்தான, செயலாற்றல் பொருந்திய, பேரறிவால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டதென நிரூபிக்கலாம்.

ஒன்றிலிருந்து பத்துவரை இலக்கமிட்ட பத்து நாணயங்களை உங்கள் பாக்கெட்டில் போட்டுக் கொள்வதாக வைத்துக்கொள்வோம். பாக்கெட்டில் போட்டுக் கொண்டபின் அவற்றை நன்கு குலுக்குகிறீர்கள். பிறகு அவற்றை வெளியே எடுக்கையில் சரியாக ஒன்றிலிருந்து பத்து வரை வரிசையாக எடுக்க வேண்டும். 'ஒன்று' என்பதை முதலில் எடுப்பதற்கு நீங்கள் பத்து முறை ஒவ்வொரு நாணயமாக எடுத்தால் போதும். அவற்றுள் ஒன்று நிச்சயமாக ஒன்றும் இலக்கமிட்டதாகத்தான் இருக்கும். ஆனால் 'ஒன்று', 'இரண்டு' ஆகிய இரு நாணயங்களையும் வரிசை தப்பாமல் எடுக்க வேண்டுமாயின் நீங்கள் நூறு முறைகூட இரண்டிரண்டு நாணயங்களாக எடுத்தாக வேண்டியிருக்கும். 'ஒன்று', 'இரண்டு', 'மூன்று' ஆகிய மூன்று நாணயங்களையும் வரிசை தப்பாமல் எடுப்பதற்கு ஆயிரம் முறை எடுத்தாக நேரலாம். இப்படியே சொல்லிக் கொண்டு போனால், ஒன்றிலிருந்து பத்து வரை சகல நாணயங்களையும் வரிசை பிசகாமல் எடுப்பதற்கு நீங்கள் ஆயிரம் கோடி முறைகூட முயற்சி செய்ய வேண்டியிருக்கலாம். இது நம்ப முடியாத எண்ணிக்கை. ஆனால் கணித நிபுணர்கள் சொல்வார்கள்: இத்தனை கோடி வாய்ப்பு இருந்தால்தான் நிச்சயமாகப் பத்து நாணயங்களையும் வரிசைக் கிரமமாக எடுக்க இயலும் என்று.

இது ஒருபுறம் இருக்கட்டும். மனித வாழ்வும், பல்வேறு மிருகங்களின் வாழ்வும், பலப்பல தாவரங்களின் வாழ்வும் இந்த உலகத்தில் இசைவாக நடப்பதற்கு எத்தனையோ கண்டிப்பான தேவைகளைப் பூர்த்தி செய்தாக வேண்டியிருக்கிறது. பத்து நாணயங்களை வரிசைப்படுத்தி எடுப்பதற்கே ஆயிரம் கோடி வாய்ப்புத் தேவை எனில், மானுட — மிருக — தாவர வாழ்வுக்கான ஆயிரமாயிரம் தேவைகளை — ஒன்றோடொன்று சன்ன பின்னலாகத் தொடர்புண்ட தேவைகளை — கிரமமாகப் பூர்த்தி செய்வதற்கு வெறும் உயிரற்ற இயற்கையின் பரிணாமத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டால், எண்ணியும் பார்க்க முடியாத வாய்ப்பு இருக்க வேண்டும். இந்த 'வாய்ப்பு' ஏதோ ஒருமுறை மட்டும் நேராமல், யுக யுகாந்திரமாகத் தொடரவும் வேண்டும். எனவே இந்த நீண்ட கால வெள்ளத்தில் இத்தனை ஆயிரம் உயிரினங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதத்தில் இயற்கை 'வாய்ப்பு' ஒருகாலும் ஏற்பட்டிருக்க முடியாது என்பது திண்ணம்.

இன்று உலகம் தனது அச்சில் மணிக்கு ஆயிரம் மைல் விதம் தன்னைத் தானே சுற்றிக் கொள்கிறது. இதுவே ஆயிரத்துக்குப் பதில் நூறு மைலாக இருக்குமாயின் நமது இரவும் பகலும் இன்றிருப்பது போல் பத்து மடங்கு நீண்டவையாக இருக்கும். அதாவது மனித உடலின் உழைப்புக்கும் ஓய்வுக்கும் அந்த நீண்ட இரவும் பகலும் ஒரு விதத்திலும் சம்பந்தப்பட்டிராது. இன்றைய இரவைப் போல் பத்து மடங்கு நீண்ட இரவில் — அதாவது இன்றைய காலக் கணக்குப்படி ஐந்து முழு நாட்கள் முற்றிலும் இருளாகவே இருக்குமாயின் மனித வாழ்க்கை நடத்துவது எவ்வளவு சிரமமாக இருக்கும்?

அதுமட்டுமல்ல, இன்றைய பத்துப் பகல்கள் ஒரு பகலாயின் சூரிய வெப்பத்தில் நம் பயிர் பச்சைகள் அனைத்தும் எரிந்தே போய்விடும். பத்து இரவு ஓர் இரவாயின், அத்தனை வெப்பத்துக்கும் ஈடு கொடுத்துத் தவறிப்போய் ஏதேனும் ஒரு முளை தோன்றியிருந்தால்கூட அது அப்படியே குளிரில் உறைந்து செத்து விடும்.

மனித வாழ்வுக்கும், தாவர வாழ்வுக்கும் இவ்வளவு இசைவாக உலகம் தன் அச்சில் சுற்றுவது, உயிரற்ற இயற்கையால் ஏற்பட்டிருக்க முடியுமா? அல்லது திட்டமிடும் ஒரு பேரறிவின் இயக்கத்தால் இருக்குமா? நீங்களே சொல்லுங்கள்.

நம்புவதற்கு ஏழு காரணங்கள்

சூரியனின் மேல் பரப்பில் நிலவும் உஷ்ணம் 12000° (பாரன்ஹீட்) ஆகும். இன்று நம்முடைய உலகம் அதிலிருந்து சுமார் ஒன்பது கோடி மைல் தள்ளியிருப்பதால் இந்த நிரந்தரமான நெருப்புக் கோளம் நமக்கு இதமாக வெப்பம் அளித்துத் தாவரங்களுக்கு உயிரூட்டுகிறது. இன்றிருப்பதில் பாதி யளவே சூரிய வெப்பம் பெற்றால் நாம் உறைந்து போக வேண்டியதுதான். இதுபோல் இரு மடங்கானால் நாம் அப்படியே வறுபட்டுப் பொசுங்கிப் போவோம். நமக்கு இவ்வளவு அநுகூலமாக இன்று சூரியனிடமிருந்து நாம் தள்ளியிருப்பது இயற்கையின் அகஸ்மாத்தான வாய்ப்புத்தானா?

உலக கோளம் அச்சுக்கு 23 டிகிரி சாய்ந்திருப்பதாலேயே நம் ஆண்டில் வெவ்வேறு பருவங்கள் உண்டாகின்றன. வெய்யிலும் மழையும் உலக வாழ்வுக்கு அநுகூலமாக அமைய இந்தப் பருவங்கள் உதவுகின்றன. அவ்வாறில்லாவிடில் சமுத்திரத்திலிருந்து புறப்படும் ஆவி நேர் வடக்குத் தெற்காகப் பரவிக் கண்டங்களை யெல்லாம் பனியில் மூழ்கடித்து விடும். சந்திரன் இன்றிருப்பது போல் இரண்டு லட்சத்துச் சொச்சம் மைலில் இல்லாமல், 50,000 மைலில் இருந்தால் கடல் கொந்தளித்து எழும்பும் பேரலைகளில் தினமும் இருமுறை உலகமனைத்தும் முழுகிப் புறப்பட வேண்டி யிருக்கும்.

பூமியின் மேல் பரப்பு இப்போதிருப்பதை விட இன்னும் பத்தே அடி அதிகப் பருமனாக இருப்பின் பிராண வாயுவே இல்லாமல் உயிர் வாழ்வு முடிய வேண்டியதுதான். கடல்கள் இப்போதிருப்பதைக் காட்டிலும் இன்னும் ஒருசில அடிகள் ஆழமாக இருந்தால் கூடப் போதும், கரியமில வாயுவும் பிராணவாயுவும் அதனால் உறிஞ்சப்பட்டு உயிரினமே வாழ முடியாமல் போயிருக்கும். இன்று லட்சோப லட்சம் எரிநட்சத்திரங்கள் வான வெளியில் பொசுங்குகின்றன. இவற்றில் எதுவுமே நம் உலகின் மீது மோதுவதில்லை. நமது சூழல் மட்டும் இன்னும் சற்று லேசாக இருந்தால் இந்த எரிநட்சத்திரங்களில் பல உலகில் விழுந்து ஆங்காங்கே அக்னிதாண்டவத்தை உண்டாக்கியபடி இருக்கும்.

இவை போல் இன்னும் பற்பல திருஷ்டாந்தங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றை யெல்லாம் பார்த்தால் உலகில் உயிரினங்கள் வாழ்வதற்கான அநுகூல நிலை ஒருகாலும் வெறும் இயற்கை வாய்ப்பாக இராது என்று உறுதியாகச் சொல்லலாம். சிந்தனா சக்தி படைத்த ஓர் அறிவு திட்டமிட்டுப் படைத்துத் தந்ததே பிரபஞ்சம் என உணரலாம்.

இரண்டாவது காரணம்: 'உயிர்', உயிர்' என்று ஏதோ ஒன்றைச் சொல்கிறோமே, அதற்கு உள்ள ஆற்றல்தான் எப்பேர்ப்பட்டது? தன் நோக்கங்களை நிறைவேற்ற அது எவ்வளவு அற்புதமாகச் செயல்படுகிறது? இதுவே சர்வ வியாபகமான ஓர் அறிவின் அடையாளம்தான்.

உயிர் என்பது என்ன என்று யாருமே ஆழ்ந்து பார்த்துக் கண்டு பிடிக்கவில்லை. அதற்கு அளவை இருப்பதாகவோ, எடை இருப்பதாகவோ தெரியவில்லை. ஆனாலும் அதற்கு எத்தனை சக்தி இருக்கிறது? சிறிய வித்திலிருந்து கிளம்பும் வேரின் சக்தி பாறையையே பிளந்து விடுகிறது. மண்ணையும் நீரையும் விண்வெளியையும் வென்றிருக்கிறது இந்தச் சக்தி. பஞ்சபூதங்களின் பரஸ்பரத் தொடர்பையே தனக்கு இசைவாக மாற்றிக் கொள்கிறது இச்சக்தி.

உயிர் ஒரு சிற்பியாகிறது. உயிருள்ளவற்றுக்கு எல்லாம் உருவம் தருகிறது; உயிர் ஓர் ஓவியனாகிறது. மரங்களில் உள்ள அத்தனை இலைகளையும் பார்த்துப் பார்த்து வரைகிறது; செடியில் உள்ள அத்தனை மலர்களுக்கும் வண்ணம் தீட்டுகிறது. உயிர் ஓர் இசைக் கலைஞனாகிறது. விதவிதமான பட்சிகளுக்குத் தனித்

ஏ. க்ரெஸ்ஸி மாரிஸன்

தனியான காதல் கீதங்களைக் கற்றுத் தருகிறது; வண்டையும் தேனீயையும் குளவியையும் ஆயிரமாயிரம் கலவையான இசை மூலம் பரஸ்பரம் உறவாடச் செய்கிறது; உயிர் என்பது ஓர் உன்னத ரசாயன விஞ்ஞானியாகிறது. பழங்களுக்குள் ஏதோ ஒரு ரசத்தைப் பொழிந்து சுவை உண்டாக்குகிறது; ரோஜாப் பூவுக்குள் சுகந்தத்தை நிரப்புகிறது; நீரையும் 'இயற்கையில்' அமைந்த கார்பானில் அமிலத்தையும் கலந்து இனிய சர்க்கரையாக்குகிறது; மரமாக்குகிறது. அப்படி மரத்தை உண்டாக்கும்போதே அந்த மரமானது மனிதன் வெளி விடும் கரியமிலவாயுவை உட்கொண்டு மனிதனுக்கு வேண்டிய பிராணவாயுவை வெளிவிடுமாறும் செய்துவிட்டதே! ஆகா!

உயிரணுக்கள் பொதிந்துள்ள ப்ரோடோப்ளாஸத்தில் ஒரு வெகு நுண்ணிய துளியைப் பாருங்கள். சலன சக்தியுள்ள இந்தத் துளி ஜெல்லி போலிருக்கிறது. அதிலுள்ள ஓர் உயிரணு எத்தனை சக்தியைத் தன்னுள் அடக்கி வைத்திருக்கிறது? இதுவே உயிர்ச் சக்தியைப் பிராணிகளில் பெரியனவற்றுக்கும் சிறியனவற்றுக்கும் பகிர்ந்தளிக்கிறது. நமது தாவர—மிருக — மானுட உலகின் உயிர்ச் சக்தி அவ்வளவும் இந்த நுண் துளிக்குள் அடக்கம். இதை 'இயற்கை' உண்டாக்கி யிருக்கவே முடியாது.

நெருப்பாக இருந்த பாறைகளில் இத்தனை உயிர்ப்புள்ள தாவரங்கள் ஓர் அறிவினால் ஏற்பட்டிராவிடில், கடலில் இத்தனை உப்பைக் கொட்டி அதைக் கார்ப்பாக்கி இல்லாவிடில் பிராணிகளின் வாழ்வே சாத்தியமில்லை. ஆமாம், கடலில் இத்தனை உப்பைக் கொட்டி வைத்தது யார்?

மூன்றாவது காரணம்: மிருகங்களுக்குச் சுபாவமாக அமைந்துள்ள அறிவே, நல்ல மனம்கொண்ட ஒரு சிருஷ்டிகர்த்தன்தான் அநாதரவான சின்னஞ்சிறு பூச்சிகளுக்கும்கூட இவ்வறிவை — உள்ளுணர்ச்சியை ஊட்டியிருக்கிறான் என்பதை நிரூபிக்கிறது.

ஸாமன் என்பது மீன் இனத்தில் ஒரு வகை. அது ஏதோ ஒரு குட்டி நதியில் தோன்றுகிறது என்று வைத்துக் கொள்வோம். குட்டி நதியின் ஓட்டத்திலேயே அது சென்று ஒரு பெரிய நதியை அடைகிறது. பிறகு பெரிய நதியின் ஓட்டத்தோடு சென்று கடலை அடைகிறது. மாபெரும் கடலில் இச் சின்னஞ்சிறு மீன் வருஷக் கணக்கில் வாழ்கிறது. பிறகு ஒரு நாள் அது என்ன செய்கிறது தெரியுமா? கடலில் கலக்கும் அந்தப் பழைய பெரிய நதிக்குள் வந்து விடுகிறது. அந்தப் பெரிய நதியில் மைல் கணக்கில் பிரயாணம் செய்து சிறிதும் தப்பிதம் இன்றி, தான் பிறந்த அந்தக் குட்டி நதிக்கே திரும்பி விடுகிறது. மாகடலிலிருந்து அந்த அற்ப ஜந்துவை அத்தனைக் காலம் தள்ளி, அத்தனைத் தொலைவிலிருந்து, இம்மியும் பிசகின்றித் தன் பிறப்பிடத்துக்குக் கொண்டு வந்து சேர்க்கும் உள்ளறிவு எப்படித் தோன்றியது? அந்த மீனைத் தூக்கி நீங்கள் வேறேதும் உபநதியில் போட்டீர்கள் என்றால், அதற்கு நன்றாகத் தெரிகிறது. இது வல்ல தன் பிறப்பிடம் என்று. அது அந்த உபநதியோடு சென்று மாநதியை அடைந்து பிறகு அந்த மாநதியில் திசையறிந்து எதிர் நீச்சுப் போட்டும் பிரயாணம் செய்து எங்கு தான் பிறந்த உபநதி கலக்கிறதோ அங்கு அதை அடையாளம் புரிந்து கொண்டு, தன் பிறப்பிடத்துக்கே போய் விடுகிறது.

'ஈல்' என்ற மீன் வகையின் விந்தையோ அகஸ்மாத்தான 'இயற்கை' அமைப்பால் சற்றும் விளக்கவொண்ணாதது. உலகில் இந்த மீன் வகை எங்கு தோன்றினாலும் சரி, இவை அனைத்தும் வயது வந்தவுடன், அமெரிக்காவுக்கருகே உள்ள பெர்முடாவுக்கே வந்து விடுகின்றன. ஆயிரமாயிரம் மைல்கள் கடலில் நீந்தி இவ்விதம் பெர்முடாவின் ஆழ்ந்த கடலுக்கு வந்து சேர்கின்றன ஐரோப்பிய ஈல்கள். அங்குதான் இனப் பெருக்கம் செய்து கொள்கின்றன. உடனே மரித்தும் விடுகின்றன. அவை ஈன்ற மீன் குஞ்சுகள் பச்சைக் குழந்தைகள்தாமே? ஆயினும் அவை பெற்றோரும் இறந்த பின், யாருமே வழி சொல்லிக் கொடுக்காமல் ஆயிரமாயிரம் காதமும் நீந்தித் தமது தாய் வாழ்ந்த குட்டைக்கே வந்து சேர்கின்றன. இதனால் உலகில் அந்தந்தத் தேசங்களிலும் ஒரு குறிப்பிட்ட ஈல் இனத்தைத்தான் காண இயலுகிறது. இதுவரை அமெரிக்க நதியிலோ ஏரியிலோ ஐரோப்பிய ஈலைப் பிடித்ததென்பது கிடையாது. அவ்வாறே ஐரோப்பிய நீர்நிலையில் அமெரிக்க ஈலைப் பிடித்ததென்பதும் கிடையாது. ஐரோப்பிய ஈல் பெர்முடாவுக்கு வர நீண்ட காலம் ஆகுமல்லவா? அதற்கு மிகச் சரியாக அதன் கருக்கொள்ளும் காலமும் தள்ளிப் போடப்படுகிறது. இப்படியெல்லாம் பார்த்துப் பார்த்துச் செய்கின்ற இயக்க சக்தி ஒன்று இருந்துதானே தீர வேண்டும்?

குளவிகளில் ஒருவகை பூமியில் துளையிடுகிறது. பிறகு அக்குளவி ஒரு வெட்டுக் கிளியை விழ்த்தி வெல்கிறது. வெட்டுக் கிளியைக் கொல்லாமலே அதன் வளையான இடத்தில் கொட்டி அதனைப் பிரக்ஞை இழக்கச் செய்கிறது. அதைத் தன் துளைக்குள் கொண்டு வந்து போட்டுக் கொள்கிறது குளவி. குளவிகளின் குஞ்சுகளுக்கு இறந்த பிராணிகளின் மாமிசம் உதவாது. அப்படிப்பட்ட ஊனைத் தின்றால் இளங் குளவிகள் இறந்துவிடும். இதனால்தான் வெட்டுக் கிளியை உயிரிழக்காமல் உணர்வை மட்டும் இழக்குமாறு செய்கிறது குளவி. தாய்க் குளவி, வெளியே பறந்து போய் இறந்தே விடுகிறது. குஞ்சுகளைக் கூட்டில் விட்டு. அவை பெரிதாகும்வரை சவமாகாத வெட்டுக்கிளியின் ஊன் அவற்றுக்கு நியதிப்படி கிடைக்கிறது. ஆதிகாலத்திலிருந்து இன்றுவரை ஒவ்வொரு குளவியும் இப்படிச் செய்து வருகிறது. ஆதியில் முதன் முதலில் ஒரு குளவி இப்படிச் செய்துதான் இருக்க வேண்டும் — இல்லாவிடில் இன்று குளவி இனமே இருக்காது. சரி, அந்த ஆதிக் குளவியிடம், முட்டையிடு முன்பே இவ்வாறு ஒரு வெட்டுக்கிளியை இடமறிந்து கொட்டி, வளைக்குள் கொண்டு வைத்துக்கொண்டு, தன் மரணத்துக்குப் பின்னும் தம் குழந்தைகளின் 'உயிருள்ள' உணவுக்கு வழி செய்து தருமாறு கற்பித்தது யார்? சூழ்நிலை மாறிவரும்போது, மாற்றம் ஏற்பட்ட



பதில் இங்கே! கேள்வி எங்கே?

கீழே உள்ள நாலு பதில்களையும் நாங்கள் வாசகர்களுக்குச் சொல்ல விரும்புகிறோம். வாசகர்கள் அதற்கேற்பக் கேள்விகளைக் கேட்க வேண்டும்.

- **இது ஒரு ஜனநாயக நாடு என்பதால்...**
- **தெய்வம் நின்று கொல்லும்**
- **சென்னை பஸ் ஸ்டாப் ஒன்றில்**
- **இன்றே, இப்பொழுதே, இங்கேயே!**

சாதுர்யமான முறையில் கருத்துச் செறிவும் கிண்டலும் மிக நாலு கேள்விகளையும் எழுதுபவர்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது பரிசுகள் உண்டு.

முடிவு தேதி : ஜனவரி 31உ.

உறைமீது 'நாலு கேள்விகள்' எனக் குறிப்பிடவும்.

கருத்து : ஆர். எம்.

பின்னர் அதற்கு ஏற்பப் பிராணிகள், தங்கள் பௌதிக–மானசிக அமைப்புக்களை 'இயற்கை' நியதியில் மாற்றிக் கொள்வதாக டார்வின் சொல்வது, இதுபோன்ற அதிசயங்களை விளக்கவொண்ணாது. ஏனெனில் இங்கு தன் இனம் பிறக்கு **முன்னரே** அதற்கான நீண்ட காலத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இத்தகைய உள்ளுணர்வு இயற்கை பரிணாமத்தினுள் வராது; இது பகவத் பிரசாதமேயாகும்.

நான்கு: மற்றப் பிராணிகளின் உள்ளுணர்வுக்கும் அதிகமாக மனிதனிடம் ஒன்று உள்ளது — அதுவே பகுத்தறியும் ஆற்றல்.

ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணிக் கொண்டு போவதென்றால் என்ன என்றே மற்றப் பிராணிகளுக்குத் தெரியாது. 'எண்ணிக்கை' என்றால் என்ன என்றே அவற்றுக்குத் தெரியாது. உள்ளுணர்ச்சி மூலமே அவை செயலாற்றுகின்றன. ஒரு தனியான சுத்த ஸ்வரத்தைக் குழலில் கேட்கும்போது ஏற்படும் இன்பம் போன்றது பிராணிகளுக்கு உள்ள ஒரே ஆற்றலான உள்ளுணர்வு. அது அழகானதுதான். ஆனால் அதன் எல்லை மிகவும் குறுகலாக வரையறுக்கப்பட்டிருக்கிறது. தனியொரு ஸ்வரத்தில் மேலும் போக முடியாது, கீழும் போக முடியாது. மனித மூளை எப்படிப்பட்டது தெரியுமா? சகல ஸ்வரங்களும் சேர்ந்த சங்கீதம் போன்றது. பாடகர் மட்டுமின்றி, அத்தனை இசைக் கருவிகளும் உடன்சேர்ந்து எல்லா ஸ்வரங்களிலும் புகுந்து விளையாடுவது போன்றது மனித மூளையின் ஆற்றல். இது இயற்கைப் பரிணாமம் அன்று, அகஸ்மாத்தாக நேர்ந்தது அன்று என விவரிக்க வேண்டிய அவசியமே இல்லை. மனித மூளையின் எல்லையற்ற ஆற்றலே அதற்கு ஆதாரமான ஒரு மகா மதிலைக் கட்டுகிறது. இதைப் பற்றி விளக்கிச் சிரமப்பட அவசியமே இல்லை. மனிதனுக்குள்ள உண்மையான பகுத்தறிவைக் கொண்டு நாம் பெறக்கூடிய தலைசிறந்த பயன் யாது எனில், 'நான் இப்படி அறிவு படைத்திருப்பதற்குக் காரணம் பிரபஞ்சப் பேரறிவின் ஒரு பொறியைப் பெற்றிருப்பதே' என்று அறிந்து, அதைத் தியானிப்பதுதான்.

ஐந்து: பாரம்பரிய இயல்புகள் உள்படப் பல ஆற்றல்களைக் கொடுப்பவை 'ஜீன்'கள். இவற்றைப் பற்றிய மர்மங்களை டார்வின் அறிந்திருக்கவில்லை. அதனால்தான் அவர் சந்தர்ப்பச் சூழ்நிலையைப் பொறுத்து இயற்கை நியதியே படிப்படியாக உயிரினங்களைப் பரிணமிக்க வைத்தது என்றார்.

இந்த ஜீன்கள் சொல்லவும் முடியாத வண்ணம் நுண்ணியவை. உலகில் உள்ள அத்தனை மாந்தர்களிடமும் வாழ்வுக்கு அடிப்படையாக இருக்கும் எல்லா ஜீன்களையும் ஓரிடத்தில் சேர்த்தாலும் ஒரு சிறிய சிமிழுக்குள் அடைத்துவிடலாம். ஆயினும் கோடானு கோடி மாந்தரின் உயிரணுக்களுள் மேவி, அவர்களது மாறுபட்ட இயல்புகளுக்கும் ஆற்றல்களுக்கும் திறவுகோலாக இருப்பன இந்த ஜீன்களே! இப்படிப்பட்ட அதி சூட்சுமமான 'ஜீன்' தனக்குள் வழிவழியான பல பரம்பரையினரின் குணங்களையும் சித்தப் பண்பு முழுவதையும் அடக்கி வைத்துக் கொண்டிருப்பது எங்ஙனம்?

ஜீன்களைத் தரித்து, கருவுக்கு எடுத்துச் செல்பவை உயிரணுக்கள். இந்த உயிரணுக்களை நாம் பிரஸ்தாபித்த பின்தான் டார்வினுடைய பரிணாமவாதம் பற்றிய பேச்சே வருகிறது. உயிரணுக்கள் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப எப்படிப் பரிணமிக்கின்றன என்று அவர் விவரித்தார். ஆனால் அதற்கு முன்பாக, உலகில் உயிர் வாழ்வு அனைத்தையும் ஆண்டு ஒழுங்கு

செய்கின்ற ஜீன் இருக்கின்றதே. அது பரிணாமத்தில் எப்படி வர முடியும்? சூக்ஷ்ம தரிசனக் கருவிகளுக்கும் கூட அகப்படாத இந்த ஜீன்களிடம் உலக வாழ்வின் ஆணைகளைக் கொடுத்திருப்பது, படைப்பாற்றலும் அறிவாற்றலும் பொருந்திய கடவுள் என்ற ஒன்றுலேயே முடியக் கூடியது. வேறு எந்த அடிப்படையிலும் இந்தப் புதிரை அவிழ்க்க முடியாது. மிக மிக நுண்ணிய ஜீன்களின் மிக மிக மகத்தான ஆற்றலைப் பார்க்கும்போது அந்த மகா மதியின் — அந்த மாபெரும் சிருஷ்டி கர்த்தவின் — சாதுரிய லீலையைக் காண்கிறோம். அவன் ஒவ்வோர் உயிருக்கும் உண்டான தேவைகளை எப்படிக் கவனத்துடன் பூர்த்தி செய்கிறான் என்பதைக் காண்கிறோம்.

ஆறாவது: இயற்கையில் அநாவசியம் என்பதே இல்லை. அத்தியாவசியமானவற்றை மட்டுமே பரம சிக்கனமாக உபயோகித்துப் பிரபஞ்ச வாழ்வு நடைபெறுகிறது. இப்படி ஆழ்ந்த கருத்துடன் முன்கூட்டியே யோசித்துப் பொருட்களை, ஆற்றல்களைப் படைத்து, உபயோகித்து உலக வாழ்வினை நடத்துவதில் ஓர் ஆனந்த ஞானப் பொருளின் பெருமையையே உணர்கிறோம்.

பல்லாண்டுகளுக்கு முன்பு ஆஸ்திரேலியாவில் ஒருவகைச் சப்பாத்திக் கள்ளியைக் காப்பு வேலியாக அமைத்தார்கள். அப்போது ஆஸ்திரேலியாவில் இந்தக் கள்ளியை அரித்துத் தின்னக் கூடிய பூச்சி பொட்டு ஏதும் இல்லை. எனவே இது அபரிமிதமாகப் பெருகத் தொடங்கியது. யாரும் வெட்டி அகற்ற முடியாதப்படி பயங்கர முட்களுடன் இந்தக் கள்ளியானது பட்டிக்காடு, பட்டணம் யாவற்றிலும் பெருகி, மக்களையே விரட்டியடித்தது. வயல்களெல்லாம் பாழாயின. இங்கிலாந்தின் நீள அகலங்கள் கொண்ட ஒரு பெரும் பகுதி முழுதும் அப்படியே கள்ளிக் காடாகி விட்டது. இந்தப் பயங்கரப் போக்கைக் கண்டு கிருமி இயல் நிபுணர்கள் உலகெல்லாம் சல்லடை போட்டனர் — கடைசியில் அவர்கள் ஒரு பூச்சியைக் கண்டுபிடித்தே விட்டனர். இந்தப் பூச்சி மேற்படி கள்ளித் தினுசை மட்டுமே புசிப்பது. வேறெதையும் கண்ணெடுத்தும் பாராது. கள்ளியை மட்டும் கபளீகரம் செய்யும். இவ்வாறு ஆஸ்திரேலியக் கள்ளிக்கு எதிராக **முன்கூட்டியே** ஒரு பூச்சி படைக்கப்பட்டதே விந்தை. அதனினும் விந்தை இந்தப் பூச்சியை அழிக்கக் கூடிய உயிரினம் ஏதும் ஆஸ்திரேலியாவில் இல்லை. எனவே இப்பூச்சியை ஆஸ்திரேலியாவில் கொண்டு விட்டதில் கள்ளிக் காடு மறைந்தே விட்டது. அதோடு விந்தை முடியவில்லை. கள்ளிக் காடு அழிந்ததும் இந்தப் பூச்சிகள் விருத்தியாவதும் எப்படியோ ஒரேயடியாகக் கட்டுப்படுத்தப்பெற்றது. எப்போதேனும் கள்ளி உபத்திரவம் ஏற்பட்டால் அதைச் சமாளிப்பதற்குரிய 'ரிஸர்வ் போலீஸ்' அளவுக்குத்தான் இன்று இப்பூச்சி ஆஸ்திரேலியாவில் உள்ளது.

இவ்வாறு கட்டுப்பாடுகள் செய்து, பிரபஞ்சம் எங்கணும் பலவித உயிரினங்களின் வாழ்க்கையைக் கோவை செய்து சம நிலையில் வைத்திருக்கும் அதிசயத்தை 'கடவுள்' என்ற ஒன்றாலன்றி எப்படி விளக்க முடியும்?

உலகில் மனிதனளவுக்குப் பெரிய பூச்சிகள் பறந்து கொண்டும், நகர்ந்து கொண்டும் இருந்தால் எப்படி இருக்கும்? இந்தப் பூச்சிகள் இனப்பெருக்கம் செய்வதோ வெகு வேகத்தில். எனவே பெரும் பூச்சிப் பட்டாளம் மனித இனத்தையே அழித்திருப்பது சாத்தியம் தான். ஏன் இப்படி நிகழவில்லை?

பூச்சி இனத்துக்கு மனிதனைப் போன்ற நுரையீரல் இல்லை. அவை குழாய்களின் மூலமே சுவாசிக்கின்றன. ஆனால் அவை ஓரளவு வளர்ந்த பின் இந்தக் குழாய்கள் வளர்வதில்லை! எனவே இப்பூச்சிகளால் இதன் பின் வளர முடிவதில்லை. இப்படி அந்தக் குழாய்கள் வளராமல் கட்டுப்படுத்துவது யார்?

அந்த ரட்சண சக்தி இல்லாவிடில் இன்று சிங்கத்தின் அளவுக்கு வண்டுகள் பறந்து கொண்டிருக்கும். கற்பனை செய்து பார்த்தாலே குலை நடுங்குகிறது அல்லவா?

ஏழாவது: கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் என்பதற்கு இணையற்ற சான்று என்னவெனில், மனிதன் கடவுள் கொள்கையை வகுத்துக் கொண்டிருப்பதேயாகும்.

உலகில் வேறு எந்த உயிரினத்துக்கும் இல்லாத சிந்தனா சக்தியின் மூலமே மனிதன் கடவுள் என்ற ஒன்றைக் கொள்ள முடிகிறது. இந்தச் சிந்தனா சக்திதான் மனிதனுக்குள் உள்ள ஈசுவராம்சமான ஆற்றல். கண்ணில் தெரியாத பல மர்மங்களைக் கூட மனிதனால் கண்டுகொள்ள முடிவது இந்தச் சிந்தனா சக்தியால்தான். இது விரித்துக் காட்டும் காட்சி அகண்டமானது; அதற்கு எல்லையே இல்லை. 'சிந்தனா சக்தி' எனப்படுவதைத் தூய்மை செய்து பூரணமாக்கினால் அதுவே ஆன்மிக சத்தியத்தின் சக்தியாகும். அந்த உயர்நிலை பெற்ற ஒருவன் காண்பன, கேட்பன அனைத்திலும் ஈசுவரனின் திட்டத்துக்கும், அவன் வகுத்த லட்சியத்துக்கும் சாட்சியங்களைப் பார்ப்பான். கடவுளின் மோக்ஷ லோகம் எங்கெங்கும் இருப்பது; எல்லாவற்றிலும் இருப்பது: அந்த மோக்ஷ லோகம் தனக்கு மிக நெருக்கமாக இருக்குமிடம் தனது இதயமே என்ற மகத்தான உண்மையை அநுபவிப்பான். கடவுள் எங்கும் இருக்கிறான், எல்லாவற்றிலும் இருக்கிறான், எல்லாவற்றையும் விட மிக மிக நெருக்கமாகத் தன் இதயத்திலேயே இருக்கிறான் என உணர்வான்.

கிறிஸ்துவத் துதி கூறும் வாசகங்கள் இதய மொழியில் உண்மை என்பது மட்டுமல்ல; விஞ்ஞான வழியிலும் அதுவே உண்மை.

ஆகாயமனைத்தும் ஆண்டவன் மகிமையை
ஆர்ப்பனவே!
விண்மீன் பதித்த விசும்புவெளி - அவன்
வியத்தகு கைவண்ணமே!

தமிழாக்கம்: **ரா. கணபதி**

மகாத்மா காந்தி ரகுபதி ராகவ

தமிழாக்கம்: ராஜாஜி

இயற்கை வைத்தியத்தை நான் சிலாகிப்பதற்குக் காரணம் என்னவென்றால் அது உடலையும் உள்ளத்தையும், ஆன்மாவையும் மூன்றனையும் கருதிச் செய்யப்படும் மருத்துவ முறையாகும். எல்லாவற்றையும் விடச் சிறந்த இயற்கை வைத்தியம் எதுவெனில், ராமநாமம் என்பேன். அது எந்த நோயையும் தீர்க்கும் தவறாத மருந்து. ராம பாணம் என்று சொல்லுகிறோமே—எந்த நோயையும் ராமநாமம் தீர்க்கும் என்பதனால்தான் அந்தச் சொல் வழக்கத்துக்கு வந்திருக்கிறது. அது தான் மனிதனுடைய மேன்மைக்குத் தகுதி வாய்ந்த மருந்து. எந்த நோய் வருத்தினாலும் அது உள்ளம் கரைந்து உச்சரிக்கப்படும் ராம நாமத்தினால் நிச்சயமாக ஆறிவிடும். ஆண்டவனுக்குப் பல பெயர்கள் உண்டு. அவனவன் தனக்குப் பிடித்த பெயரை வைத்து ஜபம் செய்யலாம். ஈசுவரா, அல்லா என்று சொல்லி ஜபம் செய்வதும் ராம ஜபமேயாகும். இந்த ராம நாமம் உதவ வேண்டுமானால் கிளிக்குக் கற்றுக் கொடுத்த பேச்சைப் போல் சொன்னால் போதாது. பக்தி சிரத்தையுடன் உள்ளத்தினுள் உச்சரிக்க வேண்டும். மண்ணும் நீரும் காற்றும் சூரியனும் ஆகாயமும் கூடி நம்முடைய உடல் உண்டாகியிருக்கிறது. இந்த ஐந்துமே உடலுக்கு வந்த நோய்க்கு மருந்துமாகும். கூட ராமநாமத்தைச் சேர்த்தால் போதும். அதற்கு மேல் மரணம் வந்து எய்தினாலும் துயரப்படலாகாது. மகிழ்ச்சியே அடையலாம். பௌதிக வைத்திய சாஸ்திரங்களில் அமரத்வம் தரும் மருந்தை இதுவரையில் காணவில்லை. உடலில் தங்கியிருக்கும் ஆன்மாவுக்கு மரணம் கிடையாது. அதை அசுத்தம் தீண்டாமல் வைத்துக் கொள்வதே நமது கடமை.

நான் சொல்வது உண்மை என்று ஒப்புக் கொண்டால் இந்தப் பெரிய ஆஸ்பத்திரிகளும், படித்துப் பாண்டித்தியம் அடைந்த வைத்தியர்களும் இன்னும் மற்ற சாமக்கிரியைகளும், இவற்றுக்காகும் செலவுகளும் வேண்டாம் என்று நீக்கிவிடலாம் அல்லவா? உண்மையில் இவையெல்லாம் எத்தனை பேருக்கு உதவி வருகின்றன? பெரும்பாலோர் இவற்றினால் ஒரு பயனும் அடைவதில்லை. பெரும்பாலோர்க்குப் பயன்பட முடியாத ஏற்பாட்டை ஒரு சிலருடைய நன்மைக்காக வைத்துக் கொண்டு ஏன் பெரும் செலவு செய்ய வேண்டும்?

(ஹரிஜன், 3-3-46)

நான் சொல்லும் ராம நாமம் ஓர் இந்திர ஜால வித்தையல்ல. அளவுக்கு மீறி உணவு உண்டு, அதனால் வரும் நோயைத் தீர்த்துக் கொண்டு மறுபடியும் ஏதேச்சையாகச் சாப்பிடலாம் என்று ஆசைப்படுகிறவனுக்கு ராம நாமம் உதவாது. நன்மைக்குத்தான் ராம நாமம் உதவுமேயொழியத் தவறு செய்வதற்கு உதவாது. திருடர்களும் கொள்ளை அடிப்பவர்களும் ராமநாமம் சொல்லித் தங்கள் தொழில் நடத்த முடியாது. சுத்த வாழ்க்கையை நடத்தி உள்ளத்தையும் மலம் நீக்கி வைத்துக் கொள்பவர்களுக்குத்தான் ராமநாமம் பயன்படும். வரம்பு மீறி ஆகார விஹார போகங்களைத் தேடுபவர்களுக்கு அது கொஞ்சமும் பயன்படாது. வரம்பு மீறி உண்டவனுக்கு மருந்து உபவாசம். உபவாசமிருந்து அதனுடன் ஜபம் செய்யலாமே யொழிய, பிரார்த்தனை மட்டும் போதாது. உபவாசத்தின் கஷ்டத்தைப் பிரார்த்தனை மூலம் குறைத்துக் கொள்ளலாம். உபவாசத்தைத் தாங்க முடியாது என்று கஷ்டப்படுகிறவர்கள், ராமநாமத்தின் வழியாக உபவாசத்துக்கு வேண்டிய உறுதியைப் பெறலாம்.

கண்ட மருந்துகளையெல்லாம் உள்ளே துருத்திக் கொண்டு வந்து அதே சமயம் ராமநாம உச்சரிப்பும் செய்து வருவதில் ஓர் அர்த்தமுமில்லை. நோயாளிகளுடைய அக்கிரமங்களுக்கு உடந்தையாக வைத்தியர்கள் தங்களுடைய கல்வியையும் சாமர்த்தியத்தையும் பயன்படுத்தித் தருகிறார்கள். இது நோயாளி, வைத்தியர் இருவருக்குமே நன்மையல்ல; தீமையாகும். உடலைப் பெற்றிருப்பதின் பயன் அதன்மூலம் ஆண்டவனை ஆராதிப்பதேயாகும். அதை விட்டு விட்டுச் சரீரத்தையே பூஜை செய்து அதற்காகப் பணத்தை வாரிக் கொட்டிச் செலவு செய்வது மடமை. ராமநாமம் உடலுக்கும் மருந்தாகும்; ஆன்மாவையும் மேல் தூக்கித் தரும்.

((ஹரிஜன், 7-4-46)

காவிரிக் கரையிலே காகித ஆலை!

"நல்ல காகிதம் செய்வோம்" என்று பாரதியார் விடுத்த அறைகூவல் யார் காதில் விழுந்ததோ இல்லையோ, தமிழகத்திலும் கேரளத்திலும் பல தொழில்களை நிறுவி, வெற்றியுடன் நடத்திக் கொண்டு வரும் சேஷசாயி சகோதரர்கள் என்ற தொழில் ஸ்தாபனத்தின் ஆணிவேராக இருந்த வி. சேஷசாயி காதில் விழுந்தது. நாட்டின் மொத்த காகித உற்பத்தியில் பத்தில் ஒரு பங்கை உபயோகிக்கும் இந்தப் பகுதியில் ஒரு காகித ஆலைகூட இல்லையே என்ற குறையை அவர் உணர்ந்தார். இதை நிவர்த்தி செய்ய முடியுமா என்று தீவிரமாகச் சிந்தித்தார். பெரிய முதலீடு தேவைப்பட்டதால், அவர் எண்ணம் கனவாகவே நின்று விட்டது.

அவர் காலத்தில் அவரால் பூர்த்தி செய்ய முடியாததை அவருக்குப் பிற்காலத்தில் அவருடைய பெயரைத் தாங்கி நிற்கும் சேஷசாயி சகோதரர்கள் ஸ்தாபனம் பூர்த்தி செய்து வைத்த புகழைப் பெற்றுள்ளது. இதைச் செயலாக்குவதற்கு உறுதுணையாக இருந்தவர் அப்போதைய தொழில் அமைச்சர் திரு ஆர். வேங்கடராமன்.

ஒரு நவீன காகித ஆலையை நிறுவுவதற்குத் தேவைப்படும் மூன்றரைக் கோடி ரூபாயில் ஒரு கோடி ரூபாயைத் தமிழக அரசாங்கத் தொழில் முதலீட்டு ஸ்தாபனத்தின் மூலம் கொடுக்க ஏற்பாடு செய்தார்-கடனாக இல்லை; பங்குப் பணமாக! அந்தக் காலத்தில் அதாவது பத்தாண்டுகளுக்கு முன் தனியார் தொடங்கும் ஒரு தொழிலில் சர்க்கார் சார்பில் வழங்கப்பட்ட மூலதனம் ஒரு கோடி என்பது வரலாறு காணாத அதிசயம். சர்க்கார் ஒரு கோடி ரூபாய் கொடுக்கிறார்களே என்ற உற்சாகத்துடன் பொதுமக்களும் பணம்போட்டார்கள். காவிரிக் கரையில் சேலம் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் புதியதொரு நவீன தொழிற்சாலை வேகமாக உருவெடுக்கத் தொடங்கியது.

மளமளவென்று வேலை தொடங்கிற்று. ஆரம்பித்த பதினெட்டு மாதங்களுக்குள், அக்டோபர் 1962-ல் "சேஷசாயி பேப்பர் அண்டு போர்ட்ஸ்" தொழிற்சாலையிலிருந்து காகிதம் தயாரித்து மார்க்கெட்டில் விநியோகத்துக்கு வந்து விட்டது.

தமிழகத்துக்குப் பெருமை தருவது இத்தொழிற்சாலை. இது அமைந்துள்ள இடமும், சுற்றுப்புறச் சூழ்நிலையும் தொழிற்சாலைக்கு, எல்லா வகையிலும் அழகு செய்வது. தொழிற்சாலையை நிறுவிக் கொடுத்த அமெரிக்கக் கம்பெனி 'பார்ஸன்ஸ் அண்டு விட்மோர்ஸாரி'ன் அனுபவமும் செய்வண்ணமும் இதில் மூலைக்கு மூலை பகுதிக்குப் பகுதி பளிச்சிடுகின்றன. அவர்கள் வகுத்த திட்டத்தின்படி தொழிற்சாலையைக் கட்டி முடித்த நமது என்ஜினீயர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் பாராட்டு உரியது.

160 ஏக்கர் நிலத்தில் தொழிற்சாலை அமைந்திருக்கிறது. நாளொன்றுக்கு 11 மில்லியன் காலன் தண்ணீர் தேவைப்படும் தொழிற்சாலைக்கு எந்த நகரசபையிலிருந்து தண்ணீர் வாங்கிக் கட்டுப்படியாகும்? காவிரியிலிருந்தே நேராகத் தண்ணீர் விநியோகமாகிறது. காவேரித்தாய் தஞ்சை நெற்களஞ்சியத்தை நிரப்புவதைப் போலவே காகிதத் தொழிலையும் நடத்திக் கொடுக்கிறாள்.

காகிதத்துக்கு மூலப்பொருள்களான காட்டு மூங்கில், காட்டு மரங்கள், கரும்பு ஆலைகளின் கழிவுப் பொருளாகக் குவியும் கரும்புச் சக்கை இவற்றையெல்லாம் தனியாகவும் கலந்தும் உபயோகிக்கக் கூடிய வகையில் அமைந்துள்ள கொதிகலன்கள், நீராவி உற்பத்திக் கொதிகலன்கள், சுத்திகரிப்பு அண்டாக்கள், இடையறாது நிமிஷத்துக்கு 600, 700 அடி நீளம் என்ற வேகத்தில் தயாராகும் காகிதத்தைத் துண்டிக்காது கம்பிச் சல்லடை மீது தாங்கி ஓடும் உருளைகள்—இப்படித் தொழிற்சாலையில் இயந்திரங்களும் இயந்திர உறுப்புக்களும் எந்தப் பக்கம் திரும்பினாலும் கண்ணைக் கவர்கின்றன.

ஒரு கோடியில் குவிக்கப்பட்டுள்ள மூங்கில்களும் மரத் திம்மைகளும் இயந்திரங்கள் மூலம் துண்டிக்கும் பகுதிக்குச் சென்று அங்கு பொடியாக்கப்படுகின்றன. ரசாயனப்பொருள்களுடன் கலந்த தண்ணீரினால் கழுவப்படுகின்றன. பின்னர் கன்னங்கரேலென இருக்கும் கூழைப் படிப்படியாக காஸ்டிக் சோடா, க்ளோரின், ஹைப்போ முதலியவற்றைக் கொண்டு வெண்மையாக்குகின்றனர். இப்போதுதான் அது பார்க்கத் தக்க நிலைக்குப் பக்குவமாகிறது. இதுதான் காகித உற்பத்தியில் பிரதான பகுதி. இவ்விதம் பக்குவமான கூழுக்குத் தேவையான வர்ணங்கள் சேர்க்கப்

மேட்டூர் பள்ளிப்பாளையத்திலுள்ள சேஷசாயி பேப்பர் போர்ட்ஸ் தொழிற்சாலை





திரு சித்ரா நாராயணசாமி



திரு விசுவநாதன்

பட்டுப் பல நிறக் காகிதங்களாக உருளைகளில் சுற்றி எடுத்து வைத்துக் கொள்ளக் கூடியதாக இயந்திரங்களிலிருந்து வெளி வருகின்றன.

ஒரு முனையில் உருளைக்குச் செல்லும்போது 99 சதவிகிதம் தண்ணீரும் 1 சதம் கூழுமாக இருப்பது உருளைகள் மீது தவழ்ந்து மறுமுனையில் வெளிவரும்போது 95 சதம் காகிதமாகவும் 5 சதம் தண்ணீராகவும் மாறுவது காகிதத் தொழிற்சாலையில் கண்டு வியக்க வேண்டிய பகுதி.

எஞ்சிய தண்ணீரை நீராவி உஷ்ணத்தினால் இயந்திரங்களே உறிஞ்சிப் பளபளப்பான வெண்ணிறக் காகிதமாக மாற்றுவதும் மாயாஜாலம் போலத் தொழிற்சாலையில் நிகழ்கிறது. இயந்திரங்கள் எல்லாம் மிகத் திறமையான முறையில் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. எந்த இடத்தைப் பார்த்தாலும் மெழுகிவிட்ட தரைபோல் தும்பு தூசி இல்லாமல் துல்லியமாகக் கண்ணைக் கவர்கின்றது. இந்தியாவிலுள்ள எல்லாக் காகிதத் தொழிற்சாலைகளிலும் பள்ளிப்பாளையம் தொழிற்சாலைதான் சுத்தமான தொழிற்சாலை என்று சொன்னார்கள். பார்த்தாலும் அப்படித்தான் தெரிகிறது.

இவ்வளவுக்கும் இந்தத் தொழிற்சாலையை ஒரு மத்திய ரகத் தொழிற்சாலை என்றே சொல்ல வேண்டும். ஆண்டுக்கு 18,000 டன் காகிதம் உற்பத்தி செய்யக் கூடியதை, சென்ற ஆண்டிலிருந்து 33,000 டன் அளவுக்கு விரிவாக்கி யுள்ளார்கள். நாட்டில் பெரிய காகிதத் தொழிற்சாலைகள் என்று மதிக்கக் கூடிய 12 நிறுவனங்களில் சேஷசாயி பேப்பர்போர்ட் தொழிற்சாலை அளவில் ஒன்பதாவது இடம் பெறும்.

உற்பத்தி ஓய்வின்றி நடைபெறுகிறது இங்கே. மூன்று ஷிப்டுகள் வேலை நடக்கிறது. இந்த யந்திரங்களுக்குத் தூக்கமே தேவை இல்லையாம். நிசாசரப் பிறவிகள்!

இரண்டாண்டுகளாக 30,000 டன் உற்பத்தியானாலும் சென்ற பத்தாண்டுகளாக இக்கம்பெனி பங்குதாரர்களுக்கு லாபப் பங்கீடு (Dividend) செய்யவில்லை. காரணம், போதிய லாபமின்மை. கேட்பதற்கு வியப்பாகத் தோன்றவில்லையா? ஆனால் இதற்குக் கம்பெனி நிர்வாகஸ்தர்கள் விளக்கமும் சொன்னார்கள்.

ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டே போகும் மறைமுக வரிகள், மின்சாரக் கட்டண உயர்வு, ரயில் கட்டண விகித உயர்வு இவை லாபமின்மைக்குக் காரணம். இவற்றை விற்பனை விலையில் கூட்டிச் சேர்த்து விற்க முடியாத படி விற்பனை விலைக் கட்டுப்பாடு சமீப காலம்வரை இருந்தது. எனவே வரவுக்கும் செலவுக்கும்தான் சரிக்கட்டுகிறதே தவிர மிச்சம் ஏதுமில்லை. அரசாங்கம் உணர்ச்சியற்றது: மரக்கட்டை போன்றது என்றெல்லாம் சொல்லப்படுவது இம்மாதிரி காரியங்களினால்தான். சர்க்கார் இதில் முதலீடு செய்துள்ள ஒரு கோடி ரூபாய்க்கும் 'டிவிடெண்ட்' கிடைக்கவில்லையே. பத்தாண்டு காலத்துக்கு அவர்களும் நஷ்டப்பட்டுக் கொண்டுதானே இருந்திருக்கின்றனர்?

இந்த நிலை சமீபத்தில்தான் மாறியது. விற்பனை விலையில் கட்டுப்பாட்டை எடுத்து விட்டார்கள். உற்பத்தியாகும் காகிதத்தைக் கட்டுப்படியாகக் கூடிய விலையில் இப்போது விற்க முடிகிறது. கடந்த ஓராண்டு காலமாக இவ்வாறு செய்ய முடிந்ததால் இதுவரை ஏற்பட்ட நஷ்டங்கள் மறைந்து, பங்கீடு செய்யக் கூடிய அளவுக்கு லாபம் கிடைத்திருக்கிறது. நடப்பு ஆண்டுக்கு அதாவது 1971 மார்ச்சு 31ல் முடியும் ஆண்டுக்கு இடைக்கால டிவிடெண்டாக 6 சதவிகிதம் முதன் முதலாக இக்கம்பெனி வழங்கியுள்ளது. பத்தாண்டு காலம் காத்திருந்த பின்னர் கிடைக்கும் முதல் டிவிடெண்ட் அல்லவா? இந்தச் சம்பவத்தை ஒரு விழாவாகவே சேஷசாயி பேப்பர் கம்பெனி கொண்டாடியது. அரசாங்கக் கார்ப்பரேஷனுக்குச் சேர வேண்டிய ரூ. 6 லட்சம் டிவிடெண்ட் தொகைக்குச் செக்கை வெட்டித் தொழிலமைச்சர் திரு எஸ். மாதவன் கையினாலேயே திரு டி. வி. நரசிம்மவிடம் கொடுக்கப்பட்டது.

ஆரம்ப காலம் முதல் இன்று வரையில் இத்தொழிற்சாலையை இன்றுள்ள நிலைமைக்குக் கொண்டு வந்தவர்களுள் நிர்வாக டைரக்டர் எஸ். விசுவநாதனையும், தலைவர் சித்ரா எஸ். நாராயணசாமியையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். கம்பெனியின் எதிர்காலம் வளமுள்ளதாகவே காட்சியளிக்கிறது.

— எம். எஸ். சிவஸ்வாமி



ராமாயணம்

ராஜாஜி

இம்மாதிரிக் கட்டங்கள் வரும்போது வால்மீகி ராமாயணத்தில் ஒன்று நாம் காண்கிறோம். முன் நடந்த நிகழ்ச்சிகளை ஏதேனும் ஒரு பாத்திரம் வழியாகத் திரும்பச் சொல்ல நேரும் இடங்களில் தயங்காமலும் ஏதும் விடாமலும் எல்லா நிகழ்ச்சிகளையும் மிக அழகாக மறுபடியும் கவி பாடுகிறார். பாராயணமாகப் படிப்போருக்கு இது மிக ஆனந்தம் தருகிறது. விஸ்தார காவியங்களில் இது ஒரு தனி அழகு. இங்கே நான் அந்த மாதிரி நடந்ததையெல்லாம் மறுபடியும் ஹனுமான் வழியில் வைத்துத் தமிழில் சொல்லுவது சரியாக இராது. அதிகம் நீண்டு போகும். படித்ததையே படிக்க வேண்டியதாகும். அது இந்தக் காலத்தோருக்குப் பிடிக்காது!

ஏதேனும் அபாயம் தீர வேண்டும், அல்லது எடுத்த காரியம் ஏதேனும் வெற்றிகரமாக நடைபெற வேண்டும் என்று விரும்புகிறவர்கள் சுந்தரகாண்டத்தைப் பாராயணம் பண்ணுவது நம்முடைய வழக்கம். கடலைத் தாண்டும் போதும், பிறகும் நடந்த வரலாற்றை ஹனுமான் எடுத்துச் சொல்லும் இந்த அத்தியாயத்தைப் பாராயணம் செய்தால் சுந்தர காண்டம் முழுதும் பாராயணம் செய்த பலனை அடையலாம்.

நடந்த நிகழ்ச்சிகளை ஒன்றும் விடாமல் விஸ்தாரமாகச் சொல்லி முடித்து ஹனுமான் சொன்னான்:



''நம்முடைய முயற்சி இவ்வாறு சுபமாக முடிந்தது. ஆனால் இதற்கெல்லாம் மூலபலம் சீதையின் சீலமே. அவள் சக்தியே என்பதை நாம் உணரவேண்டும். என் மனத்தில் அந்தப் புனித தேவியின் காலடியில் இன்னும் நான் பணிந்தே நிற்கிறேன். சீதையை நினைக்கும் போது அவளை இந்த ராக்ஷசன் எவ்வாறு பிடித்துத் தூக்கிச் செல்ல முடிந்தது; அந்தக் கணமே எரிந்து சாம்பலாய்ப் போயிருக்க வேண்டுமல்லவா என்று வியக்க வேண்டியிருக்கிறது. ஆனால் ராவணனுடைய தபோபலமும் பெரிது. அது அவனை ஓரளவு இன்னும் காத்து வருகிறது. ஆயினும் இஷ்டப்பட்டால் சீதை அவனை எரித்தேயிருப்பாள். தன் கணவன் ராமசந்திரனால் இவன் தண்டனை அடைய வேண்டும் என்று சகித்துக் கொண்டிருக்கிறாள். இப்போது உங்கள் யோசனை என்ன? இப்போதே லங்கை சென்று ராவணனை வதம் செய்து லங்கையையும் அரக்கர் கூட்டத்தையும் நாமே அழித்துவிட்டுச் சீதையையும் அழைத்துக் கொண்டு ராமனிடம் தேவியைச் சமர்ப்பித்துச் சந்தோஷிக்கச் செய்யலாமா? இதைப் பற்றி நீங்கள் யோசிக்க வேண்டும்.

'' நமக்கு இதைச் செய்யும் சக்தி இல்லாமல் இல்லை. நான் ஒருவனாகவே அந்தக் கூட்டத்தை அடையாளமின்றி அழித்து விடுவேன். ஜாம்பவான் ஒருவரே போதும், அந்த அரக்கர் சேனை முழுவதையும் அழிக்க. வாலிபுத்திரன் யுவராஜா ஒருவன் போதாதா அவர்களைச் சம்பூர்ணமாக வதம் செய்வதற்கு? பனஸன், நீலன் இவர்களுடைய பராக்கிரமம் போதும், லங்கையையும் ராவணனையும் சேர்த்து அழித்து வெற்றியுடன் திரும்பி வர. மயிந்தன், த்விவிதன் இந்த அச்வினீ புத்திரர்கள் இருவருமே சென்று இந்தக் காரியத்தை எளிதில் முடித்து விட்டுத் திரும்புவார்கள். பிதாமகருடைய வரங்களைப் பெற்றிருக்கிற இவர்கள் வெகு எளிதில் ராவணனைக் கொன்று வெற்றி முழக்கத்துடன் திரும்புவார்கள்.

''இப்படி நமக்குள் பலர் இருக்கிறார்கள், ராவணனையும் அவன் அரக்கர்கூட்டத்தையும் அழிக்கவல்லவர்கள். லங்கையில் நான் முழக்கம் செய்துமிருக்கிறேன். 'ராம தூதன் நான். சுக்ரீவனுடைய மந்திரி. உங்களை வதம் செய்ய வந்திருக்கிறேன்' என்று கர்ஜித்திருக்கிறேன். துஷ்டன் ராவணனுடைய





★ செக்ஸை ஒழிப்பதைவிடச் சந்திரனுக்கு மனிதனை அனுப்புவது சுலபம்.

★ நாம் சாப்பிடும் எல்லாப் பொருள்களிலும் கொஞ்சம் கொஞ்சம் டி. டி. டி. மருந்து இருக்கும்.

★ நகரங்களில் கவலையின்றி ஒன்று மிகப் பெரிய பணக்காரர்கள் வசிக்க முடியும்; அல்லது பரம ஏழைகள் வசிக்க முடியும்.

★ கார் ஓட்டுவதைவிட விமானம் ஓட்டுவது ஆபத்து குறைவானது.

★ இருதயங்களை மாற்றலாமேதவிர ஜலதோஷத்தைப் போக்க முடியாது.

★ ஒரிஜினல் ஜோக்குகள் என்பது இனிமேல் கிடையாது.

'டைம்' -- 'முத்து'

நந்தவனத்தில் சிம்சுபா மரத்தடியில் ராக்ஷசிகளால் சூழப்பட்டுச் சிறைப் பட்டுக் கிடக்கிறாள் வைதேகி என்கிற அந்தப் பதிவிரதா தேவி. மேகங்களால் மூடப்பட்டுத் தெரிந்தும் தெரியாமலும் இருக்கிற சந்திரனைப் போல் அசோக வனத்தில் சிறைப்பட்டுக் கிடக்கிறாள். எப்போது ராமன் வருவான் வருவான் என்று அவள் தியானமாகவே வேறு எதையும் சிந்திக்காமல் வாடி வதங்கித் தவமிருந்து வருகிறாள். கொடிய ராக்ஷசிகள் அவளைத் துன்புறுத்திக் கொண்டிருப்பதை இந்தக் கண்களால் பார்த்தேன். காட்டில் துன்புறுத்தப் பட்ட மானைப் போல் அந்த வனத்தில் அவலக்ஷண சொரூபங்களான அரக்கி களின் மத்தியில் அகப்பட்டுக் கொண்டு வருந்தி வருகிறாள். அவளுடன் நேரில் நின்று பேசிச் சமாதானப்படுத்தி னேன். 'ராம லக்ஷ்மணர்கள் வரு வார்கள். ராமனால் ராவணன் சீக்கிர மாகவே வதம் செய்யப்படுவான்' என்று சொல்லியிருக்கிறேன். இனிச் செய்ய வேண்டியது என்னவென்று தீர்மானி யுங்கள்'' என்றான்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த அங்கதன் கோபக் கொதிப்புடன் குதித் தெழுந்து, ''நான் ஒருவனே போதும். அப்படியிருக்க நாம் இத்தனை வீரர் களும் இருக்கிறோம். இவ்வளவு நாட் களானபின் நாம் சீதையை அழைத்துப் போகாமல் ராமனிடம் வெறுங்கையா கத் திரும்பிச் செல்வது சரியல்ல. லங்கை சென்று அரக்கர் சேனையையும் ராவ ணனையும் வதம் செய்து சீதையுடன் கிஷ்கிந்தை திரும்புவோம்'' என்றான்.

யுவராஜன் சொன்னதைக் கேட்ட ஜாம்பவான் மெதுவாகப் பேசினான்:

''அப்படியல்ல, என் அன்புக்குரிய ராஜகுமாரனே! நாம் ராம லக்ஷ்மணர் களிடம் விஷயத்தை எல்லாம் சொல்லி அதன் மேல் அவர்கள் சொல்லுவது போல் செய்ய வேண்டும். ராகவ னுடைய காரியத்தை அவர் எண்ணத் தின்படி முடிவு செய்ய வேண்டும். அதுவே முறை'' என்று மிக முதிர்ந்த அறிவுள்ள ஜாம்பவான் சொன்னான்.

இதுவே சரியென்று வானரக் கூட்டம் ஹனுமான் அங்கதன் உள்பட எல்லா ரும் ஒப்புக் கொண்டார்கள். அங் கிருந்து ஆகாயத்தில் கிளம்பி கிஷ் கிந்தை நோக்கி மிக வேகமாகச் சென் றார்கள்.

* * *


வானர ராஜனுடைய நந்தவனத் துக்கு அருகில் இறங்கினார்கள். அந்த வனத்தில் புகுந்து தேன் குடித்துப் பழங்கள் உண்டு, காவற்காரர்கள் என்ன சொன்னாலும் கேட்காமல் அவர்களையும் அடித்து விரட்டி எதேச்சையாக நடந்து கொண்டு தோட்டத்தையும் நாசம் செய்தார்கள். அவர்கள் செய்த களியாட்ட அட்ட காசத்தைப் பொறுக்காத ததிமுகன் — அவன் நந்தவனத்துக்குக் காவலதிகாரி யும், சுக்ரீவனுடைய மாமனும் ஆவான்- வேகமாகச் சென்று அரசனிடம் போய், ''நந்தவனம் பாழாய்ப் போயிற்று. தெற்கே சென்ற வானரர்கள் திரும்பி வந்தவர்கள் அங்கே இறங்கி வெகு மோசமாக நடந்து கொள்கிறார்கள். நான் என்ன சொல்லியும் கேட்க வில்லை. என்னையே அடித்தும் குத்தியும் புறக்கணித்து அவமானப்படுத்தி, இஷ் டப்படி தேன் குடித்து, பழங்கள் பறித்துத் தின்றுவிட்டுப் போதையாகக் கிடக்கின்றார்கள். செடிகளையும் கொடி களையும் நாசமாக்கி விட்டார்கள். இவர்களை உடனே அரசன் தண்டிக்க வேண்டும்'' என்றான்.

சுக்ரீவன் விஷயத்தைக் கண்டு கொண்டான். 'ஹனுமானும் ஜாம்ப வானும் அங்கதனும் காரியசித்தி யடைந்து வந்துவிட்டார்கள், வெற்றி வெறியில் இவ்வாறு செய்திருக்கிறார்கள்' என்று உணர்ந்து கொண்டு லக்ஷ்மண னுக்கு விஷயத்தைச் சொன்னான்.

''ததிமுகனே! உடனே அவர்கள் அனைவரையும் இவ்விடம் வரச் சொல்'' என்று சுக்ரீவன் உத்தரவிட்டதும் ததிமுகனும் நிலைமையை உணர்ந்து மிக வேகமாகவே சென்று அவர்களுக்கு அரசன் உத்தரவைத் தெரியப் படுத்தினான். (தொடரும்)



everest/900e/PP tm


சீங்கக் கழுகு
பெண்ணுருவில் ஒரு 007!
பீட்டர் ஓ டான்னெல்
வெனிஸ் நகருக்கு அருகே அமைதியான லகூனில் ஒரு சிறு தீவு டாஸ்ஸோ. பழங்கால அரண்மனை ஒன்று தீவு முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.
பெல்காரி அரண்மனைக்கு ஒரு படகு வருகிறது.
குட்மார்னிங் மரியோ— மாக்ஸ் எங்கே?
கூரை மேல்!
1689
ஹலோ மாக்ஸ்! சாப்பாட்டுக்கு நேரம் ஆகவில்லையா?
மாடஸ்டி! இரும்புத்தொப்பி அணியாமல் இங்கு வராதே! உளுத்துப்போன கூரைகள் மீது நடக்காதே!
அப்புறம்..இத்தனை கவர்ச்சிகரமாகத் தோற்றமளிக்காதே! என் வேலையெல்லாம் கெடும்!
அடாடாடா..!
கட்டிடக் கலை நிபுணரான இந்த இத்தாலியரின் கவனம் வேலையில் நிலைக்க மாட்டேனென்றால் அதற்குக் காரணம்?
வேறென்ன, உன் அழகு தான்!
1690


கூரையில் தேக்கை யெல்லாம் மாற்றுவது சம்பந்தமாய்க் கண்டிராக்டரிடம் சற்றுப் பேசவேண்டும். பகலுணவை ஒரு மணி நேரம், ஒத்திப் போடுவோமா?
அதாவது இரண்டு மணி நேரம் காத்திரு என்கிறாய்!
மாக்ஸ்! வேலையில் இறங்கி விட்டால் நேரம் போவதே தெரியாது உனக்கு.
இவ்விஷயத்தில் என்னை நானே ஏமாற்றிக் கொள்கிறேன்.
அது சரி, இந்தப் பயங்கரச் சிலையை எப்போது நீக்குவாய்?
சிங்கக் கழுகு தானே? அது பெரிய பிரச்னை.
1691
நாலு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட அரண்மனையை ஒரு பணக்கார இத்தாலியன் வாங்கி, செலவு பாராமல் செப்பனிடத் தீர்மானித்தால்..
இந்த வேலையில் ஏகப்பட்ட பிரச்னைகள் போலிருக்கே
திறமைசாலியும் இளைஞனுமான கட்டிடக் கலை நிபுணனை அமைப்பான்.
அந்த இளைஞன் பிரச்னைகளை எதிர் பார்த்தே காரியத்தில் இறங்குகிறான்.
தன் சிநேகிதியைக் கைவிடும் அளவுக்குப் பிரச்னைகள்! ஹூம், உணவருந்தும் போது பேச்சுத் துணைக்கு நான் வேறு ஆளைத் தேட வேண்டியதுதான்!
1692


வேறு ஆளா? கூடவே கூடாது! மாடஸ்டி! கண்ணே, கரும்பே! இத்தாலிய மொழியில் உள்ள காதல் வார்த்தைகளை யெல்லாம்சொல்லி அழைக்கிறேன். என் அன்பைப் புறக்கணிக்காதே!
இது என்ன கோமாளியாட்டம்? உன் ஆடையெல்லாம் வீணாகும்!
போனால் போகட்டும்! உன் கல்நெஞ்சத்தை உருக வைக்க நான் என்ன செய்ய? அதைச் சொல்!
பாரினி ஹோட்டலில் இரண்டு மணிக்குச் சந்திக்கலாம்.
சரி, அதோடு மத்தியானம் லீவு எடுத்துக் கொண்டும் வருகிறேன், உன்னுடனேயே இருக்க.
1693


கடல் உட்புகுந்து ஏரிபோல் தோன்றிய பகுதியை மாடஸ்டி கடந்து, வெனிஸ் நகரை நெருங்குகிறாள்.
தன் ஜாகையை அடைய வெனிஸின் கால்வாய்ச்சாலைகள் வழியாகப் படகைச் செலுத்துகிறாள்.
இருவன் ஒளிந்திருக்கிறான்; போலீஸ்காரர் தேடுகிறார்!
(தொடரும்)
1694


ஏன் முடியாது?

1920க்கு முன்பாகவே ஆர்தர் பி. டேவிஸ், கொலராடோ நதியின் குறுக்கே ஓர் அணை கட்டுவதன் மூலம் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதுடன் மின்சார உற்பத்திக்கும் விவசாயத்துக்கும் கூட உதவலாம் என்று கனவு கண்டார்.

'கொலராடோ நதியில் அணையா? இதென்ன அசட்டுத்தனம்?' என்று பல பொறி இயல் நிபுணர்களும் பூமி சாஸ்திர அறிஞர்களும் எச்சரிக்கை விடுத்தார்கள். கொலராடோவில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டால் அணையை அடித்துக்கொண்டு போய் விடும் என்றும், நிவேடா, கலிபோர்னியா மாநிலங்களில் பாதிக்கு மேல் நீரில் மூழ்கிப் போகும் என்றும் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

ஆயினும் 1930ல் அமெரிக்க அரசு இந்த முயற்சியைத்

அஸ்திவாரம் 70 லட்சம் டன்!



தொடங்கியது. அணைக்கான அஸ்திவாரமாகக் கொட்டப்பட்ட கான்கிரீட் கலவையின் எடை ஏழு மிலியன் டன். இந்த அளவுக்கு எடை உலகில் வேறு எந்த இடத்திலும் குவிக்கப்பட்டது கிடையாது. ஒரு நாளைக்கு இருபத்து நாலு மணி நேரம் வருஷத்துக்கு 365 நாள் என்ற ரீதியில் இரண்டு வருஷங்களுக்கு விடாமல் கான்கிரீட்டைக் கொட்டினார்கள். தாற்காலிகச் சுவர் எழுப்பி நீரோட்டத்தை இருபுறமும் மலையைக் குடைந்து ஏற்படுத்தியிருந்த குகைப் பாதை வழியே திருப்பி விட்டிருந்தார்கள். இதனால்

அணை கட்டுமிடத்தில் தொழிலாளர்கள் இருந்த நிலைக்கு மேலாக ஐம்பதடி உயரம் வரை நீர் மட்டம் தாற்காலிகச் சுவருக்குப் பின்னால் மேலெழும்பித் ததும்பிக் கொண்டிருந்தது! எந்த விநாடியும் ஆபத்துக்கு உள்ளாகக் கூடிய சூழலில் அஞ்சாமல் கடமையாற்றிய தொழிலாளர்களில் தொண்ணூற்று எட்டுப் பேர் ஸ்தலத்தில் ஏற்பட்ட ஒரு விபத்தில் உயிர் துறந்தார்கள்.

1936ல் ஹூவர் அணை கட்டி முடிக்கப்பட்டு விட்டது. பொறி இயல் துறையில் ஓர் அற்புத சாதனையாக இன்னும் விளங்குகிறது.

ஹூவர் அணை கட்டப்பட்டபோது அங்கு பணியாற்றிய மிஸ்டர் மூர் சொல்கிறார்: "ஒரே உஷ்ணம்! ஒரு நாளைக்கு ஐந்து காலன் தண்ணீர் குடிப்போம்! ஆடைகளைச் சுத்தப்படுத்துவது என்பது நடக்காத காரியம். வீட்டுக்குத் திரும்பியதும் பாண்ட், ஷர்ட் முதலானவற்றைக் கழற்றி ஒரு மூலையில் வைப்பேன். வியர்வையில் உளுதி உப்பு ஏறியிருந்ததால் உடை விறைப்பாக நிற்கும்! மறுநாள் காலை அதையே போட்டுக் கொண்டு போய் விடுவேன்!"

கைன் என்பவர் கூறுகிறார்: "நானும் என் நண்பன் ஒருவனும் அணைக்கு மேலே கயிற்றால் கட்டப்பட்டுத் தொங்கியபடியே காரியத்தைக் கவனித்துக் கொண்டிருந்தோம். என் நண்பனின் கயிற்றில் போடப்பட்டிருந்த முடிச்சு கொஞ்சம் தளர்ந்து விட்டது! கீழே ஐந்நூறு அடி பள்ளம்! இந்நிலையில் முடிச்சு தளர்ந்தால் எப்படி இருக்கும்? மெய் சிலிர்த்துப் போயிற்று. 'என்னைக் கை விடாதே! கை விடாதே!' என்று என் நண்பன் கெஞ்சினான். நான் சட்டென்று திரும்பிப் பார்த்தேன். அவன் பேசியது என்னிடம் அல்ல; இலேசாகத் தளர்ந்து விட்டிருந்த முடிச்சுடன்தான் அப்படிப் பேசிக் கொண்டிருந்தான்!"

* * *

அமெரிக்காவில் தனியார் துறையில் டெலிபோன்கள் உள்ளன. பெல் டெலிபோன் ஸ்தாபனம் நாளுக்கு நாள் டெலிபோன்

நடவாத காரியம் நடந்து விட்டது! — ஹூவர் அணை மனிதன் மனம் வைத்தால் முடியாதது இல்லை என்பதை நூற்றுக்கு நூறு தெளிவாக்குகிறது.

வசதிகளை மக்களுக்கு விஸ்தரித்துக் கொண்டே போவதுடன் ஆராய்ச்சிகள் பல புரிந்து நூதனமான புதுரக டெலிபோன்களையும் தயாரிக்கிறது. அதே நேரத்தில் டெலிபோன் கட்டணங்களும் அமெரிக்காவில் படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்திருக்கின்றன!

பெல் டெலிபோன் விளம்பர நோக்கில் ஒரு டெலிவிஷன் நிகழ்ச்சியைத் தயாரித்துள்ளது. "டெலிபோனில் பேசுங்கள், அடிக்கடி பேசுங்கள்" என்று இந்த நிகழ்ச்சியின் போது இடையிடையே விளம்பரம் செய்யப்பட்டாலும் நிகழ்ச்சி மிகவும் பயனுள்ள ஒன்றாகும். நடக்கவே நடக்காது என்று கருதப்படும் பல காரியங்கள், மனிதன் மனம் வைத்து முனைந்தால் நடந்தேறும் என்பதை உணர்த்தும் இந்த நிகழ்ச்சியில் ஒரு காட்சியே மேலே நீங்கள் படித்த ஹூவர் அணையின் கதை.

பொன்னியின் செல்வன்

ஐந்தாம் அத்தியாயம்

தாயைப் பிரிந்த கன்று



இளவரசர் புத்த பிக்ஷுவையும் தூக்கிக் கொண்டு முருகய்யன் கொண்டு வந்து நிறுத்திய படகிலே குதித்தார். அவர் குதித்த வேகத்தில் அந்தச் சிறிய படகு பேயாட்டம் ஆடியது. ஒரு கணம் கவிழ்ந்துவிடும் போலவும் இருந்தது. முருகய்யன் மிகப் பிரயத்தனப்பட்டுப் படகு கவிழாமல் காப்பாற்றினான்.

''முருகய்யா! இனிமேல் படகை விடு! ஆனை மங்கலம் அரண்மனைக்கு விடு!'' என்று பொன்னியின் செல்வர் உரத்த குரலில் கூவினார். அச்சமயம் உச்ச நிலையை அடைந்திருந்த புயற் காற்றும் புயலினால் பொங்கி வந்த கடலும் போட்ட இரைச்சலினால் அவர் கூறியது முருகய்யன் காதில் விழவில்லை. ஆயினும் இளவரசரின் முகத் தோற்றத்திலிருந்து அவருடைய விருப்பத்தை அறிந்து கொண்ட முருகய்யன் படகைச் செலுத்தத் தொடங்கினான். சூடாமணி விஹாரத்தின் முழுகிக் கொண்டிருந்த மண்டபச் சிகரங்களின் மீதும் புத்தர் சிலைகளின் மீதும் மோதாமல் படகைச் செலுத்துவது மிகவும் கடினமாயிருந்தது. முருகய்யன் பெரும் புயலிலும் சுழிக் காற்றிலும் நடுக் கடலில் படகு செலுத்திப் பழக்கப்



பட்டவனாதலால் வெகு லாகவமாகச் செலுத்திக் கொண்டு போனான். அதைப் பார்த்து இள வரசர் வியந்தார். அவ னுக்குச் சற்று உதவி செய்ய லாம் என்று அவருக்குத் தோன் றியது. ஆனால் புத்த பிக்ஷுவைப் பிடித்திருந்த பிடியைவிட்டுவிடத் தயங்கினார். அதற்கு ஏற்றாற் போல், திடீ ரென்று பிக்ஷு இளவரசருடைய பிடியி லிருந்து விடுவித்துக் கொள்ளப் பிரயத்தனம் செய்தார். அச்சமயம் படகு புத்த பகவானின் சிலையின் அருகே போய்க் கொண்டிருந்தது. இப்போது கடல் வெள்ளம் அச்சிலையின் கண்கள் வரையில் ஏறியிருந்தது. இன்னும் சில நிமிடங்களில் சிலையே மூழ்கி விடும் என்ப தில் ஐயமில்லை.

இளவரசர் பிக்ஷுவை இறுகப் பிடித்துக் கொண்டார். பார்ப்பதற்கு மிக மென்மை யான தேகம் உடையவராகக் காணப்பட்ட இளவரசரின் கரங்களில் எவ்வளவு வலிமை இருந்தது என்பதை அறிந்து பிக்ஷு வியந் தார் என்பதை அவருடைய முகத் தோற்றம் காட்டியது. நெஞ்சிலே உரம் இருந்தால், உடலிலும் வலிமை உண்டாகும்

போலும்! இத்தனைக்கும் பல நாட்கள் சுரத்தினால் மெலிந்திருந்த உடம்பு!

புத்தரின் சிலையைத் தாண்டிப் படகு போயிற்று. முழுகிக் கொண்டிருந்த அச்சிலையைப் பிக்ஷு பார்த்துக் கொண்டேயிருந்தார். சிலை விரைவில் மறைந்தது. பிக்ஷுவின் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் பெருகியோடியது.

"இளவரசே! என்ன காரியம் செய்தீர்?" என்றார் பிக்ஷு. அவருடைய உதடுகளின் அசைவிலிருந்து என்ன சொல்கிறார் என்பதைத் தெரிந்து கொண்ட இளவரசர் பிக்ஷுவின் காதின் அருகில் குனிந்து, "சுவாமி! அந்தக் கேள்வியை நான் அல்லவா கேட்க வேண்டும்? என்ன காரியம் செய்யத் துணிந்தீர்கள்?" என்றார்.

"இளவரசே! இந்த விஹாரம் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து இங்கே இருந்து வருகிறது. மகானாகிய தர்மபாத முனிவரின் காலத்திலேகூட இருந்தது. வீர சைவர்களான பல்லவ சக்கரவர்த்திகள் இதை அழிக்காமல் விட்டு வைத்தார்கள். அப்படிப்பட்ட புராதன விஹாரம் என் காலத்தில், என் கண் முன்னால், முழுகிவிட்டது. செங்கல் திருப்பணியிலான இந்த விஹாரம் இந்தக் கடல் வெள்ளத்துக்குத் தப்ப முடியாது. வெள்ளம் வடிந்த பிறகு சில குட்டிச்சுவர்களே மிச்சம் இருக்கும்! விஹாரம் போனபிறகு நான் மட்டும் எதற்காக உயிரோடு இருக்க வேண்டும்?" என்றார் பிக்ஷு.

"விஹாரம் இடிந்து அழிந்தால் மறுபடியும் திருப்பணி செய்து கட்டிக் கொள்ளலாம். புத்த பகவானுடைய சித்தமிருந்தால் நானே திரும்பவும் கட்டிக் கொடுப்பேன். தாங்கள் போய்விட்டால் என்றால் தங்களைத் திருப்பிக் கொண்டு வர முடியாதே?" என்றார் இளவரசர் அருள்மொழிவர்மர்.

கடலும் புயலும் சேர்ந்து போட்ட இரைச்சலினால் அவர்களால் மேலும் தொடர்ந்து விவாதம் செய்ய முடியவில்லை. மற்றும், சுற்றுப்புறங்களில் நாலா புறத்திலும் அவர்கள் கண்ட கோரக் காட்சிகள் அவர்களைப் பேச முடியாதபடி செய்து விட்டன.

முறிந்த பாய்மரங்களுடனே பெரிய பெரிய நாவாய்களும் சின்னஞ் சிறு மீன் பிடிக்கும் படகுகளும் கடற்பக்கத்திலிருந்து கரையை நோக்கி வந்து கொண்டிருந்தன. அவற்றில் பல கரை தட்டியும், கட்டடங்களின் மேல் மோதியும், பேயாட்டம் ஆடிய மரங்களின் மீது இடித்துக் கொண்டும், சுக்குநூறாக நொறுங்கி விழுந்தன.

பெருங் காற்றில் வீடுகளின் கூரைகள் அப்படியே பிய்த்துக் கொண்டு பறந்து சென்று வெள்ளத்தில் விழுந்தன.

வேறு சில கூரைகள் மிதந்து கொண்டிருந்தன. அவற்றில் சிலவற்றில் மனிதர்கள் மிகுந்த சிரமத்துடன் தொத்திக் கொண்டிருந்தார்கள். 'ஓ'வென்று அவர்கள் ஓலமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

பெரிய பெரிய மரங்கள் காற்றில் முறிந்து விழுந்தன. முறிந்த மரங்களில் சில மிதந்து மிதந்து சென்றன. மிதந்த மரங்களைப் பிடித்துக் கொண்டு சில மனிதர்கள் உயிர் தப்ப முயன்றார்கள்.

ஆடுமாடுகள் வெள்ளத்தில் அலறிக் கொண்டு மிதந்து சென்றன.

இத்தகைய கோரமான காட்சிகளைப் பார்த்துப் பார்த்து இளவரசரும் பிக்ஷுவும் மனங் கசிந்தார்கள். அந்த நிலைமையில் தங்களால் ஒன்றும் உதவி செய்ய முடியவில்லையே என்ற எண்ணம் அவர்களுடைய வேதனையை அதிகப்படுத்தியது.

* * *

முருகய்யன் அப்பால் இப்பால் பார்க்காமல் படகைச் சர்வ ஜாக்கிரதையாகச் செலுத்திக் கொண்டு சென்றான்.

சூடாமணி விஹாரம் நாகைப்பட்டினத்தில் கடற்கரையோரமாக இருந்தது. அங்கிருந்து கால்வாய் சிறிது தூரம் வரையில் தெற்குத் திசையை நோக்கிச் சென்றது. பிறகு தென்மேற்காக அரைக் காதம் வரையில் சென்று, அங்கிருந்து மீண்டும் திரும்பித் தென் திசையில் நேராகச் சென்றது. இந்த இரண்டாவது திருப்பத்தின் முனையிலே தான் ஆனைமங்கலம் அரண்மனை இருந்தது.

வழி நடுவில் இருந்த நந்தி மண்டபத்தின் அருகில் படகு வந்தபொழுது நந்தி முழுதும் முழுகியிருந்தது மட்டுமல்லாமல் மேல் மண்டபத்தின் விளிம்பைத் தொட்டுக் கொண்டு வெள்ளம் சென்றது. மண்டபத்துக்கு அப்பால் நாலாபுறமும் பரவியிருந்த தென்னந் தோப்புகளில் முக்கால்வாசி மரங்கள் காற்றினால் முறிந்து விழுந்து விட்டன. மிஞ்சியிருந்த மரங்களின் உச்சியில் மட்டைகள் ஆடியது தலைவிரிகோலமாகப் பேய்கள் ஆடுவது போலவே இருந்தது. அவற்றில் சில மட்டைகள் காற்றினால் பிய்க்கப்பட்டு வெகு தூரத்துக்கு அப்பால் சென்று விழுந்தன.

நந்தி மண்டபத்தின் உச்சியில் தாயைப் பிரிந்த கன்றுக்குட்டி ஒன்று எப்

படியோ வந்து தொத்திக் கொண்டிருந்தது. அது நாலாபுறமும் பார்த்துப் பார்த்து மிரண்டு விழித்தது. உடம்பை அடிக்கடி சிலிர்த்துக் கொண்டது. அதன் கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. அந்தக் கன்று 'அம்மா' என்று எழுப்பிய ஈனக் குரல் படகில் சென்று கொண்டிருந்தவர்களின் காதில் இலேசாக விழுந்தது. ''ஐயோ, பாவம்! தாயைப் பிரிந்த இந்தக் கன்றின் கதி என்ன ஆகுமோ?'' என்று இளவரசர் எண்ணிய அதே சமயத்தில், ஒரு பெரிய தென்னை மரம் திடீரென்று முறிந்து மண்டபத்தின் பின்புறத்தில் விழுந்தது. சிறிது முன்பக்கமாக விழுந்திருந்தால் கன்றுக்குட்டியின் மேலேயே அது விழுந்திருக்கும்.

மரம் விழுந்த வேகத்தினால் தண்ணீரில் ஒரு பெரிய அலை கிளம்பி மண்டபத்தின் மேலே தாவி வந்தது. முன்னமே நடுங்கிக் கொண்டிருந்த கன்றுக்குட்டி அந்த அலையைச் சமாளிக்க முடியாமல் தடுமாறி விழுந்தது. மண்டபத்தின் உச்சியிலிருந்து அலையினால் அது வெள்ளத்தில் உந்தித் தள்ளப்பட்டுத் தத்தளித்தது.

இளவரசர் இதுவரையில் புத்தபிக்ஷுவைத் தம் கரங்களினால் பிடித்துக் கொண்டிருந்தார். கன்றுக்குட்டி மண்டபத்தின் உச்சியிலிருந்து உந்தித் தள்ளப்பட்டதைப் பார்த்ததும், 'ஆகா' என்று சத்தமிட்டுப் பிக்ஷுவைப் பிடித்துக் கொண்டிருந்த பிடியை விட்டார். பிக்ஷு அந்தக் கணமே வெள்ளத்தில் குதித்தார்.

படகோட்டி முருகய்யன் துடுப்பைப் படகில் போட்டுவிட்டு இளவரசரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். அவனை இளவரசர் கடுங்கோபத்துடன் பார்த்துவிட்டு, ''விடு!'' என்று கையை உதறினார். அதற்குள் பிக்ஷு இரண்டு எட்டில் நீந்திச் சென்று கன்றுக்குட்டியின் முன்னங்கால்கள் இரண்டையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

கன்றுக் குட்டியும் உயிர் மீதுள்ள இயற்கையான ஆசையினால் தலையை மட்டும் தண்ணீருக்கு வெளியே வைத்துக் கொண்டிருக்கப் பிரயத்தனப்பட்டது. பிக்ஷு கன்றுக் குட்டியைப் பிடித்து இழுத்துக் கொண்டு படகை நோக்கி வந்தார். இளவரசர் அவருக்குக் கைகொடுத்து உதவினார். இருவருமாகச் சேர்ந்து முதலில் கன்றுக் குட்டியைப் படகில் ஏற்றினார்கள். பின்னர், இளவரசரின் உதவியினால் ஆச்சாரிய பிக்ஷுவும் படகில் ஏறிக் கொண்டார்.

இத்தனை நேரம் எப்படியோ சமாளித்துக் கொண்டிருந்த கன்றுக் குட்டி, படகு ஓர் ஆட்டம் ஆடியதும், கால் தடுமாறித் தொப்பென்று விழுந்தது. நல்ல வேளையாக, படகின் உட்புறத்திலேதான் விழுந்தது. பிக்ஷு அதன் அருகில் உட்கார்ந்தார். கன்றின் தலையைத் தம் மடி மீது எடுத்து வைத்துக் கொண்டு அதைத் தடவிக் கொடுக்கத் தொடங்கினார்.

''குருதேவரே! சற்று முன்னால் சூடாமணி விஹாரத்தில் புத்த பகவானின் சரணங்களைப் பிடித்துக் கொண்டு பிராணத் தியாகம் செய்யப் பார்த்தீர்களே? அப்படித் தாங்கள் செய்திருந்தால், இந்த வாயில்லா ஜீவனை இப்போது காப்பாற்றியிருக்க முடியுமா?'' என்று இளவரசர் கேட்டார்.

''ஐயா! நான் செய்ய இருந்த குற்றத்தைச் செய்யாமல் தடுத்தீர்கள். அதற்காக நன்றி உடையேன்! ஆம்; இந்தக் கன்றின் உயிரைக் காப்பாற்றியது என் மனத்துக்கு நிம்மதி அளிக்கிறது. சூடாமணி விஹாரம் இடிந்து தகர்ந்து போய்விட்டால்கூட இனி அவ்வளவு கவலைப்படமாட்டேன்'' என்றார் பிக்ஷு.

''ஆச்சாரியரே! ஒரு கன்றின் உயிரைக் காப்பாற்றியதனாலே எப்படி மன நிம்மதி பெறுகிறீர்கள்? இன்று இந்தப் புயலினால் எவ்வளவு ஜீவன்கள் எவ்வளவு கஷ்டப்படுகின்றன? எவ்வளவு ஆயிரக் கணக்கான மக்கள், — ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிகர்கள், — கஷ்டப்படுவார்கள்? எத்தனை வாயில்லா ஜீவன்கள்,—ஆடு மாடுகள், குதிரைகள், பறவைகள், — உயிரை இழக்க நேரிடும்? இந்தத் துன்பங்களுக்கெல்லாம் பரிகாரம் என்ன?'' என்று கேட்டார் இளவரசர்.

''ஐயா! நம்மால் இயன்றதைத்தான் நாம் செய்யலாம். அதற்கு மேல் நாம் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. இயற்கை உற்பாதங்களைத் தடுக்கும் சக்தி நமக்கு இல்லை. புயற்காற்றை நாம் கட்டுப்படுத்த முடியுமா? பெருமழையைத் தடுக்க முடியுமா? அல்லது மழை பெய்யும்படி செய்யத்தான் முடியுமா? கடல் பொங்கி வரும்போது அதை நாம் தடுத்து நிறுத்திவிட முடியுமா? ஆகா! கடல்களுக்கு அப்பால் உள்ள கீழைத் தேசங்களில் எரிமலை நெருப்பைக் கக்குவதையும் பூகம்பம் நேர்ந்து பூமி பிளப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். அவற்றுக்கெல்லாம் நாம் என்ன செய்யலாம்? நம் கண் முன்னால் கஷ்டப்பட்டுத் தவிக்கும் ஜீவனுக்கு உதவி செய்யத்தான் நம்மால் முடியும்!''

''குருதேவரே! இயற்கை உற்பாதங்கள் ஏன் உண்டாகின்றன?

புயற்காற்றும் பூகம்பமும் ஏன் நிகழ்கின்றன? கொள்ளை நோய்கள் ஏன் வருகின்றன? அவற்றினால் மக்களும் மற்றப் பிராணிகளும் அடையும் துன்பங்களுக்குப் பொறுப்பாளி யார்? நம்மால் இயற்கையின் உற்பாதங்களைத் தடுக்க முடியாது. ஆனால் கடவுளால்கூட முடியாதா? கடவுள் ஏன் இத்தகைய இயற்கை உற்பாதங்களைத் தடுக்காமல் ஜீவராசிகள் இவற்றினால் கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்?'' என்று இளவரசர் கேட்டார்.

''பொன்னியின் செல்வ! தாங்கள் இப்போது கேட்ட கேள்விக்கு, ஆதிகாலம் முதல் மகான்களும் முனிவர்களும் விடை சொல்ல முயன்றிருக்கிறார்கள். ஆனால் அவை எல்லாருக்கும் திருப்தி அளிப்பதாக இல்லை. ஆகையினாலேயே புத்த பகவான் கடவுளைப் பற்றி ஏதும் சொல்லவில்லை. கடவுளைப் பற்றிய ஆராய்ச்சியிலேயே இறங்கவில்லை. 'பிறருக்கு உதவி செய்யுங்கள். பிறருடைய கஷ்டங்களைப் போக்க முயலுங்கள். அந்த முயற்சியிலேதான் உண்மையான ஆனந்தம் அடைவீர்கள். அதிலிருந்து சுகதுக்கங்களைக் கடந்த நிர்வாண நிலையை அடைவீர்கள்!' என்று புத்த பகவான் போதித்தார்'' என்று பிக்ஷு கூறினார்.

படகு நந்தி மண்டபத்திலிருந்து மேற்குத் திசையில் திரும்பி ஆனைமங்கலத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

பொன்னியின் செல்வரின் உள்ளம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தது. சற்றுமுன் பிக்ஷு வெளியிட்ட புத்த சமயக் கொள்கையோடு தமது முன்னோர்களின் சமயக் கொள்கையை அவர் மனத்துக்குள் ஒப்பிட்டுப் பார்த்தார். பிறருக்கு உதவி செய்யும் கடமையைச் சைவ வைஷ்ணவ சமயங்களும் வற்புறுத்துகின்றன. 'பரோபகாரார்த்தம் இதம் சரீரம்' என்ற மகா வாக்கியமும் இருக்கிறது. ஆனால் அதேசமயத்தில் கடவுளிடம் நம்பிக்கை வைத்துப் பக்தி செய்யும் கடமையையும் நம் முன்னோர் வற்புறுத்தியிருக்கிறார்கள். கடவுளைச் சம்ஹாரமூர்த்தியான ருத்திரனாகவும் கருணாமூர்த்தியான மகாவிஷ்ணுவாகவும் உருவம் கொடுத்துப் போற்றியிருக்கிறார்கள். கடவுளுக்கு ஜகன்மாதா உருவம் கொடுத்து, ஒரே சமயத்தில் அன்பே வடிவான உமாதேவியாகவும் கோர பயங்கர துர்க்காபரமேசுவரியாகவும் வர்ணித்துத் தோத்திரம் செய்திருக்கிறார்கள். இந்தக் கொள்கைகளில் எது உண்மை? உலகத்தின் அன்னை கோர பயங்கர ரணபத்திர காளியாக இருக்க முடியுமா? ஏன் இருக்க முடியாது? பெற்ற குழந்தையை ஒரு சமயம் தாயார் அன்புடன் கட்டித் தழுவிக் கொஞ்சுகிறாள். இன்னொரு சமயம் கோபித்துக் கொண்டு அடிக்கவும் செய்கிறாள். ஏன் அடிக்கிறாள் என்பது சில சமயம் குழந்தைகளுக்குப் புரிவதில்லை. அடிக்கும் தாயாருக்குத் தான் பெற்ற குழந்தையிடம் அன்பு இல்லை என்று சொல்ல முடியுமா?....

இருட்டுகிற சமயத்தில் படகு ஆனைமங்கலத்திலிருந்த சோழ மாளிகையை அணுகியது. பொங்கி வந்த கடல் அந்த மாளிகையை எட்டவில்லை என்பதைப் படகில் வந்தவர்கள் கண்டார்கள். அரண்மனைக்கு அருகில் அமைந்திருந்த அலங்காரப் படித்துறையில் கொண்டு போய் முருகய்யன் படகை நிறுத்தினான்.

அதுவரைக்கும் இயற்கையும் படகில் சென்றவர்களிடம் ஓரளவு கருணை செய்தது. பெரும் புயல் அடித்துக் கடல் பொங்கி வந்தாலும் பெரு மழை மட்டும் பெய்யத் தொடங்கவில்லை. சிறு தூற்றலோடு நின்றிருந்தது.

படகு அரண்மனை ஓரத்தில் வந்து நின்றபிறகுதான் பெரு மழை பிடித்துக் கொண்டு பெய்ய ஆரம்பித்தது.

ஆனைமங்கலத்து அரண்மனைக் காவலன் அரண்மனையின் முன் வாசலில் கையில் ஒரு தீவர்த்தியைப் பிடித்துக் கொண்டு நின்றான். சுற்றுப்புறங்களிலிருந்து அன்றிரவு அடைக்கலம் புகுவதற்காக ஓடி வந்திருந்த ஜனங்களோடு அவன் பேசிக் கொண்டிருந்தான்.

படகு ஒன்று வந்து படித்துறையில் நின்றதைக் கண்டதும் காவலன் தீவர்த்தியைத் தூக்கிப் பிடித்தான். பொன்னியின் செல்வரின் திருமுகம் அவன் கண்ணில் பட்டது. உடனே மற்றதையெல்லாம் மறந்துவிட்டுப் படித்துறையை நோக்கி ஓட்டமாக ஓடினான்.

இதற்குள் படகிலிருந்து இளவரசரும் ஆச்சாரிய பிக்ஷுவும் படிக்கட்டில் இறங்கினார்கள். கன்றை மெள்ளப் பிடித்துக் கரையில் இறக்கி விட்டார்கள்.

காவலன் இளவரசரின் காலில் விழப் போனான். அவர் அவனைப் பிடித்துத் தடுத்தார். காவலன் கையிலிருந்த தீவர்த்தி கால்வாயில் விழுந்து ஒரு கணம் சுடர்விட்டு எரிந்து விட்டு மறைந்தது.

''இளவரசே! சூடாமணி விஹாரத்தைப் பற்றி நானே கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். தாங்கள் இங்கே

வந்து விட்டது! மிகவும் நல்லதாய்ப் போயிற்று'' என்றான் காவலன்.

''நான் சூடாமணி விஹாரத்தில் இருப்பது உனக்குத் தெரியுமா?''

''தெரியும், ஐயா! இளையபிராட்டியும் கொடும்பாளூர் இளவரசியும் வந்திருந்த போது தெரிந்து கொண்டேன். யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று இளையபிராட்டி பணித்து விட்டுச் சென்றார்.''

''அதை இன்னமும் நீ நிறைவேற்றத் தான் வேண்டும். மாளிகை வாசலில் கூடியிருப்பவர்கள் யார்?''

''கடற்கரையோரத்துக் கிராமங்களில் கடல் புகுந்து விட்டதால் ஓடி வந்தவர்கள். இரவு தங்குவதற்கு இடம் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அச் சமயம் தாங்கள் வந்தீர்கள். அவர்களை விரட்டி விடுகிறேன்.....''

''வேண்டாம்! வேண்டாம்! அவர்கள் எல்லாருக்கும் இருக்கவும் படுக்கவும் இடங் கொடு. உணவுப் பொருள்கள் இருக்கும் வரையில் சமையல் செய்து சாப்பிடவும் கொடு. ஆனால் என்னைப் பற்றி அவர்களிடம் சொல்ல வேண்டாம். உன் திவர்த்தி கால்வாயில் விழுந்து அணைந்ததும் நல்லதாய்ப் போயிற்று. எங்களை வேறு வழியாக அரண்மனை மேன்மாடத்துக்கு அழைத்துக் கொண்டு போ!'' என்றார் இளவரசர்.

அவர்கள் அரண்மனைக்குள் பிரவேசித்ததும் புயற் காற்றோடு பெரு மழையும் சேர்ந்து 'சோ' என்று கொட்டத் தொடங்கியதும் சரியாயிருந்தன.

ஆறாம் அத்தியாயம்

முருகய்யன் அழுதான்!

தஞ்சை நகருக்கு அருகில், மந்தாகினி ஏறியிருந்த பல்லக்கின் பின்னால் மரம் முறிந்து விழுந்த அதே தினத்தில், வீர நாராயண ஏரியில் காற்று அடித்துக் கரையோரமிருந்த படகு நகர்ந்துபோன அதே நேரத்தில், நாகைப்பட்டினத்தில் நிகழ்ந்த சம்பவங்களையே சென்ற அத்தியாயங்களில் கூறினோம் என்பதை நேயர்கள் அறிந்திருப்பார்கள்.

அன்றிரவு முழுவதும் நாகைப்பட்டினமும் அதன் சுற்றுப்புறங்களும் ஒரே அல்லோகல்லோலமாக இருந்தன. அவரவர்களும் உயிர் பிழைத்திருந்தால் போதும் என்ற நிலைமையில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வதும் இயலாத காரியமாயிருந்தது. ஆயினும் புத்த பிக்ஷுக்கள் நாகைப்பட்டினத்தின் வீதிகளில் அலைந்து ஜனங்களுக்கு இயன்றவரை உதவிபுரிந்து வந்தார்கள்.

அதே இரவில் ஆச்சாரிய பிக்ஷுவும் பொன்னியின் செல்வரும் ஆனைமங்கலம் சோழ மாளிகைக்குள் வெகுநேரம் கண் விழித்திருந்து பேசிக் கொண்டிருந்தார்கள். இந்தக் கடும் புயலினால் கடல் பொங்கியதால் கடற்கரையோரத்து மக்கள் எவ்வளவு கஷ்டநஷ்டங்களுக்கு உள்ளாவார்கள் என்பதைப் பற்றிப் பேசிப் பேசிக் கவலைப்பட்டார்கள்.

அரண்மனை மணியக்காரனை இளவரசர் அழைத்து அரண்மனைக் களஞ்சியங்களில் தானியம் எவ்வளவு இருக்கிறது என்றும், பொக்கிஷத்தில் பணம் எவ்வளவு இருக்கிறது என்றும் விசாரித்தார். களஞ்சியங்கள் நிறைய தானியம் இருந்தது என்று தெரிந்தது. திருநாகைக் காரோணத்தில், நீலாயதாட்சி அம்மனின் ஆலயத்தைப் புதுப்பித்துக் கருங்கல் திருப்பணி செய்வதற்காகச் செம்பியன்மாதேவி அனுப்பி வைத்த பொற்காசுகள் பன்னிரண்டு செப்புக் குடங்கள் நிறைய இருப்பதாகவும் தெரிந்தது.

''குருதேவரே! புத்த பகவானுடைய சித்தத்துக்கு உகந்த கைங்கரியத்தைத் தாங்கள் செய்வதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன. அரண்மனைக் களஞ்சியங்களில் உள்ள தானியம் முழுவதையும் ஏழைகளுக்கு உணவளிப்பதில் செலவிடுங்கள். செப்புக் குடங்களில் உள்ள பொற்காசுகள் அவ்வளவையும் வீடு இழந்தவர்களுக்கு விநியோகம் செய்யுங்கள்!'' என்றார் இளவரசர் பொன்னியின் செல்வர்.

''அது எப்படி நியாயம் ஆகும்? தானியத்தையாவது விநியோகிக்கலாம். தங்கள் பெரிய பாட்டியார், செம்பியன் மாதேவியார், ஆலயத் திருப்பணிக்காக அனுப்பியுள்ள பணத்தை வேறு காரியத்துக்காகச் செலவு செய்யலாமா? அந்த மூதாட்டி வருத்தப்பட மாட்டாரா?'' என்றார் ஆச்சாரிய பிக்ஷு.

''ஆச்சாரியரே! என் பெரிய பாட்டியாருக்கு நான் சமாதானம் சொல்லிக் கொள்வேன். இப்பொழுது இந்தப் பணத்தை ஏழை எளியவர்களின் துய

ரத்தைத் துடைப்பதற்காகச் செலவு செய்வேன். வருங்காலத்தில் என் பாட்டியாரின் உள்ளம் மகிழ்ந்து பூரிக்கும்படி இந்தச் சோழ நாடெங்கும் நூறு நூறு சிவாலயங்களை எழுப்பிக் கொடுப்பேன். பெரிய பெரிய கோபுரங்களை அமைப்பேன். இந்த மாதிரி கடல் பொங்கி வந்தாலும் முழுக அடிக்க முடியாத உயரமுள்ள ஸ்தூபிகளை எழுப்புவேன். தஞ்சைமாநகரில் தக்ஷிண மேரு என்று சொல்லும்படி விண்ணை அளாவும் உயரம் பொருந்திய கோபுரத்துடன் பெரியதொரு கோயிலைக் கட்டுவேன். ஐயா! இன்று முழுகிப்போன சூடாமணி விஹாரம் மண்ணோடு மண்ணாய்ப் போனாலும் கவலைப்பட வேண்டாம். அதற்கு அருகில் கருங்கல்லினால் திருப்பணி செய்து பிரளயம் வந்தாலும் அசைக்க முடியாத மற்றொரு பெரிய சூடாமணி விஹாரத்தை எழுப்பிக் கொடுப்பேன்!'' என்று இளவரசர் ஆவேசம் ததும்பக் கூறினார்.

''பொன்னியின்செல்வ! வருங்காலத்தைப் பற்றித் தாங்கள் இத்தனை உற்சாகத்துடன் பேசுவது எனக்கு மிக்க மகிழ்ச்சி தருகிறது!'' என்றார் பிக்ஷு.

''ஆம், ஆம்! இந்த உலகில் நான் ஜீவித்திருந்து ஏதோ பெரிய காரியங்கள் செய்ய வேண்டும் என்பது இறைவனுடைய சித்தம். ஆகையினாலேயே என் உயிருக்கு நேர்ந்த எத்தனையோ அபாயங்களிலிருந்து என்னைக் காப்பாற்றியிருக்கிறார். இன்றைக்குக்கூடப் பாருங்கள், இந்த முருகய்யன் எப்படியோ நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தான். இல்லாவிடில் தாங்களும் நானும் சூடாமணி விஹாரத்துக்குள்ளேயே இருந்திருப்போம். கடல் பொங்கி வந்து இவ்வளவு சீக்கிரத்தில் விஹாரத்தை முழுக அடித்து விடும் என்று எண்ணியிருக்க மாட்டோம்....''

'' அது உண்மைதான். ஐந்நூறு ஆண்டுகளாக நடவாத சம்பவம் இன்று பிற்பகலில் ஒரே முகூர்த்த நேரத்தில் நடந்துவிடும் என்று யார் எதிர் பார்த்திருக்க முடியும்? கருணைக் கடலாகிய புத்த பகவான் பொங்கி வந்த கடலின் கோபத்திலிருந்து தங்களைக் காப்பாற்றினார். தங்கள் மூலம் என் அற்பமான உயிரையும் காத்தருளினார். தாங்கள் உத்தேசித்திருக்கும் காரியத்தை நான் பூரணமாக ஒத்துக் கொள்கிறேன். அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து எடுத்துச் செலவு செய்தால் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர் கோபங் கொள்வார். ஆலயத் திருப்பணிக்காக வைத்திருக்கும் பணத்தை வீடு வாசல் இழந்த ஏழைகளுக்கு விநியோகிப்பதைக் குறித்துத் தங்கள் திருப்பாட்டியார் கோபித்துக் கொள்ள மாட்டார். அவ்விதம் தாங்கள் செய்வது உசிதமானது. ஆனால் இந்த மகத்தான புண்ணிய காரியத்தைத் தாங்களே முன் நின்று நடத்துவது அல்லவோ பொருத்தமாக இருக்கும். இந்த ஏழை சன்யாசி அவ்வளவு பெரிய பொறுப்பை ஏற்க முடியாது.''

'' குருதேவரே! நான் முன்னின்று நடத்தினால் என்னை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும். பாண்டவர்களின் அக்ஞாதவாசத்தைப் பற்றித் தாங்கள் கூறியது என் நெஞ்சில் பதிந்திருக்கிறது. நமது செந்தமிழ் நாட்டுப் பொய்யாமொழிப் புலவரின் வாக்கும் நினைவுக்கு வந்தது.

' வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றுந்
தீமை இலாத சொலல்'

என்றும்,

' பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்'

என்றும் தமிழ் மறை கூறுகிறதல்லவா? என்னை நான் இச்சமயம் ஜனங்களுக்கு வெளிப்படுத்திக் கொள்வதால் நாட்டில் குழப்பமும் கலகமும் விளையலாம் என்று அறிவிற் சிறந்த என் தமக்கை யார் கருதுகிறார். நான் மறைந்திருப்பதனால் யாருக்கும் எத்தகைய தீமையும் இல்லை. ஆகையால் புயலின் கொடுமையினால் கஷ்டப்பட்டுத் தவிக்கும் மக்களுக்குத் தாங்கள்தான் அரண்மனையில் உள்ள பொருளைக் கொண்டு உதவி புரிய வேண்டும்'' என்றார் இளவரசர்.

''பொன்னியின் செல்வ! என் மனம் எதனாலோ மாறி விட்டது! தங்களை வெளியிட்டுக் கொண்டு மக்களுக்கு உதவி செய்ய இதுவே சரியான தருணம் என்று என் மனத்தில் உதித்திருக்கிறது. அதுவே புத்த பகவானுடைய சித்தம் என்று கருதுகிறேன்'' என்றார் பிக்ஷு.

இச்சமயம் யாரோ விம்மும் குரல் கேட்டு இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். முருகய்யன் ஒரு மூலையில் உட்கார்ந்து முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு விம்மி விம்மி அழுது கொண்டிருந்தான். இளவரசர் அவ

விடம் சென்று கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வந்தார்.

"முருகய்யா! இது என்ன? ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்.

" என் மனையாள்.... என் மனையாள்..." என்று தடுமாற்றத்துடன் கூறி முருகய்யன் மேலும் விம்மினான்.

"ஆமாம், ஆமாம்! உன் மனைவியை நாங்கள் அடியோடு மறந்து விட்டோம். அவள் இன்றிரவு புயலிலும் மழையிலும் என்ன ஆனாளோ என்று உனக்குக் கவலை இருப்பது இயல்புதான். ஆயினும் இந்த நள்ளிரவு நேரத்தில் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. பொழுது விடிந்ததும் உன் மனையாளைத் தேடிக் கண்டு பிடிக்கலாம்" என்றார் இளவரசர்.

" ஐயா ! அதற்காக நான் வருந்தவில்லை. அவளுக்கு ஆபத்து ஒன்றும் நேர்ந்திராது. இதைப் போல் எத்தனையோ பயங்கரமான புயலையும் வெள்ளத்தையும் அவள் சமாளித்திருக்கிறாள்!" என்றான் முருகய்யன்.

"பின் எதற்காக அழுகிறாய்?" என்று இளவரசர் கேட்டார்.

படகோட்டி தட்டுத் தடுமாறிப் பின் வரும் விவரங்களைக் கூறினான்:

"அவளைப் பற்றி நான் என்னென்னமோ சந்தேகப்பட்டதை நினைத்து வருத்தப்படுகிறேன். அவள்தான் என்னை வற்புறுத்திக் கோடிக் கரையிலிருந்து இங்கே அழைத்துக்கொண்டு வந்தாள். தாங்கள் சூடாமணி விஹாரத்தில் இருக்கக்கூடும் என்று அவள்தான் சொன்னாள். அவளுடைய கட்டாயத்துக்காகவே நான் வந்தேன். தங்களுக்கு ஏதோ தீங்கு செய்ய நினைக்கிறாளோ என்றுகூடப் பயந்தேன். அது எவ்வளவு பிசகு என்று இப்போது தெரிந்தது. சற்று முன்னால் தாங்கள் இந்தப் படகோட்டி ஏழையைக் குறித்துப் பாராட்டிப் பேசினீர்கள். கடவுள் என் மூலம் தங்கள் உயிரைக் காப்பாற்றியதாகக் கூறினீர்கள். ஆனால் என்னை இந்தக் காரியத்துக்குத் தூண்டியவள் என் மனையாள். அவளைப் பற்றிச் சந்தேகித்தோமே என்று நினைத்தபோது என்னை மீறி அழுகை வந்து விட்டது !"

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த இளவரசர் பொன்னியின்செல்வரின் உள்ளத்தில் வேறொரு ஐயம் இப்போது உதித்தது.

"அப்பனே! உன் மனையாள் மிக்க உத்தமி. அவளைப் பற்றி நீ சந்தேகித்தது தவறுதான். ஆனால் அவளுக்கு நான் இங்கே இருப்பது எப்படித் தெரிந்தது?" என்று கேட்டார்.


"என் அத்தையும் என் தங்கை பூங்குழலியும் நாகைப்பட்டினத்துக்குப் படகில் புறப்பட்டார்கள். அதிலிருந்து என் மனையாள் ஒருவாறு ஊகித்துத் தெரிந்து கொண்டாள்."

"எந்த அத்தை ?" என்று இளவரசர் பரபரப்புடன் கேட்டார்.

"ஐயா! ஈழத் தீவில் தங்களைப் பல முறை அபாயங்களிலிருந்து காப்பாற்றிய ஊமை அத்தைதான்....."

"ஆகா! அவர்கள் இப்போது எங்கே? உன் அத்தையும் பூங்குழலியும் என்ன

தீமையை எதிர்ப்பவன்



ஏசு கிறிஸ்து வாழ்ந்து மறைந்த பாலஸ்தீனப் பிரதேசத்தை முகம்மதியர்கள் ஆக்கிரமித்துக் கொண்டபோது அந்தப் புனித நிலத்தை விடுவிக்கக் கிறிஸ்துவ மன்னர்கள் படையெடுத்துச் சென்றார்கள், சரித்திர காலத்தில். இதற்குக் "குருஸேட்" என்று பெயர். இதன்பின்னர் எந்த ஒரு நல்ல காரியத்துக்காகப் போராடுவதானாலும் அதைக் குருஸேட் என்று சொல்வது வழக்கில் வந்துவிட்டது. இத்தகைய தார்மீகப் போராட்டத்தில் பங்குகொள்பவன் 'குருஸேடர்'.

என்ஃபீல்ட் (இந்தியா) ஸ்தாபனம் புதிதாகத் தயாரித்திருக்கும் மோட்டார் சைக்கிளுக்குக் "குருஸேடர்" என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இந்தக் குருஸேடருக்கு எந்தத் தீமையை எதிர்த்துப் போராடத் திட்டமோ ?

ஒரு யோசனை : இரும்புத் தொப்பி (ஹெல்மெட்) அணியாமல் மோட்டார் சைக்கிள் - ஸ்கூட்டர் ஓட்டும் தீமையை எதிர்த்து ஓர் இயக்கம் நடத்த குருஸேடரும் அதைச் செய்வோரும் செலுத்துவோரும் முன் வந்தால் ரொம்பப் பொருத்தமாயிருக்குமே !

ஆனார்கள்? இங்கே புறப்பட்டு வந்தார்கள் என்று கூறினாயே?''

''ஆம்; புறப்பட்டு வந்தார்கள். ஆனால் அவர்கள் பிரயாணம் தடைப்பட்டு விட்டது!'' என்று சொல்லிவிட்டு முருகய்யன் விம்மி விம்மி அழத் தொடங்கினான்.

பொன்னியின் செல்வர் மிக்க கவலை அடைந்து அவனைச் சமாதானப்படுத்தி விவரங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டார். ஈழத்து அரசியை யாரோ மூர்க்கர்கள் பலவந்தமாகப் பிடித்துக் கொண்டு போனதை அறிந்ததும் இளவரசருக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. அவர்களை ராக்கம்மாள் தடுக்கப் பார்த்தாள் என்றும், அதற்காக அவளை அடித்து மரத்தில் சேர்த்துவைத்துக் கட்டி விட்டுப் போனார்கள் என்றும் அறிந்த போது ராக்கம்மாளின் பேரில் ஏற்பட்டிருந்த ஐயம் நீங்கி விட்டது. இளவரசருக்கு அவன் பேரில் இப்பொழுது மதிப்பும் அபிமானமும் வளர்ந்தன.

''குருதேவரே! கேட்டீர்களா? இந்த உலகத்தில் நான் போற்றும் தெய்வம் ஒன்று உண்டு என்றால், ஈழத்தரசியாகிய மந்தாகினி தேவிதான். அந்த ஊமை மாதரசிக்கு எந்தவிதமான தீங்கும் செய்தவர்களை நான் மன்னிக்க முடியாது. பழுவேட்டரையர்கள் என்னைச் சிறைப்படுத்தக் கட்டளை பிறப்பித்தது குறித்து நான் சிறிதும் கோபம் கொள்ளவில்லை. ஆனால் ஊமை ராணிக்கு அவர்கள் ஏதேனும் தீங்கு செய்திருந்தால் ஒரு நாளும் என்னால் பொறுக்க முடியாது. பழுவேட்டரையர் குலத்தை அடியோடு அழித்துவிட்டு மறுகாரியம் பார்ப்பேன். என்னைப் பெற்ற அன்னையும் என் சொந்தத் தந்தையும் ஈழத்து அரசிக்குத் தீங்கு செய்திருந்தாலும் அவர்களை என்னால் மன்னிக்க முடியாது. குருதேவரே! நாளைக்கே நான் தஞ்சாவூருக்குப் பிரயாணப்படப் போகிறேன். வியாபாரியைப்போல் வேடம் பூண்டு இந்தப் படகோட்டி முருகய்யனைத் துணைக்கு அழைத்துக் கொண்டு கிளம்பப் போகிறேன். ஈழத்து அரசியைப் பற்றி அறிந்து கொண்டாலன்றி என் மனம் இனி நிம்மதி அடையாது. ஆச்சாரியரே! புயலினால் கஷ்டப்பட்டவர்களுக்கு உதவி செய்யும் கைங்கரியத்தைத் தாங்கள் தான் நடத்த வேண்டும். தங்கள் பெயரால் நடத்தப் பிரியப்படாவிட்டால் 'ஈழத்து நாச்சியார் அறச்சாலை' என்று வைத்து நடத்துங்கள்! ஈழத்தரசி புத்த மதத்தில் பற்றுக் கொண்டவர் என்பது தங்களுக்குத் தெரியுமோ, என்னமோ? 'பூதத் தீவு' என்று மக்கள் அழைக்கும் போதத்தீவில் உள்ள புத்த பிக்ஷுணிகளின் மடத்திலேதான் அவர் சாதாரணமாக வசிப்பது வழக்கம்!'' என்றார் இளவரசர்.

புத்தபிக்ஷுவும் இதற்கு மாறு சொல்லாமல் ஒப்புக் கொண்டார்.

* * *

மறுநாள் புயலின் உக்கிரம் தணிந்தது. பொங்கி வந்த கடலும் பின் வாங்கிச் சென்றது. ஆனால் அவற்றினால் ஏற்பட்ட நாச வேலைகள் வர்ணனைக்கு அப்பாற்பட்டிருந்தன. நாகைப்பட்டினம் நகரில் பாதி வீடுகளுக்குமேல் கூரைகளை இழந்து குட்டிச்சுவர்களாக நின்றன. அந்த வீதிகளில் ஒன்றில் இளவரசர் அருள்மொழிவர்மர் வியாபாரியின் வேடத்தில் தோளில் ஒரு மூட்டையைச் சுமந்து நடந்து கொண்டிருந்தார். அவர் பின்னால் முருகய்யன் இன்னும் ஒரு பெரிய மூட்டையைச் சுமந்து தொடர்ந்து போய்க் கொண்டிருந்தான். புயலினாலும் வெள்ளத்தினாலும் நேர்ந்திருந்த அல்லோலகல்லோலங்களைப் பார்த்துக் கொண்டு அவர்கள் போனார்கள்.

இடிந்த வீடு ஒன்றின் சுவரின் மறைவிலிருந்து ஒரு பெண் அவர்கள் வருவதைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். அவள் வேறு யாரும் இல்லை. முருகய்யனின் மனையாள் ராக்கம்மாள் தான். இளவரசரும் முருகய்யனும் அவள் நின்ற இடத்துக்கு அருகில் வரும் வரையில் அவள் பொறுமையோடு காத்திருந்தாள். திடீரென்று வெளிப்பட்டு ஓடி வந்து இளவரசரின் முன்னால் வந்து காலில் விழுந்தாள். முருகய்யன் அவளுடைய கவனத்தைக் கவர முயன்றான். உதட்டில் விரலை வைத்துச் சமிக்ஞை செய்தான். 'உஷ்' 'உஷ்' என்று எச்சரித்தான். ஒன்றும் பயன் படவில்லை.

''சக்கரவர்த்தித் திருமகனே! வீராதி வீரனே! பொன்னியின் செல்வா! சோழ நாட்டின் தவப் புதல்வா! சூடாமணி விஹாரத்தில் முழுகிப் போய் விடாமல் தாங்கள் பிழைத்து வந்தீர்களா? என் கண்கள் என்ன பாக்கியம் செய்தன?'' என்று கூச்சலிட்டாள்.

வீதியில் அச்சமயம் அங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தவர்கள் அத்தனை பேருடைய கவனமும் இப்பொழுது இளவரசரின்பால் திரும்பியது. **(தொடரும்)**

காணிக்கை

ஆர்வி

யாமினிக்கு இந்த உலகத்தையே வென்றுவிட்டது போன்ற செருக்கும் தனக்கு வேறு எதுவுமே நிகரில்லை என்ற நினைப்பும் உள்ளூற இருந்து கொண்டேயிருந்தது. கார், சின்னப் பங்களா, மற்றச் சௌகரியங்கள் எதுவும் ஒரு பொருட்டாகவே படவில்லை. எது வந்தால் என்ன, இருந்தால் என்ன, எது போனால் என்ன என்ற அலட்சியமான போக்கிலேயே அவள் மிதந்தாள்.

பாஸ்கரன் ஒருவன்தான் அவளுக்கு எல்லாமாய் இருந்தது. அவன் பொருட்டுத்தான் எல்லாம் என்றும் இருந்தது. யார், எது சொன்னாலும் காதிலேயே ஏறவில்லை; யார் என்ன நினைப்பார்களோ என்று கவலையும் படவில்லை. ஆனால் பாஸ்கரன் விஷயத்தில் மட்டும் எல்லாம் இதற்கு நேர் மாறுதல். அவன் கண்ணால் அப்படி இப்படிப் பார்ப்பதற்குக்கூட முழுப் பொருளும் அவளுக்குத் தெரிந்தது. நின்றால் ஓர் அர்த்தம், அமர்ந்தால் ஓர் அர்த்தமாகப் புரிந்து கொண்டாள். அவனைக் கண்டாலே பரவசமாய், பம்பரமாய்ச் சுழன்று ஆடினாள். புதிதாக வந்த இடம், புதிதாகச் சந்திக்கிற மனிதர்கள், புதிதாக ஏற்க வேண்டியிருந்த மனிதர்கள், புதிதாக ஏற்க வேண்டியிருந்த பொறுப்புக்கள் — எந்தவிதமான அசௌகரியங்கள் இருந்தாலும் முளைத்தாலும் அவன் ஒருவனை முன்னிட்டு, முகம் சுளிக்காமல் ஏற்றுக் கொள்ளவோ, பொறுத்துக் கொள்ளவோ அவள் தயங்கவில்லை.

பசியே தெரியவில்லை; தூக்கமே கொள்ளவில்லை. 'அவர், அவர், அவர்' என்று எப்போதும் அவனையே நினைத்துக் கொண்டிருந்தாள். 'இதோ வந்து விடுவார், இதோ அவர் கார் சத்தம், இதோ அவர் காலடியோசை, பேச்சுக் குரல், மூச்சுக் காற்று, பார்வை வீச்சு'— எல்லாம் அவளுக்கு மனப்பாடம்.

வீரசோழபுரமாவது, ஸ்ரீராமநகராவது — எல்லாம் அவளுக்கு ஒன்றாய்த்தான் இருந்தன. அத்தையாவது, மாமியாவது — எல்லாரும் ஒன்றாகத்தான் இருந்தார்கள்.

'' நாங்கள்ளாம் கவலைப்பட்டுக்கிண்டே இருப்போம். வாரத்துக்கு ரெண்டு கடிதாசியாவது எழுதிப் போடு. அசட்டையா இருந்துடாதே !'' என்று திருப்பித் திருப்பிச் சொன்னாள் அத்தை.

அப்போது தலையை ஆட்டிவிட்டு வந்தாள் யாமினி. வந்த மறுநாளே எழுதிப் போட்டாள். அடுத்த வாரத்திலும் ஒரு நாள் எழுதினாள். அதற்குப் பிறகு எழுத வேண்டும் என்ற எண்ணம் உறுத்திக் கொண்டிருந்தது; ஆனால் எழுத உடம்பு வணங்கவில்லை. பிறகு அந்த எண்ணமே வரவில்லை. திருப்பித் திருப்பி என்னவென்று எழுதுவது ? அத்தைக்குப் போய்க் கண்டதையெல்லாம் எழுத முடியுமா, என்ன? 'நாலு வரி எழுதிப் போடக் கூடவா உனக்கு நேரமில்லை?' என்று நினைத்தால் வந்து வேண்டுமானால் பார்த்துக் கொள்ளட்டுமே. அவளுக்கு நேரம் எங்கே இருந்தது? பாஸ்கரனுடைய பழக்க வழக்கங்கள் பிடிபடவும், அவனுடைய தேவைகளை உணர்ந்து அறிந்து கொள்ளவும் அவனைக் கவனிக்கவுமே அவளுக்கு நேரம் போதவில்லையே ! அவனோடு பேசவும் அவன் கூப்பிட்ட இடத்துக்கெல்லாம் போகவும் நேரத்தை எப்படியெல்லாம் சுருக்கிப் பிடிக்க வேண்டியிருந்தது !

'' நான் அடிக்கடி எழுதவில்லையே என்று நீ கவலைப்படாதே. நான் இங்கே ரொம்ப ரொம்பச் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன். இவர் ரொம்பப் பிரியமாகவே இருக்கிறார். எல்லாம் ரொம்பச் சௌகரியமாகவே இருக்கிறது. எனக்கு நேரமே கிடைக்க மாட்டேன் என்கிறது. இதைக்கூட அவசரத்தில்தான் எழுதுகிறேன். யார் வீட்டுக்கோ போக வேண்டுமாம் ; காரில் உட்கார்ந்திருக்கிறார்'' என்று வெளியில் புறப்படுகிற போது அத்தைக்கு எழுதிப் போட நினைத்தாள். ஆனால் எழுதவேயில்லை.

பாஸ்கரன்கூட ஒரு நாள் இரவு, ''அத்தைக்குக் கடுதாசி எழுதிப் போட்டியோ?'' என்று அவளிடம் அக்கறையுடன் விசாரித்தான்.

''எழுதணும்; டயமே இல்லை.''

''டயம் இல்லாமெ என்ன? எதையாவது நாலு வரி எழுதிப் போடறது!''

''அத்தைக்கு அந்த நாலு வரியெல்லாம் போதாது. நிறைய எழுதணும்.''

'' உனக்குத்தான் நிறைய எழுதத் தெரியுமே; எழுதேன்!''

''அப்படி என்ன இருக்கு, எழுத? நான் உங்ககிட்டே கொஞ்சறதையும், நீங்க எங்கிட்டே கொஞ்சறதையும்தான் எழுதணும். நிறைய எழுதலாம்.''

''எதையோ எழுதிப் போடுவியா, பேசாமலே இருந்தால்?''

''அதையே எழுதறேன்.''

'' எழுது. எழுது. இதையும் வேணுச் சேர்த்து எழுது...'' என்று அவளை அருகில் இழுத்து இறுக அணைத்துக் கொண்டான்.

அவன் பிடியிலிருந்து விலகி, — ''அதான் சங்கடம்; எழுத முடியாததெல்லாம் இங்கே நடக்கிறது. சுசீலாவுக்கு எழுதினாலாவது சந்தோஷப்படுவாள். அவளுக்கு 'மடெயில்' எல்லாம்தான் முக்கியம். சுவாரசியமாகப் படிப்பாள். அத்தைக்கு இந்த 'மடெயில்' எல்லாம் அவசியமில்லை. அவளுக்கு ரிசல்ட்டுதான் முக்கியம். அதுக்கு நான் என்ன செய்ய முடியும்?'' என்று சிரித்தாள் யாமினி.

''ஓ! சுசீலாவுக்கு வேண்டியது— டடெயில்; உங்க அத்தைக்கு வேண்டியது ரிசல்ட். உனக்கு ?'' என்று கேட்டான் பாஸ்கரன்.

''உங்களுக்கு?'' என்று அதே குரலில் திருப்பிக் கேட்டாள் அவள்.

கடைசியில் இருவருமே அத்தைக்குக் கடிதம் எழுதுகிற விஷயத்தை அடியோடு மறந்து விட்டார்கள்.

பார்வதியம்மாள் கால மாறுதலை உணர்ந்து யாமினியின் விஷயத்தில் தலையிடாமல் இருந்தாள். யாமினியின் அழகும் அடக்கமான குணமும் அவளுக்குப் பிடித்திருந்தன. இருந்தாலும் அவளுடைய தனிப்பட்ட விஷயங்களில் யாமினியின் உதவியையோ அவளுடைய துணையையோ எதிர்பார்க்காமல் தானே செய்து கொண்டாள். வீட்டுச் சமையலுக்கு ஓர் அம்மாள் இருந்ததால் பல சில்லறைப் பிரச்னைகள் அடிபட்டுப் போய் விட்டன. தன்வரை அவள் தன்னுடைய ஆசார விஷயங்களில் மிகவும் கவனமாகவே இருந்தாள். யாமினி செய்து ஆக வேண்டிய காரியம் என்று எதுவுமே இல்லாததால் எல்லாம் அமைதியாகவும் சீராகவுமே நடந்து கொண்டிருந்தன. ஆனாலும் அவளுக்கு உள்ளூறப் பெரிய குறைதான். பெரிய இடத்துப் பெண்ணாக, சீரும் சிறப்புமாகத் தனக்கு மருமகள் வாய்க்கவில்லையே என்று ஒரு குறை. இன்னொன்று யாமினி, வேறு ஒரு ஜாதிப் , பிரிவைச் சேர்ந்தவளாக இருப்பது. பாஸ்கரனுக்காக அவள் யாமினியைச் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது. சொந்த ஜாதியைச் சேர்ந்தவளாக இருந்தால் ஏழையாக இருந்தாலும் அவளுக்கு யாமினியைப் பிடித்துத்தான் இருக்கும். இப்பொழுதும் அவளிடம் பார்வதியம்மாளுக்கு வெறுப்போ, வேற்றுமையோ இல்லை. குறை மட்டும் உண்டு. ஆனால் அதை அவள் வெளிக்காட்டிக் கொள்ளவேயில்லை. பூஜையறை, சமையல் அறைகளில் யாமினியை அவள் அநுமதிக்கவில்லை என்றால் அதற்குக் காரணம் அவளுடைய ஆசார நியமங்கள்தாம். இதெல்லாம் சொந்த ஜாதியைச் சேர்ந்த நாட்டுப்பெண்ணாக இருந்தாலும் இருக்கும். சின்னஞ் சிறுசுகள்; எப்படி எப்படியோ இருப்பார்கள். இங்கெல்லாம் வர வேண்டாம் என்பதே அவளுடைய எண்ணம். யாமினிக்கு இந்தப் பழக்க வழக்கங்கள் புதிதல்ல; இதை அவள் ஊரிலேயே, தலைமை ஆசிரியர் பட்டாபிராமன் வீட்டிலேயே பார்த்தும் இருக்கிறாள்; பழகியும் இருக்கிறாள். இதைப் பற்றி அவள் கவலைப்படவேயில்லை. அவளுக்கு எல்லாம் சகஜமாக, சௌகரியமாகக்கூட இருந்தது.

''அம்மா ஒரு மாதிரி; அவளிடம் எப்படியாவது 'அட்ஜஸ்டு' செய்துண்டு போ'' என்று பாஸ்கரன், யாமினிக்குச் சொல்லி வைத்திருந்தான்.

''அம்மா சொன்ன பெண்ணை நீங்க கல்யாணம் பண்ணிக்கலையே என்கிற குறை ரொம்ப இருக்காப்பலே படறது'' என்றாள் யாமினி.

''இப்ப இந்தக் குறையோடயாவது அம்மா இங்கே இருக்க முடியறது. அம்மா சொன்னவளைக் கல்யாணம் பண்ணிண்டிருந்தால் அம்மா இங்கே இருக்கவே முடியாதே. அதை என் புரிஞ்சுக்கல்லே அவள்?'' என்றான் பாஸ்கரன்.

பார்வதியம்மாளுக்குப் புரிந்ததோ இல்லையோ, 'கொடுத்து வைத்தது இவ்வளவுதான்' என்ற போக்கில் இருந்து விட்டாள். இதனால் அவ

ளுக்கும் நிம்மதி; யாமினிக்கும் சௌகரியமாகவே இருந்தது. நாளடைவில் எல்லாம் சரியாகப் போய்விடும் என்ற நம்பிக்கைக்கும் இடமிருந்தது. அவர்களைப் பார்க்க வருகிறவர்களிடம் பார்வதியம்மாள் தன் நாட்டுப்பெண்ணைப் பற்றி உயர்வாகவே சொல்லிக் கொண்டாள். யாமினி படித்தவள் என்கிற பெருமையும் பாஸ்கரனுக்கு அவள் பல விதங்களில் உதவியாகவும் ஏற்றவளாகவும் இருக்கிறாள் என்ற திருப்தியும் பார்வதியம்மாளுக்கு உள்ளூற இருந்தன. வேறு ஒருத்தி மருமகளாக வந்திருந்தால் வீட்டில்இந்த மாதிரி நிம்மதியும் சந்தோஷமும் இருக்கும் என்பது என்ன நிச்சயம்?

அஜிதாவைப் பற்றி என்னவோ சசமுசாவெனப் பேசிக் கொண்டது அவள் காதில் விழுந்திருந்தது. பம்பாயில் அவர்கள் குடும்பத்தில் ஏதோ குழப்பமும் ரகளையுமாய் இருப்பதாகச் சொல்லிக் கொண்டார்கள். அண்ணா நாகநாதனுக்கு அன்று உடம்பு ஆச்சு போச்சு என்று ஆகிவிட்டதற்கே அதுதான் காரணம் என்றும் பேச்சு அடிபட்டது. இதையெல்லாம் கேள்விப்பட்டது முதல் மற்றதையெல்லாம்விட புருஷன் — மனைவி அந்நியோந்நியம்தான் முக்கியம் என்று தீர்மானமாகப் பட்டுவிட்டது. அத்தகைய அந்நியோந்நியத்தை வளர்க்கத் தன்னால் முடிந்ததையெல்லாம் செய்வதே தன் கடமை என்று எண்ணினாள் பார்வதி.



''அம்மாவுக்கு இப்பல்லாம் உங்கிட்டே அக்கறை அதிகமாய் வந்திருக்காப்பலே இருக்கே!'' என்று குறிப்பிட்டான் பாஸ்கரன், யாமினியிடம்.

''எங்கிட்டே இல்லே; உங்ககிட்டே தான்! 'சரியாய் அவனைச் சாப்பிடச் சொல்லு; சரியாய்த் தூங்கச் சொல்லு; காலா காலத்திலே வீட்டுக்கு வரச் சொல்லு. களைச்சுப் போய் வந்திருப்பான்; சிரிச்ச முகமா எதையானும் கையிலே கொண்டு போய்க் கொடு. வாசனைப் பூவா வச்சுக்கோ. புடிச்ச புடவையாப் பார்த்துக் கட்டிக்கோ. பளிச்சின்னு இரு; மிருதுவாப் பேசு. இப்படியெல்லாம் சொன்னால் யார் மேலே அக்கறைன்னு அர்த்தம்?'' என்று கேட்டாள் யாமினி.

''சரி சரி, எதிர்த்துப் பேசாதே... மிருதுவாப் பேசு'' என்றான் பாஸ்கரன்.

அத்தியாயம் 30

யாமினி வந்தபுதிதில் பாஸ்கரனுக்கு அவனைப் பல இடங்களுக்கு அழைத்துப் போக வேண்டியிருந்தது. நண்பர்களையும் அவர்கள் குடும்பத்தாரையும் அறிமுகப்படுத்தி வைக்க வேண்டியிருந்தது. விருந்தும் உபசரிப்பும் மாறி மாறி நடந்து கொண்டேயிருந்தன. இவ்வளவுக்கும் நடுவில் அவர்கள் தனியாகவும் உல்லாசமாகவும் போய் வந்தார்கள். இதற்கெல்லாம் அவ்வப்போது அவனுக்கு நேரமும் கிடைத்தது.

ஆறேழு மாதங்களுக்குப் பிறகு பாஸ்கரனுக்கு வரவர நேரமே கிடைக்கவில்லை. ஓய்ச்சல் ஒழிவில்லாமல் வேலை. காலையில் புறப்பட்டுப் போனால் விளக்கு வைத்த பிறகுதான் வருவான். நடுவில் வந்து சாப்பிட்டு விட்டுப் போகக்கூட அவகாசம் கிடைக்காது. காமேசுவரன் தயவால் தரிசாகக் கிடந்த வெற்றிடம் ஒன்று மலிவான விலைக்குக் கிடைத்தது. கொஞ்சம் பணம் கையிலிருந்தும் போட்டான்; நண்பர்களிடமிருந்து கடன் வாங்கியும் போட்டான். அந்த இடத்தை விலைக்கு வாங்கியதும் தன்னுடைய மோட்டார்—ஓர்க்ஷாப்பையும் தொழிற்சாலையையும் அங்கேயே மாற்றிக் கொண்டான். நாலுபுறமும் அடைத்து முடித்ததும் வேறு சில சிறு தொழில்களுக்கான லைசென்சுகளுக்கு எழுதிப் போட்டான். தன்னுடைய இடத்துக்கு முதல் படியாக வேண்டிய மூலதனத்துக்குப் பாங்கியின் உதவியை எதிர்பார்த்தான். ஆரம்பகால முதலீட்டுக்கு வசதியாகக் காமேசுவரனையும் கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டான். குடிசைத் தொழில் மாதிரியே ரிஸீவர் செட் செய்வதற்கு வேண்டிய சிறு யந்திரங்களையும் உபகரணங்களையும் வாங்கி வந்து இணைத்துச் சேர்த்தான். மாடல் செட் ஒன்று தயாரித்து அதைப் பதிவு செய்து கொண்டான். இன்னும் உலைக் கூடங்களும் சோதனைக் கூடங்களும் அமைக்கவும், பின்னால் விரிவு படுத்திக் கொள்ள வழியிருக்கும்படி யந்திரச் சாலைகளை நிறுவவும் சில உதவியாளர்களைத் தேர்ந்தெடுத்துச் சேர்த்துக் கொண்டான். இப்படியாக அவன் தன்னையே முழு நேர ஊழியனாகச் செய்து கொண்டதுடன் யாமினியையும் தன் வேலைக்கு அவ்வப்போது பயன் படுத்திக் கொண்டான். கடிதப் போக்குவரத்துக்களை யெல்லாம் அவள் வீட்டிலிருந்தபடியே மேற்பார்வையிட்டுக் கவனித்துக் கொண்டாள். கடிகார முள்ளைப் போல் அவனுக்குப் பன்னிரண்டு மணி நேரமும் சுற்றி வர வேண்டியிருந்தது. இடம், பணம், திறமை, உழைப்பு, ஊக்கம் இத்தனையும் இருந்து விட்டால் மட்டும் வேலை நடந்து விடுகிறதா? ஒவ்வொரு சிறு விஷயத்துக்கும் மந்திரிகள் வரையில் சிபாரிசு பிடிக்க வேண்டியிருந்தது. செல்வாக்குத் தேடி அலைய வேண்டியிருந்தது. தொழில் நுட்ப அறிவெல்லாம் ஓர் அறிவா? லஞ்ச நுட்ப அறிவல்லவா அறிவு! 'தொழில் நுட்ப வளர்ச்சியில் ஈடுபடக்கூடிய திறமைசாலிகளுக்கு வழியைக் காணோம். அதிகாரம் செய்யவும் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடவும் மட்டும் ஆயிரம் அதிகாரிகள், பியூன்கள், அதிகாரிகள், இன்ஸ்பெக்டர்கள், கமிஷனர்கள்' என்று பாஸ்கரன் தனக்குள்ளாகப் பல தடவை சலித்துக் கொண்டான்.

பாஸ்கரன் இளைத்துக் கறுத்தும் போய்விட்டான் என்று யாமினி அழாக் குறையாக வருத்தப்பட்டாள். மாமியாரிடம் போய், ''சரியானவேளையில் சாப்பிடாமல் இப்படி வேலை வேலை என்று அலைந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்? சொன்னால் கேட்க மாட்டேங்கறாரே; நான் என்ன செய்வேன்?'' என்று முறையிட்டுக் கொண்டாள்.

''அதென்ன செய்வாயோ, போ. அவன்கிட்டயே போய்ச் சொல்லு!'' என்றாள் பார்வதி அம்மாள். ''அவன் எப்போதுமே இப்படித்தான். முந்தியும் இப்படித்தான் இருந்தான்; இப்பவும் அதுக்கு மேலேதான் இருக்கான்.''

''முதல்லே எல்லாம் அப்படித்தான் இருக்கும். அப்புறம் பாரேன். ஒரே வருஷத்திலே எல்லாம் ஓர் ஒழுங்குக்கு வந்துவிடும்'' என்று யாமினிக்குத் தேறுதல் சொன்னான் பாஸ்கரன்.


அவன் சொன்னது போல் ஒரு பக்கம் அவன் மேற்கொண்டிருந்த வேலைகளில் முன்னேற்றமும் இன்னொரு பக்கம், பாக்கியுள்ள வேலைகள் இத்தனையும் நல்லபடியாக முடிய வேண்டுமே என்ற தயக்கமுமாகக் காணப்பட்டன. எப்போதும் ஏதாவது ஒரு விதத்தில் பணத் தட்டுப்பாடு வந்துகொண்டேயிருந்தது. ஒன்றைச் செய்துவிட்டு நிமிர்ந்தால் இன்னொன்று எங்கிருந்தோ முளைத்துக் கொண்டிருந்தது. பாஸ்கரன் தனித்து நின்று எல்லாவற்றையும் எப்படியோ சமாளித்துக் கொண்டுதான் வந்தான்.

இரவு நேரங்களில் பாஸ்கரன் நல்ல தூக்கமில்லாமல் படுக்கையில் புரண்டு தவிப்பதைக் கண்டு யாமினி வேதனைப்பட்டாள். அவனுடைய கவலைகளைப் பகிர்ந்து கொள்ளுகிற வழியும் ஆற்றலும் இல்லாமல் ஊமையைப் போல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தன்னைவிட வசதி படைத்த மனைவியாக வந்திருந்தால் இத்தனை கவலைக்கு இடமில்லாமல் இருந்திருக்காதா என்று தனக்குள்ளாக எண்ணிக் கொண்டாள். அவனுக்குத் தான் ஒரு பெரிய கால் கட்டாக இருப்பது போலத்தான் பட்டது. இல்லாவிட்டால் பாஸ்கரனுடைய படிப்புக்கும் மூளைக்கும் வேறு ஒருத்தி மட்டும் கிடைத்திருந்தால் எங்கேயோ சிகரத்துக்குப் போயிருக்கலாம் என்று நிச்சயமாகத் தோன்றிற்று. 'இவர் வாழ்க்கையில் நான் ஏன் குறுக்கிட்டேன்? என்னைச் சந்திக்காமல் இருந்திருந்தால் இவர் வேறு எப்படியெல்லாமோ இருக்கலாமே...' என்று அடிக்கடி நினைத்துக் கொண்டாள். ஒரு நாள் அவனிடம் சொல்லவும் சொன்னாள்.

அதைக் கேட்டு அவன் சிரித்துக் கொண்டே, ''இப்ப எனக்கு இந்த ஒரு கவலைமட்டும்தான். வேறே எவளாவது வந்திருந்தால் இன்னும் எதுக்கெல்லாம் சேர்த்துக் கவலைப்பட்டுத் தவிக்க வேண்டியிருக்குமோ, யார் கண்டது? என்றைக்கும் எவனுக்கும் ஏதாவது ஒரு விதத்தில் கவலை இருந்து கொண்டுதான்

பறக்கும் இரயில்!



ஆகாயத்தில் கடும் வேகத்தில் பறக்கின்ற விமானங்களுக்குத் தரையில் போட்டி கிளம்ப இருக்கிறது. விமானங்களைப் போன்று, மணிக்குச் சராசரி ஐந்நூறு கிலோமீட்டர் வேகத்தில் பாய்ந்து செல்லக் கூடிய இரயில் வண்டியை உருவாக்க ஜெர்மன் நிபுணர்கள் திட்டமிட்டுள்ளனர்.

மேற்கு ஜெர்மனியில் ஹாம்பர்க் -- மூனிச் ஆகிய இரு நகரங்களுக்கு இடையேயான தூரம் 800 கிலோ மீட்டர். இதனை இரண்டே மணி நேரத்தில் கடக்கும் புரட்சிகரமான இந்த இரயில், 1980ஆம் ஆண்டுக்குப் பின், இவ்வித ராட்சத வேக இரயில் ஓடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்புதிய இரயில், இன்னும் வடிவ அமைப்பு கட்டத்திலேயே இருந்த போதிலும், (படம்) இது பற்றிய விவரங்கள் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டுவிட்டன.

இப்புதுமை இரயில் வண்டி, தற்போதுள்ள இரயில் வண்டிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். தண்டவாளங்கள் இருந்த போதிலும் இரயிலுக்குச் சக்கரங்கள் கிடையாது. இரட்டைத் தண்டவாளங்கள் மீது இரயில் வண்டி பறந்து செல்லும். தண்டவாளங்கள் மீது படாமலே ஊர்ந்து செல்லக் காந்த சக்தி உதவுகிறது. ஒரே சீரான இடைவெளியில் பாதுகாப்பாக இரயிலைக் காந்த சக்தி வைத்திருக்கும். இரண்டிற்கும் இடையே சில சென்டிமீட்டர் இடைவெளி இருக்கும். பூமிக்கு எட்டு மீட்டர் உயரத்தில் இரட்டைத் தண்டவாளங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

இஞ்சினும் புதுமையானது: இந்த இஞ்சின் உற்பத்தி செய்யும் மின்சக்தி காரணமாக, இஞ்சின் முன்புறமாகவும், செல்லும்; பின்புறமாகவும் செல்லும். மின்சக்தி உதவியினால், சடாரென்று 'பிரேக்' போடவும் இயலும். வேகத்தைக் கூட்டும் போதும், 'பிரேக்' போடும்போதும், எவ்வித சத்தமும் கிளம்பாது.

இரயில் பெட்டிகளும் அருமையாக அமைக்கப்பட்டிருக்கும். சுமார் நாற்பத்தைந்து மீட்டர் நீளமுள்ள இரயில் பெட்டியில் 150 முதல் 220 வரை பிரயாணிகள் பயணம் செய்யலாம்.

- ஜார்ஜ் எம். ஆல்டன் (யூ.பி.எஸ்.)



'மரியாதையா நான் நடிக்கிற நாடகத்துக்கு டிக்கட் வாங்கிவிடு!'
''மிரட்டுகிறீர்களே! அவ்வளவு மட்டமா இருக்குமா நாடகம்!''

இருக்கும். சமுத்திரத்திலே அலை இல்லாமல் இருக்குமோ? ஆழமில்லாத இடமா யிருந்தால்கூட அலை இலேசாக இருந்துண்டுதான் இருக்கும்'' என்றான்.

யாமினி அவனுடைய மார்பை வருடிச் சிண்டியபடி, ''நீங்கபாட்டுக்குச் சௌகரியமா டூர் போயிண்டிருந்ததை நான்தான் நடுவிலே வந்து அநியாயமாகக் கெடுத்தேன். உங்க மனசு மாறினதுக்கும் நான்தான் காரணம். நான்தான் உங்களைக் கெடுத்துட்டேன், இல்லையா?'' என்று கேட்டாள்.

''ஓ—அப்படி எங்க அம்மா அண்ணாவுக்கெல்லாம் ஓர் அபிப்பிராயம் இருக்குன்னுதானே இதைக் கேக்கறே? நீ என்னை மயக்கிப்பிட்டதாக இவங்களுக்கு எண்ணம். நான் உன்னை மயக்கிப்பிட்டதா உன்னைச் சேர்ந்தவாளுக்கு எண்ணம். ஆக இரண்டு பேருமே மயங்கிப் போயிட்டதாகத்தான் எல்லாருக்குமே ஒரு நினைப்பு. அப்படியே இருந்துட்டுப் போகட்டுமே! எல்லாரும் இப்படி அந்நியோந்நியமாக இருக்க மாட்டோமான்னு ஏக்கப்படற ஒரு விஷயத்துக்குப் போய் யாராவது கவலைப்பட்டுண்டு இருக்கலாமா?''

''அதெல்லாம் கிடக்கட்டும்; தப்பு உங்க பேரிலும் இருக்கோ, இல்லையோ? எனக்கு வேண்டியது அதுதான்!''

''நான் தப்புச் செய்ததா இருக்கணும். நீ செய்ததா இருக்கப்படாது. அதானே விஷயம்?''

''எனக்கே தெரிஞ்சுக்கிறதுக்காகக் கேக்கறேன். தப்புச் செய்யறதுக்குப் போய் எல்லாரும் கோவிக்கறாளே—அந்தத் தப்பைச் செய்யாமே இருந்திருந்தால் எனக்கு நீங்க கிடைச்சிருப்பேளா?''

''அப்பா! இதுவரையிலேயும் தப்பு என்பேரிலேதான்னு நான் நினைச்சிண்டிருந்தேன். இன்னிக்குத்தான் உன் வாயாலேயே நீயும் தப்புச் செய்திருக்கேன்னு தெரிஞ்சிண்டேன்!'' என்றான் பாஸ்கரன்.

என்னதான் சொன்னாலும் யாமினிக்குச் சமாதானமாகப் படவில்லை. பாஸ்கரன் நியாயமாகப் பெற வேண்டிய பல வாய்ப்புக்களைத் தன்னை முன்னிட்டுத்தான் கைவிட்டிருக்கிறான் என்கிற உண்மை வருத்தமாயும் இருந்தது; அதே சமயத்தில் பெருமையாகவும் இருந்தது.

அன்றைக்குத் திடீரென்று யாமினிக்கு நடுத் தூக்கத்தில் விழிப்பு வந்தது. படுக்கையில் பாஸ்கரனைக் காணவில்லை. பக்கத்து அறையில் வெளிச்சம் தெரிந்தது. பாஸ்கரன் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். யாமினி எழுந்து வந்து நிற்பதைப் பார்த்தான் பாஸ்கரன்.

''அதெப்படி உனக்குத் தூக்கம் சட்டுனு கலைஞ்சு போயிடறது? நான் நினைச்சேன், நீ எழுந்து வந்துடுவேன்னு!'' என்றான் பாஸ்கரன்.

''அப்படி என்ன அவசரம் இந்தக் கடுதாசிக்கு?''

''கார்த்தாலேன்னு மனசு மாறிப் போயிடும். வேறே நினைப்பெல்லாம் வந்து மனசைக் குழப்பிடும். அதுக்காகத்தான் கையோட எழுதினேன்!''

''யாருக்கு?''

''காமேசுவரனுக்கு. அவன் முன்னைப் போல எல்லாம் இல்லே.. அதனாலே நல்லபடியா இருக்கிறப்பவே விலகிடலாம்னு எழுதியிருக்கேன்.''

யாமினிக்கு இந்தச் செய்தி சிறிது கலக்கமாக இருந்தது. காமேசுவரன் கணிசமான அளவு பணம் போட்டுக் கூட்டாளியாக இருந்தான். அதையும் தவிர, குடும்பத்துக்கு வேண்டிய பணம் அவர்கள் கம்பெனியிலிருந்து கிடைத்துக்கொண்டிருந்தது. இந்த இரண்டு விதமான தொடர்புகளில் எதிலிருந்து விலகினாலும் அது விரும்பத் தக்கதாக யாமினிக்குப் படவில்லை.

அவளுக்குத் திடீரென்று வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது.


''என்ன யாமினி, என்ன? ஏன் வயிற்றைக் குமட்டுகிறது?'' என்று வேகமாக வந்தான் பாஸ்கரன்.

''எல்லாத்துக்கும் என்ன அவசரமோ தெரியல்லே!'' என்று அவள் குழாய்ப் பக்கம் போனாள். (தொடரும்)



போராட்டங்கள்

ர. சு. நல்லபெருமாள்



25. சுதந்திரமா, அடிமை வாழ்வா?

பகலெல்லாம் கட்சி வேலையில் ரகசியமாக முழுமூச்சுடன் ஈடுபட்டு விடுவதால் சிவராமனுக்கு வேறு தொந்தரவு இல்லை. ஆனால் இரவு களைத்துப் போய் வீடு திரும்பும்பொழுதுதான் மனம் தொல்லை கொடுத்தது. சாரதாவை நினைத்து நினைத்து உருகினான்.

டில்லியில் தலைவரோடு தங்கியிருந்தபோது எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். சாரதாவைத் தன்னுடன் அனுப்புமாறு. வேதமூர்த்தி மறுத்துவிட்டார். அவர் சொன்னார்: ''நாடு முழுவதும் ஒரு பெரிய கிளர்ச்சியை உருவாக்க வேண்டிய சந்தர்ப்பம் நெருங்கிவிட்டது. முக்கியமான பதினைந்து தலைவர்களைத் தலைமறைவாக இருந்து கிளர்ச்சிக்கு வேண்டிய சூழ்நிலையை இரகசியமாக உருவாக்க அனுப்பப் போகிறேன். அவர்களில் நீயும் ஒருவன்.''

''நாடு முழுவதிலும் ஒரே சமயத்தில் இதைச் சாதித்து விட முடியுமா?''— சந்தேகத்துடன் கேட்டான் சிவராமன்.

''ஏன் முடியாது? அதற்கான திட்டத்தையும் வகுத்தாகி விட்டது. தலைமறைவாயிருக்கும் தலைவர்கள்; கட்சியில் ஒரு தனிக் குழுவாகச் செயல்பட வேண்டும். ஆலைத் தொழிலாளர்களையும் உழவர்களையும் கிளர்ச்சிக்குத் தயார் செய்ய வேண்டும். நாடு முழுவதும் எல்லாத் துறைகளிலும் வேலைநிறுத்தத்தைத் தொடங்க வேண்டும். ஒரு பகுதியில் ஆரம்பிக்கப்படும் வேலைநிறுத்தம் மற்றப் பகுதிகளிலும் படரும். இது ஒரு சங்கிலித் தொடர் போல் `நாடு முழுவதும் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டுவிடும். இதற்கான தீவிரப் பிரசாரத்தில் கட்சித் தோழர்கள் ஈடுபட



வேண்டும். பிரசாரம் தான் கட்சியின் உயிர்நாடி.''

''வேலை நிறுத்தம் தொடர்ந்தால் பாட்டாளிகள் பட்டினி கிடக்கும்படி நேரிடுமே?''

''கிளர்ச்சி வளரும்போது முதலாளிகளின் கிட்டங்கிகளையும் பாங்குகளையும் கொள்ளையிட வேண்டியதுதான். உழவர்கள் நிலங்களை ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டும். தொழிலாளர்கள் தொழிற்சாலைகளைக் கைப்பற்ற வேண்டும். பாட்டாளிகளையும் அறிவு முதிர்ச்சி அடையாத இளைஞர்களையும், மாணவர்களையும் கிளர்ச்சியில் ஈடுபடுத்துவது சுலபம். எங்கும் பலாத்காரம் தாண்டவமாட வேண்டும். கொலைகளையும் தயங்காமல் நடத்தினால் பிறகு கம்யூனிஸ்ட் கட்சியை எண்ணி எல்லோரும் பயந்து நடுங்கிக் கொண்டிருப்பார்கள். நாடெங்கும் பீதியை உண்டுபண்ண வேண்டும். போக்குவரத்தையும், செய்தித் தொடர்பையும் நாசம் செய்து, நாடு முழுவதையும் குழப்பத்தில் ஆழ்த்தி விட வேண்டும். அரசாங்கம் ஸ்தம்பித்து விடும். இந்தச் சூழ்நிலையை உருவாக்கி விட்டால் ஆட்சியை நாம் கைப்பற்றி விடலாம்..... நாளை இரவிலிருந்து நீ தலைமறைவாகி விடவேண்டும்'' என்றார் வேதமூர்த்தி.

''எந்தப் பகுதிக்கு நான் போகவேண்டும்?'' என்று ஆவலோடு கேட்டான் சிவராமன்.

''உனக்குத் தெலுங்கு தெரியும். நீ குண்டூருக்குப் போ. மற்ற விவரங்களை ஆந்திரத் தலைவர் சொல்வார். அவரை ரகசியமாய் நீ சந்திக்க வேண்டும்.''

''ஊருக்குப் போய்விட்டு இரண்டு நாட்களில் குண்டூருக்குப்போகிறேனே.''

''ஏன்...?'' — கோபத்துடன் கேட்டார் வேதமூர்த்தி.

''அம்மாவை ஒரு முறை பார்த்து விட்டு....''

''உனக்கு இன்னும் குடும்பம், வாழ்க்கை, உறவு என்கிற நினைவு போகவில்லை'' என்று கேட்டார் தலைவர் கடுகடுப்புடன்.

''சரி, நேரே குண்டூருக்குப் போகிறேன்'' என்றான் சிவராமன்.

''உன்னோடு குண்டூரில் போலிக் குடும்பம் நடத்த நெல்லூரிலிருந்து சீதம்மா வருவாள். அவள் ஏற்கனவே விஜயவாடாவில் போலிக் குடும்பம் நடத்தி அனுபவப் பட்டவள்.''

''சாரதா என்னோடு வரட்டுமே..'' என்றான் சிவராமன். இதைச் சொல்லும்போது அவன் முகத்தில் தோன்றிய வெட்கத்தையும், மலர்ச்சியையும் வேதமூர்த்தி கவனிக்கத் தவறவில்லை.


தேயிலைக் கலவை
நுண்கலையில்
மிகச் சிறந்த வெற்றி!
ப்ரூக் பாண்ட்
சூப்பர் டஸ்ட்
செழுமையான டிகாக்ஷன்
மேன்மையான சுவை
Brooke Bond
Super Dust Tea
Super Dust
ப்ரூக் பாண்ட் சூப்பர் டஸ்ட் — மிக நேர்த்தியான

''போலிக் குடும்பம் நடத்த யாராவது ஒரு பெண்தான் தேவை. அவள் சாரதாவாக இருந்தால் என்ன, சீதம்மாவாக இருந்தால் என்ன?'' என்று கேட்டார் தலைவர். அவருடைய குரலில் ஒலித்த கோபத்தையும் அலட்சியத்தையும் சிவராமன் உணராமல் பேசினான்:

''சாரதா எனக்குத் தெரிந்தவள்...''

''ஏன் சுற்றி வளைக்கிறாய்? சாரதாவை நீ காதலிக்கிறாய். இந்தச் செய்தி எனக்கு முன்பே எட்டி விட்டது. சிவராமன், நீ இன்னும் உன்னைப் பற்றியே தான் எண்ணிக் கொண்டிருக்கிறாயே தவிர மாபெரும் இயக்கத்தைப் பற்றிய கவலையே உன்னிடம் இல்லை'' என்றார் தலைவர், எரிச்சலுடன்.

சிவராமன் பதறிப் போய் அவரை வெறித்துப் பார்த்தான். ''என் உயிரையே கட்சிக்காகக் கொடுக்கத் தயார்'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறினான். பிறகு, ''போலிக் குடும்பம் நடத்தாமல் நான் தனியாகவே இருக்கிறேனே!'' என்றான்.

''கூடாது. நீ தனியாக இருந்தால் உன்மீது மற்றவர்களுக்குச் சந்தேகம் வரும். ஒரு பெண்ணோடு குடும்பம் நடத்தினால், உன்னைப் பற்றி மற்றவர்கள் சிரத்தை கொள்ள மாட்டார்கள்.''

பதில் ஒன்றும் சொல்லாமல் குண்டூர் பயணத்துக்கு ஆயத்தமானான் சிவராமன்.

* * *

சீதம்மாவுடன் போலியான இல்வாழ்க்கை நடத்திக் கொண்டு அதே சமயத்தில் குண்டூர் தாலூகா ஆபீசுக்குப் பக்கத்தில் ஒரு பெட்டிக் கடை வைத்திருந்தான் சிவராமன். அந்தக் கடையில் பீடி, சிகரெட் முதல் உலக அரசியல் விஷயம் வரை கிடைக்கும். அங்கிருந்து கொண்டு இரகசியப் பணியில் ஈடுபட்டிருந்தான். ஆலைத் தொழிலாளிகளுடன் தொடர்பு கொண்டு கிளர்ச்சிக்கு வேண்டிய சூழ்நிலையை உருவாக்குவது, துண்டுப் பிரசுரங்களை இரவில் சுவர்களில் ஒட்டுவது, தொழிலாளர் தலைவர்களை இரகசியமாகச் சந்தித்துச் சதி வேலையில் ஈடுபடுவது ஆகிய நடவடிக்கைகளைத் தீவிரமாகச் செய்து கொண்டிருந்தான். குண்டூரைச் சுற்றியுள்ள உழவர்களை யெல்லாம் தூண்டிவிட்டு, நிலத் தகராறைத் தீவிரமாக வளர்த்திருந்தான். கட்சியின் தலைமைக் காரியாலயத்திலிருந்து அவ்வப்போது கட்டளைகள் வந்து கொண்டிருக்கும்.

காலையில் விற்பனைக்காக அவனுடைய கடைக்கு வந்த 'பாரதமணி'ப் பத்திரிகையைப் பார்த்தான். கானிநாதன் மில் சம்பவத்தினை யொட்டிக் குற்றவாளிகள் மீது தொடரப்பட்டிருந்த கொலை வழக்குகளும், தீ வைப்பு வழக்குகளும் அரசாங்கத்தால் வாபஸ் பெறப் பட்டிருந்ததைக் கண்டித்து முரளி எழுதிய தலையங்கத்தைப் படித்து விட்டு உள்ளூற மகிழ்ச்சி அடைந்தான். என்னதான் கட்சிக்காகக் கிளர்ச்சி செய்தாலும், கொலையையும், தீ வைப்பையும் சிவராமன் வெறுத்தான். நல்லதம்பியின் தூண்டுதலால்தான் இத்தனையும் நடந்திருக்கும் என்பதில் அவ



''கண் கொட்டாமல் என்னையே அப்படிப் பார்க்கிறாயே பிரேமா! அத்தனை அழகா நான்?''



''எனக்கு ஏற்ற மாதிரி ஒரு வெற்றிலை பாக்குப் பெட்டி வாங்கிக்கணும்னு ரொம்ப நாளாகச் சொல்லிக்கிட்டிருந்தேனே, வாங்கிட்டேன்!''



''இது என்ன சார் புது உத்தரவு? ஆபீசில் எல்லாரும் ஹெல்மெட் போட்டுக்கணும்னு?''

''நம் ஆபீஸ் மாடியைக் கதகளி நாட்டியப் பள்ளிக்கு வாடகைக்கு விட்டிருக்கோமே, மறந்து போச்சா?''

னுக்குச் சந்தேகம் இல்லை. முரளியின் தலையங்கமும், 'கோமாளி' என்ற புனை பெயரில் அவன் போட்டிருந்த கேலிச் சித்திரமும் சிவராமனை வெகுவாகக் கவர்ந்தன. தலையங்கத்தை ரசித்துத் திரும்பத் திரும்பப் படித்தான்.

முரளியின் துணிவையும், ஆற்றலையும், எண்ணி எண்ணி வியந்தான். அநாதை போல் விட்டு வந்திருக்கும் தன்னுடைய தாயாரை முரளி அக்கறையோடு கவனித்துக் கொள்கிறான் என்னும் எண்ணத்தினால் ஏற்பட்ட நன்றி உணர்வு, நெஞ்சை நெகிழ வைத்தது. நல்லதம்பியின் சதி, 'பாரதமணி'ப் பத்திரிகையை எப்படிச் சூழும் என்பது புரியாமல் தவித்தான். தரம் வாய்ந்த ஒரு பத்திரிகை ஓய்ந்துவிடக் கூடாது என்றுதான் சிவராமன் விரும்பினான். முரளியின் சிந்தனை, கம்யூனிஸச் சித்தாந்தங்களுக்கு எதிரிடையாக இருந்தாலும், முரளியின் நாட்டுப் பற்றைச் சிவராமனால் மறுக்கவோ, குறை கூறவோ இயலவில்லை. ரஷ்யாவுக்கும், சீனுவுக்கும் சென்று, கட்சியின் ஏகாதிபத்தியத்தை உணர்ந்தபிறகு சிவராமனின் நாட்டுப் பற்றும் சுதந்திர உணர்வும் உறுதி பெறத் தொடங்கி விட்டன.

கல்கத்தாவில் நடைபெற்ற இரகசியக் கூட்டம் முடிந்ததும் அன்று இரவு நடந்த சம்பவம் நினைவு வந்தது —

இரவு மூன்று மணிக்கு வங்கத் தலைவர் நரேந்திர போஸும், பஞ்சாப் தலைவர் குர்னும் சிங்கும் சிவராமனைச் சந்திக்க வந்தார்கள். மூவரும் இரகசியமாக இரவு முழுவதும் பேசினார்கள். தலைவர் வேதமூர்த்தியின் சர்வாதிகாரத் தனத்தைக் கண்டித்துப் பேசினார் நரேந்திர போஸ். கட்சியின் விதிமுறைகளிலும், கட்டுதிட்டங்களிலும் செய்ய வேண்டிய மாறுதல்களைப் பற்றி, குர்னும் சிங் கூறினார்.

''தலைவர் இதற்குச் சம்மதிக்கவில்லை யென்றால்......?'' — சந்தேகத்துடன் கேட்டான் சிவராமன்.

''சம்மதிக்க வைக்க வேண்டும். நம்முடைய பக்கத்தில் என்னையும் சேர்த்து ஆறு மாநிலங்களிலுள்ள தலைவர்கள் இருக்கிறார்கள். கட்சியில் ரஷ்ய—சீன வாடை வீசுவதைக் களைந்துவிட வேண்டும் என்றுதான் எல்லாரும் நினைக்கிறார்கள்'' என்றார் நரேந்திரபோஸ்.

''தலைவர் சம்மதிப்பார் என்ற நம்பிக்கை இல்லை'' என்றான் சிவராமன்.

''இசையவில்லை யென்றால், கட்சிக்குள் நமக்கு ஆதரவைத் தேடிக்கொண்டு தலைவரை எதிர்க்க வேண்டியதுதான்'' என்றார் நரேந்திரபோஸ்.

''இந்த ரீதியில் கட்சியை வளர்த்தால், மக்களிடையே நம்பிக்கை வளரப் போவதில்லை. இந்திய நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் இசைவான முறையில் கட்சியை வளர்க்க நாம் முயல வேண்டுமேயன்றிச் சீனுவோ, ரஷ்யாவோ இடும் கட்டளைக்கு இணங்க நாம் செயல்படுவது அறிவீனம்'' என்றார் குர்னும் சிங்.

''கடைசிவரை நீங்கள் தீவிரமாக இருப்பதானால் நானும் உதவி செய்கிறேன்'' என்றான் சிவராமன்.

மறு நாள் கல்கத்தாவிலிருந்து டில்லி போய்ச் சேர்ந்ததும் தலைவரைத்தான் முதலில் சந்தித்தான். அவனைக் கண்டதும் தலைவர் சீறி எழுந்தார்.

''இந்தக் கட்சியை வளர்க்க வந்திருக்கிறாயா? அல்லது ஒழிக்க வந்திருக்கிறாயா?'' என்று கோபத்தில் கத்தினார் தலைவர் வேதமூர்த்தி.

சிவராமன் அதிர்ந்து விட்டான். ஒரு கணம் பேச முடியாமல் சிலையாக நின்றான்.

''என் மனத்தில் தோன்றியதை....''

''உன் மனத்தில் தோன்றியதைக் கூறவா உன்னை அழைத்தேன்? கட்சிக்குள் வந்த பிறகு, கட்சியின் சித்தாந்தம் தான் உன் மனம். அதை விட்டு விலக உனக்கு உரிமை கிடையாது'' என்றார் தலைவர்.

சிவராமன் சிறிது நேரம் பேசாமல் நின்றான். பிறகு சற்றுத் துணிவுடன் தலை நிமிர்ந்தான்.

''என்னை நீங்கள் வெளிநாட்டுக்கு அனுப்பியிருக்கக் கூடாது. அங்கு எனக்கு ஏற்பட்ட ஏமாற்றங்களை என்னுள்ளேயே புதைத்துக் கொள்ள முடியவில்லை. கட்சியின் நன்மையைக் கருதித்தான் என்னுடைய எண்ணங்களை வெளியிட்டேன்'' என்றான்.

அவனையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார் தலைவர். சிவராமன் தொடர்ந்து சொன்னான் :

''கட்சியில் உள்ளவர்கள்கூடச் சுதந்திரமற்றுத்தான் அங்கு இருக்கிறார்கள். மாஸேதுங்கின் படத்தைக் காணும் போதெல்லாம் பயத்தினால் தான் வணங்குகிறார்களே தவிர, உள்ளத்தில் பற்றோ, மரியாதையோ இருப்பதாகத் தெரியவில்லை. எல்லாம் வெறும் சடங்குதான். ரஷ்யாவில் ஸ்டாலின் சிலையைக்கூட அப்புறப்படுத்தி விட்டார்கள். மாஸேதுங் இறந்த பிறகு, அவருக்கும் ஸ்டாலினின் கதியே ஏற்படலாம்! அச்சுறுத்தலும் அதிகாரமும்



கண்காட்சி
பிலிம்கள் • காமிராக்கள்
மற்றும் போட்டோகிராபி சாதனங்கள்
ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் படைப்புகள்.
1971 ஜனவரி 16 முதல் 26 வரை காட்சி
நடக்கும். இடம்: உள்ளூர் நூல் நிலையம்,
மௌண்ட் ரோடு, சென்னை 6.
நாள்தோறும் மாலை 3 மணி முதல் இரவு
8 மணி வரையிலும். சனி, ஞாயிறு மற்றும்
விடுமுறை நாட்களில் காலை 11 மணி முதல்
இரவு 8 மணி வரை திறந்திருக்கும்.
நுழைவுக் கட்டணம் இல்லை.
OR WO



RATAN BATRA/CW/TAM/04

தாம் அங்கெல்லாம் ஆட்சி புரிகின்றன. அன்பும் ஆதரவும் அல்ல.''

சிவராமன் கூறுவதையே கவனமாகக் கேட்டார் தலைவர். பேச்சை நிறுத்திவிட்டுத் தலைவரை உற்றுப் பார்த்தான் சிவராமன். தலைவரின் முகத்திலிருந்த கடுகடுப்பு குறைந்திருந்தது. கட்சிச் சித்தாந்தங்களில் மனம் குழம்பி வேதனையுடன் இருக்கும் சிவராமனின் மனத்தைச் சாந்தமாகப் பேசித்தான் மாற்ற வேண்டும் என்பதை உணர்ந்த தலைவர், அவனைப் பார்த்து இலேசாகச் சிரித்தார்.

''சிவராமன், எதையும் ஆழ்ந்து கவனிக்கும் உன்னுடைய திறமையைப் பாராட்டுகிறேன். ஆனால் கவனித்ததைப் பற்றித் தீரச் சிந்திக்கத் தான் தவறி விடுகிறாய்.

''மனித இனத்தின் வளர்ச்சிக்குச் சுதந்திரமும் தேர்தல் முறைகளும் சரியான பாதை அல்ல. பாட்டாளிகளின் புரட்சிதான் ஒரே பாதை. துப்பாக்கிக் குழாயிலிருந்து பிறக்கும் அதிகாரந்தான் சக்திவாய்ந்தது. பூர்ஷ்வாக்களின் தேர்தல் மூலமாகப் பிறக்கும் அதிகாரத்துக்கு ஆண்மை கிடையாது, சிவராமன்! மேலும் படிப்பறிவில்லாத பாமரர் தேர்ந்தெடுக்கும் பத்து முட்டாள்கள் நாட்டை ஆள்வதைவிட அறிவாளியான ஒரு சர்வாதிகாரி நாட்டை ஆள்வது எவ்வளவோ மேல்! புரட்சிதான் வரலாற்றில் மாபெரும் திருப்பங்



களை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நாட்டில் இஸ்லாம் புகுந்ததும் ஆட்சி செலுத்தியதும், வெள்ளைக்காரன் ராஜ நடை போட்டதும் தேர்தல் மூலம் அல்ல. பலாத்காரத்தினால்தான்! இதையெல்லாம் மறக்காதே!'' என்று வேதமூர்த்தி தொடர்ந்து வாதாடினார்.

தலைவரின் எதிரில் சிந்திக்கும் சக்தியையே இழந்து, அவருடைய சொல் மழையில் சிவராமன் முழுக்க முழுக்க நனைந்து விட்டான். ஆனால் தனியே இருந்து சிந்தித்த போது, சர்வாதிகார ஆட்சியின் பயங்கரம், அவன் கற்பனையில் பேய்க் கூத்தாடியது. அன்னலோஸியாவின் சோகம் நிறைந்த பார்வை, அவன் நினைவில் வந்து வாட்டியது. மாஸே துங்கின் படங்களின் முன்னே பணிந்த சீனத் தலைவர்களின் பீதி நிறைந்த கண்கள், எவ்வளவு பரிதாபத்துக் குரியவை!

சுதந்திரம்....! சிந்திக்க, சிந்தித்ததைச் சொல்ல, சொன்னதைச் செய்ய ஒரு மனிதனுக்கு வேண்டியது சுதந்திரம். முரளி, முன்பு ஒரு முறை சொன்னது எவ்வளவு உண்மை! —

''ஜனநாயக நாட்டில், சிறைக்கூடம் என்று தனியாக உண்டு. சர்வாதிகார நாட்டில், அந்த நாடே ஒரு சிறை!''

எவ்வளவு உண்மை இது! இதைச் சிவராமன் நேரிலேயே சர்வாதிகார நாடுகளில் கண்டு திடுக்கிட்டானே. சுதந்திரத்தை இழந்து, வெறும் சோற்றைப் பெறுவதில் மக்களுக்கு என்ன ஆத்ம திருப்தி கிடைத்துவிடும்...?

பல நினைவுகளால் சூழப்பட்டுப் பெட்டிக் கடையினுள் 'பாரதமணி'ப் பத்திரிகையைக் கையில் ஏந்தியபடி அமர்ந்திருந்த சிவராமன், சைரன் ஊதும் ஒலி கேட்டுத் திடுக்கிட்டான். பகல் பன்னிரண்டு மணிக்கு, கிஸான் சங்கத்துத் தலைவரைச் சந்திக்க வேண்டிய நினைவு வரவே, கடையை அடைத்துப் பூட்டிவிட்டு வெளியேறினான்.

சிவராமன், குண்டூரில் தலைவர் வேதமூர்த்தியின் கட்டளைகள் அனைத்தையும் நிறைவேற்றி வைத்தான். குண்டூர்ப் பகுதியில் கிஸான்களையும், தொழிலாளர்களையும் எந்தச் சமயத்திலும், கிளர்ச்சியிலும், கலகத்திலும் ஈடுபடத் தயாராக்கி யிருந்தான். வேதமூர்த்தி, உள்நாட்டில் பயங்கர இயக்கத்துக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருக்கிறார் என்பதை மட்டும் சிவராமன் அறிந்திருந்தான். ஆனால் அந்த இயக்கம் எப்போது, எந்த முறையில் நடைபெறும் என்பது மட்டும் இரகசியமாகவே இருந்தது.

ஒரு நாள் இரவு, சிவராமனுக்கு ஒரு பெரிய காகிதக் கட்டு வந்து சேர்ந்தது. கட்டின் மீது தெரிந்த இரகசியக் குறிப்புக்களிலிருந்து அது கட்சியின் தலைமைக் காரியாலயத்திலிருந்து வந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டான். கட்டை அவிழ்த்த போது, மேல் பகுதியில் சிகரெட் விளம்பரங்கள் சில இருந்தன. நடுப் பகுதியில் கட்சியின் துண்டுப் பிரசுரங்களும் போஸ்டர்களும் அடக்கம் செய்யப்பட்டிருந்தன. பரபரப்புடன் அவைகளைப் படித்தான் சிவராமன். அத்தனையும் சீனப் பிரசாரங்கள்! போஸ்டர்களில் மாஸே துங்கின் சிந்தனைகள் அச்சடிக்கப்பட்டிருந்தன.

''சரியான பாதை தேர்தல் அல்ல. உழவர்களின் புரட்சியே!''

''அதிகாரம் என்பது துப்பாக்கிக் குழாயிலிருந்துதான் வெளிப்படும்.''

''விடுதலைப் படை வந்து கொண்டிருக்கிறது. மாபெரும் சிந்தனையாளரான தலைவர் மாஸேதுங், உங்களுடைய காப்பாளராக இருக்கும் போது அஞ்ச வேண்டியதில்லை. அவருடைய சிந்தனைகளைப் பரப்புங்கள்.''

''வர்க்கப் போராட்டமே விடுதலையின் பாதை. போராட வரும் புரட்சிப் படையோடு இணையத் தயாராகுங்கள்.''

இப்படிப் பல துண்டுப் பிரசுரங்கள் இருந்தன. அவற்றைக் கண்டு திடுக்கிட்டான் சிவராமன். குண்டூர்ப் பகுதிகளில் தான் ஒன்றரை ஆண்டுகளாகப் பாடுபட்டு ஏற்படுத்தியிருக்கும் சூழ்நிலை, எதிர்காலத்தில் சீனப் படை இந்த மண்ணில் நுழைவதை எளிதாக்குவதற்கே என்பதை உணர்ந்த போது, சிவராமனின் உடல் நடுங்கியது. இவனைப் போல் நூற்றுக்கணக்கான தலைவர்கள் பல பகுதிகளில் தலைமறைவா யிருக்கிறார்கள். அத்தனை பேரும் ஆங்காங்கே பாட்டாளிப் படைகளை உருவாக்கியிருப்பார்கள். தலைவர் திட்டமிட்டிருக்கும் மாபெரும் இயக்கத்தைச் சீனர்கள் வந்திருந்து நடத்தப் போகிறார்கள்!

சிவராமன் மனம் புழுங்கித் தவித்தான். பெரிய ஏமாற்றத்துக்கு உள்ளாகிவிட்ட உணர்வு வாட்டியது. இன்னும் இரண்டு மாதங்களில் சென்னையில் இரகசியமாக நடைபெறப் போகும் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இதுபற்றி எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்று முடிவு செய்தான். துண்டுப் பிரசுரங்களையும், போஸ்டர்களையும் தீயிட்டுக் கொளுத்தினான். அவனுடைய செய்கையின் காரணம் புரியாமல் சிதம்பா, வியப்புடன் பிரசுரங்கள் எரிவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். (தொடரும்)



புரதம்
கார்போஹைட்ரேட்
கால்ஷியம் பேந்தோதீனேட்
வைட்டமின் ஏ
அயோடின்
வைட்டமின் பி 12
இரும்புச் சத்து
வைட்டமின் இ
நிகோடினமைடு
வைட்டமின் சி
கால்ஷியம்
பொட்டாஷியம்
பாஸ்பரஸ்
சோடியம் குளோரைடு
ட்ரேஸ் எலிமெண்ட்
வைட்டமின் பி-1
வைட்டமின் டி
ரிபோஃப்ளேவின்
கோலின்
பெரிடாக்ஸைன் (பி 6)
வைட்டமின் கே
ஃபோலிக் அமிலம்
உங்கள் உடலுக்குத் தேவை 23 ஊட்டச் சத்துக்கள்
பாலிலே உள்ளவை 9
காம்ப்ளான் 23 சத்துக்களும் கொண்டது
Complan
கிளாக்ஸோ ஆராய்ச்சியின் உலகறிந்த தயாரிப்பு
காம்ப்ளான் — முழுமையான உணவு
சத்துப் பற்றுக்குறைகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது.



நான்தான் மேஜர் சுந்தரராஜன் பேசுகிறேன். இரண்டு பக்கம் கோக்கி மார்க் இல்லாத நிஜ மேஜர். ஸான் பிரான்ஸிஸ்கோ முதல் ஸிட்னி வரையில் போகாத இடம் கிடையாது.

இப்போது பாருங்கள், பாபநாசம் மேல வீதியில் ஒரு வீட்டின் முன் ஹாலில் ஈஸிசேர் போட்டுக் கொண்டு சாய்ந்து கிடக்கிறேன். எங்கள் தாத்தா—அவரது தாத்தா — அத்தனை பேரும் வாழ்ந்த வீடு.

பக்கத்து மேப்பாயிலிருந்து ஒரு புதுச் சுருட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டேன். பல வருஷத்திய பழக்கம் இது.

எனக்குள் நான் சிரித்துக் கொண்டேன். எத்தனையோ விதமான அனுபவங்கள். ஒவ்வொன்றும் ஒருவிதமானவை.


என் குடும்பத்துக்கு நான் துரோகம் செய்ததாக மட்டும் யாரும் கூற முடியாது. எது எதற்கு என்ன என்ன விலையோ அதைக் கொடுத்து அப்பொழுது அப்பொழுது மறந்து விடுவதுண்டு. அப்படித்தான் என் வாழ்க்கை அமைந்துவிட்டது. நேற்று நடந்ததைப் பற்றி நான் நினைத்துப் பார்ப்பதில்லை. நாளை நடக்கப் போவதைப் பற்றிக் கவலைப்படுவதுமில்லை.

உள்ளே கணகணவென்று மணி அடிக்கிறது. அவள்தான் — மிஸஸ் சுந்தரராஜன் — லலிதா ஸஹஸ்ரநாமம் படித்துவிட்டுத் தீபாராதனை செய்கிறாள். தை வெள்ளிக் கிழமை, விசேஷம் இது. சாதாரண நாட்களில் அன்னபூர்ணாஷ்டகம், மீனாட்சி பஞ்சரத்னம் இவற்றோடு சரி. சின்னப் பையனாக இருந்தபோது என் அம்மாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து நான்கூடச் சொல்லியிருக்கிறேன். இப்போது முழுமையாக மறந்து விட்டது. இன்னும் ஒரு நிமிஷத்துக்குள் தீபாராதனைத் தட்டை ஏந்திக்கொண்டு வந்து என் முன் நிற்கப் போகிறாள்.

நான் அவள் மனத்தைப் புண்படுத்தியதில்லை. அவளை அலட்சியம் செய்ததில்லை. கற்பூரத் தட்டை அவள் நீட்டினால் நான் என் கண்களில் ஒற்றிக் கொள்வேன். அவள் கொண்டு தரும் பிரசாதத்தை நான் நெற்றியில் இட்டுக் கொள்வேன். சுருட்டுக் கையைக் கழுவி விட்டு வரும்படி அவள் சொன்னதில்லை. நான் உபயோகித்த டம்ளரை எச்சில் என்று ஒரு முழம் தள்ளிக் கையை வைத்துக் கொண்டு தூக்கிப் போனதில்லை. அப்படி ஒருகால் அவள் நடந்திருந்தால் எங்களுக்குள் பிளவு ஏற்பட்டிருக்கலாம்.



அவள் வந்து விட்டாள். எரியும் கற்பூரத்தை நான் கண்களில் ஒற்



குங்குமச் சிமிழ்

* அன்னம் *

றிக்கொண்டேன். அந்த வாசனையும் நன்றாகத்தான் இருக்கிறது. குங்குமத்தை என் நெற்றியில் இட்டுக்கொண்டேன். அவற்றின் சில துளிகள் என் நரைத்த மீசையின் மேல் விழுந்து விட்டன. மீசையைத் தட்டி அந்தத் துகள்களைத் தரையில் உதிர்த்தேன். எப்படி நிமிர்ந்து நின்ற மீசை எப்படி இவ்வளவு தழைந்து போயிற்று?

அவன் அப்படிப் போனவுடன் கதவை இழுத்துத் தாளிட்டேன். என் கொத்துச் சாவியை எடுத்து என் பீரோவைத் திறந்து அருமையான விஸ்கி இரண்டு அவுன்ஸ் விட்டு ஒரே விழுங்கில் விழுங்கி விட்டேன். இனி பகல் ஒரு மணி வரையில் ஆனந்தமான ஓர் அரை மயக்கம்தான்.


''ஸார் தபால்!'' என்ற குரல் கேட்கிறது. தபால்காரர் பழைய ஆசாமி. அப்துல் சர்தாரோ சத்தாரோ — பெயர் ஞாபகம் இல்லை.

எனக்கு ஒரு ரிஜிஸ்தர் கடிதம்... ஓ! இந்த 'உதவாக்கரைப் பயல்' சேகர்தான் அனுப்பியிருக்கிறான். என் பெயருக்கு அவன் எழுதும் முதல் கடிதம். இதுவரை அவன் பாட்டிக்கு எழுதியதோடு சரி... பக்கம் பக்கமாகத் தமிழில் வரைந்து தள்ளுவான். அவளும் எதை எதையோ செய்து டின்னில் அடைத்து — ஒரு தடவைக்குப் பத்துத் தடவையாகத் தபால் ஆபீசுக்கு நடந்து அமெரிக்காவுக்குப் பார்சல் செய்து அனுப்புவான். அதில் பெரிதாக ஒன்றுமிருக்காது. அரிசி முறுக்கும் ஆவக்காய் ஊறுகாயும்தான் இருக்கும்.

கையெழுத்துப் போட்டுக் கடிதத்தை வாங்கிக் கொண்டேன்.

கவரைக் கிழித்துக் கடிதத்தைப் பிரித்துப் பார்க்க முயன்றேன். முடியவில்லை. மீண்டும் அறையினுள் நுழைந்து என் மேஜை விளக்கைப் போட்டு, மூக்குக் கண்ணாடியைத் தேடினேன். என் பார்வையில் முதலில் பட்டது மேஜையின் மேல் வைக்கப்பட்டிருந்த ரமணனின் படம்!

ரமணன் என் ஒரே பிள்ளை. சேகரின் அப்பா ..... இப்போது அவன் இல்லை. இந்தச் சேகருக்கு ஒரு வயது ஆகும் போது அவன் போய் விட்டான். எத்தனையோ மனக் கோட்டைகள்



கட்டியிருந்தேன். எல்லாவற்றையும் இடித்துத் தள்ளிவிட்டு ஓரேயடியாகப் போய் விட்டான், 'லாஸ்ட் ஜர்னி' — ஹூம்!

அவன் பெரிய டாக்டர்! எம். எஸ். பாஸ் செய்துவிட்டு — இன்னும் மேல் படிப்புக்காக லண்டன் அனுப்பி யிருந்தேன். ஒரு பெரிய வேலை பார்த்துக் கொண்டே அவனும் மேலே படித்தான். தனி பிராக்டீஸ் வேறு!

தியாகராயநகரில் பெரிய நர்ஸிங்ஹோம். அதே காம்பவுண்டில் அவனுக்கு ஒரு பங்களா என்றெல்லாம் நான் நினைத்தது கனவுகளாகிப் போய்விட்டன. என் வாழ்க்கையில் நான் அடைந்த ஒரே ஏமாற்றம் — மிக மிகப் பெரிய தோல்வி — ரமணனின் இழப்பு. அது தனிக் கதை!

இப்போது அவன் பிள்ளை சேகர் — இவனும் ஒரு டாக்டர்; அப்பனுக்கு இம்மியும் சோடை போகாத பயல்! கெட்டிக்காரப் பயல்!

நல்ல எதிர்காலம் அவனுக்கு இருக்கிறது. பெரிய பெரிய ஆபரேஷன்களுக்கெல்லாம் அவன் அஸிஸ்டென்ட். இருதய மாற்று ஆபரேஷன் செய்யக்கூடத் தகுதி பெற்று விட்டான். என் ஒரே பேரன் — ஒரே பிள்ளையின் ஒரே மகன். அவனுக்கு நான் கல்யாணம் செய்து வைக்கவில்லை; அது ஒரு கால் கட்டு; அவன் முன்னேற்றத்துக்கு ஒரு தடை. அவன் பாட்டி என்னிடம் சொல்லிப் பார்த்தும்கூட நான் கேட்கவில்லை. அவன் அமெரிக்காவிலும் அவன் பாபநாசத்திலும்! சே!... என்ன வாழ்க்கை! இரண்டு பேருக்கும் ஒரே நரக வாழ்க்கையாக இருக்கும்!

கடிதம் அவனிடமிருந்துதான் வந்திருந்தது:

''முற்போக்கான கொள்கைகள் உடைய என் பாட்டனார் நான் சொல்வதை அதிக விளக்கமில்லாமல் புரிந்துகொள்வார் என்ற நம்பிக்கையில் நான் இதை எழுதுகிறேன். இங்கு என்னுடன் சக டாக்டராகப் பணி ஆற்றும் ஜினாராவும் நானும் வாழ்க்கையில் இணைய விரும்புகிறோம். 'வாசிஷ்ட மைத்ரா வருண கௌண்டின்ய' முனிபுங்கவர்களின் பரம்பரையில் வந்துள்ள நான் சந்தர்ப்பங்கள் எப்படி இருந்து வந்த போதிலும் ஒரு சிகரெட்டைக்கூடத் தொட்டுப்பார்க்காத நான்—பக்கத்து மேஜைகளில் 'சாம்பேன்' நுரை பொங்கி நின்றபோதும் பச்சைத் தண்ணீர் மட்டும் அருந்தித் திருப்திப்பட்டுக் கொள்ளும் நான், ரொட்டியும் வெண்ணெயும் மட்டும் சாப்பிட்டு வரும் நான் — இப்படி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன் என்ற ஒன்றே, நாங்கள் ஒருவரை யொருவர் எவ்வளவு தூரம் விரும்புகிறோம் என்பதற்கு அளவுகோல். உங்களுக்கும் இது உடன்பாடாகத்தான் இருக்கும். பத்து வயதில் தாயை இழந்த எனக்குத் தாய்க்குத் தாயாக இருந்து வரும் பாட்டிக்கு நிச்சயம் இது பேரதிர்ச்சியைக் கொடுக்கும். மனமுடைந்துபோகத்தான்செய்வாள். ஆனால் அவள் ஒரு ஞானிக்கு ஒப்பானவள். சுக துக்கங்களைச் சமமாகப் பாவிக்கும் மனப் பக்குவம் உள்ளவள். இப்போது இல்லாவிட்டாலும் ஒரு நாள் என்னை அவள் புரிந்து கொள்வாள். நீங்கள் மட்டுமாவது நேரில் வந்து எங்களை வாழ்த்த வேண்டுமென்பது எங்கள் வேண்டுகோள் — பணிவான விண்ணப்பமும்கூட.

எழுபது வருடங்களைக் கடந்த உங்களைப் பல்லாயிரம் மைல்கள் பறந்து வரச் சொல்வதைக் காட்டிலும் நாங்களே அங்கு வந்து உங்கள் முன்னிலையில் எங்கள் பந்தத்தை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். "ஆனால் அப்படி இயலாததற்குக் காரணம் ஒன்று உண்டு.

எனக்கும் ஜினாராவுக்கும் எந்தப் பொருத்தம் இருந்தாலும் இல்லாமற் போனாலும் ஒரே ஒரு பொருத்தம் நிச்சயம் உண்டு. அவளுக்கும் என்னைப் போலவே தாயும் இல்லை, தந்தையும் இல்லை. பாட்டி ஒருத்தி — மிஸஸ் ருட்ஹார்ட் — இரண்டு கால்களின் சுவாதீனத்தையும் இழந்து படுத்த படுக்கையாக இருக்கிறாள். அவள் உங்களைப் பார்க்க விரும்புகிறாள். உங்களைத் தெரியும் என்கிறாள். 'எப்படி என் தாத்தாவை உங்களுக்குத் தெரியும்?' என்று கேட்டால் சரியான விவரம் தர மறுக்கிறாள். அவர்கள் வீட்டு ஆல்பத்தில் பல ராணுவ அதிகாரிகளுக்கு நடுவில் நீங்களும் இருக்கிறீர்கள். அதைக் கொண்டுவரச் சொல்லிக் காட்டிய பிறகுதான் நானே நம்பினேன்.

மிஸஸ் ருட்ஹார்ட்டின் ஜீவித காலம் நாட்களில் எண்ணக்கூடிய நிலையில் உள்ளது. அமெரிக்கத் தூதுவர் மூலம் உங்கள் 'விசா' வுக்கு நான் ஏற்பாடு செய்து விட்டேன். 'பான் — அமெரிக்கன்' விமானத்தில் உங்கள் டிக்கட்டுகள் பதிவாகி விட்டன.

அடுத்த புதன்கிழமை உங்களை விமான நிலையத்தில் நானும் ஜினாராவும் சந்திக்கிறோம்.''

கடிதத்தைப் படித்து முடித்தேன். விமான டிக்கட்டுகள் உடன் இணைக்கப்பட்டிருந்தன. என் பாஸ்போர்ட்டை நான் அப்போது அப்போது புதுப்பித்து வைத்துக் கொண்டது தான் எத்தனை சௌகரியமாகப் போயிற்று!

பகல் உணவின்போது அவளிடம் விஷயத்தைச் சொன்னேன். ரசம் ஊற்றிக் கொண்டிருந்தவள் அப்படியே சிலையாகி விட்டாள்.

''காமு!... நம்முடைய காலம் ஆகப் போகிறது. ஸ்டேஜில் இனி நமக்கு இடம் இல்லை. மூலையில் முடங்கிக் கொள்ள வேண்டிய பருவம் இது. அவனாவது அவன் விருப்பப்படி இருக்கட்டுமே! வாட் ஐ ஸே!... அவன் சந்தோஷம்தானே நமக்கு முக்கியம்?'' என்று அவளைத் தேற்றினேன்.

அவள் பதிலே பேசவில்லை.

இரண்டு நாட்கள் கழித்து நான் சென்னைக்குக் கால் எடுத்துவைக்கும் சமயம். எக்ஸ்பிரஸ் பஸ்ஸுக்கு டிக்கட் ரிஸர்வ் ஆகிவிட்டது. சென்னையிலிருந்து பம்பாய்க்கு விமான டிக்கட் வாங்கிவிட்டதாக என் சென்னை நண்பர் போனில் கூப்பிட்டுச் சொல்லியிருந்தார்.

அவள் — மிஸஸ் சுந்தரராஜன் — என் கையில் ஒரு குங்குமச் சிமிழைக் கொடுத்தாள். ''இது அவன் அம்மா வரும்போது கொண்டுவந்தது. கல்யாணமான பிறகு அவன் கையால் அந்தப் பெண்ணின் நெற்றியில் ஒரு பொட்டாவது வைக்கட்டும். எல்லோர் எதிரிலும் அப்படிச் செய்ய அவனுக்கு சங்கோசமாக இருந்தால், தனியாக இருக்கும் போதாவது வைக்கட்டும்!'' குரலில்தான் எத்தனை நெகிழ்ச்சி!

என் கண்களில் கூட சரக் கசிவு! சே! நான் கூடவா பச்சைக் குழந்தையாக மாறிப் போகிறேன்!

இவரால் முடியுமா?

வண்டியோட்டிச் செல்லும் வேளையில் ஒவ்வொரு டிரைவரும் எந்த நிமிஷமும் உஷாராக இருந்து, சரியான முடிவு களைச் சட்டென எடுப்பது அவசியம்.

ஸதர்ன் ரோட்வேஸின் வண்டிகளின் தரத்திற்கேற்ப இவர் இருக்கவேண்டு மானால், இவரிடம் மெய்யான தரம் இருந்தாக வேண்டும்; முடிவுகளை உட னுக்குடன் எடுத்தாக வேண்டும்.

அதனால்தான் வேலைக்கு நியமிக்கு முன் ஒவ்வொரு டிரைவரையும் நாங்கள் நன்கு சோதிக்கிறோம். பிறகும் அவ் வப்போது இவர்கள் சோதிக்கப்படு கிறார்கள்.

உடல்வியலையும், உளவியலையும் பொறுத்து நாங்கள் நடத்தும் பூரணப் பரிசோதனைகள், தூரத்தைப்பற்றிய துல்லியமான மதிப்பீடு, பக்கவாட்டில் முழுமையாக பார்க்கும் திறன், வண் ணங்களை நன்கு பகுத்தறியும்பான்மை, பிரகாசமான ஒளியால் கூசும்கண்களை விரைவில் மறுபடி இயக்கும் வல்லமை, கண்—கால்களிடை கச்சிதமான ஒத் துழைப்பு ஆகிய அனைத்தும் டிரைவ ரிடம் பொருந்தியிருக்குமாறு பார்த்துக் கொள்கின்றன.

தனது திறமையான சேவையானது தனது டிரைவர்களின் திறமையையும் சார்ந்துள்ளது என்பதை ஸதர்ன் ரோட்வேஸ் எப்போதும் உணர்ந்து இருக்கிறது.

இதன் லாரிகள் இரவு 11-மணி யிலிருந்து அதிகாலை 4-மணிவரை ஓட் டப்படுவதில்லை — ஏனெனில், இந்த நேரம்தான் மனிதனுக்கு ஆழ்ந்த உறக் கம் வரும் நேரம்; இந்த சமயத்தில் தான் பெரும்பாலான சாலை விபத்து கள் நடக்கின்றன என்பதும் கண்ட றியப்பட்டுள்ளது.


தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், மைசூர், கேரளம் முதலிய மாநிலங்களின் மக்க ளிடை ஸதர்ன் ரோட்வேஸ் பெரு நம்பிக்கை பெற்றிருப்பதற்கான காரணங்களில் இது ஒன்று.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்

(இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)

மதுரை



''யூ வில்லி! உன் பேரன் மனைவியை நெற்றிக் குங்குமத்துடன் போட்டோவே எடுத்து வருகிறேன். போதுமா?'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டேன்.

நியூயார்க் விமான நிலையம்.

அதோ சேகர். அவன் பக்கத்தில் ஜொரா வாகத்தான் இருக்க வேண்டும். பொன்னிறக் கூந்தல். மெலிந்த இடையுடன் கூடிய உயரமான உருவம். குழந்தை போன்ற மகிழ்ச்சி.

என் கைகளைப் பற்றிக் கொண்டான் சேகர். அவளைப் பார்க்கப் பார்க்க எனக்கு ஒரு சந்தேகம். ரமணன் மீண்டும் உயிருடன் எழுந்து வந்துவிட்டானா? அதே அச்சு! அதே ஜாடை!

அந்தக் குழந்தையை அணைத்து நெற்றிச் சுவட்டில் என் இதழ்களைப் பதித்தேன்.

''வங்கா, தாத்தா... வங்கா... நாமஸ்காரம்!...'' என்று கொஞ்சினாள் அவள்.

''ஒரு மணி நேரம் ரிஹர்சல் வேஸ்ட்... தமிழைக் கடித்துக் கடித்துத் துப்புகிறாள்'' என்றான் சேகர்.

அவனுக்குப் புரியவில்லை.

''ஏதேனும் பேசுவதாக இருந்தால் இங்கிலீஷில் பேசுங்கள். நீங்கள் பேசுவது எனக்குப் புரியாமல் போனால் என்னைத் திட்டுகிறதாக நினைத்துக் கொள்வேன்...'' என்றாள் அவள் விளையாட்டாக.

''ஓ! மை சைல்ட்! ஹௌ ப்யூட்டிஃபுல் யூ ஆர்!'' என்று நேரிலேயே நான் வியந்து போனேன்.

சேகர் மயங்கியதில் தப்பில்லை. என் வயதில் நாற்பது வருஷங்கள் கழிக்கப்பட்டால், இந்தச் சேகருடன் நான் போட்டிக்குப் போய் விடுவேன்....இவளைப் போல் ஒரு தொண்டு கிழவனின் அனுமதிக்காக நாட்களைக் கடத்திக்கொண்டிருக்க மாட்டேன்.

''உங்களுக்கு அவசரமாக இல்லாமல் போனால் நேராகக் ஜொராவின் பாட்டியைப் போய்ப் பார்த்து விடலாம். இன்னும் இரண்டொரு தினங்களுக்கு மேல் அந்த யந்திரம் ஓடாது!'' என்றான் சேகர்.

''ஆகட்டும் போகலாம்'' என்றேன் நான்.

கார் நகர்ந்தது. ஜொரா ஓட்டிச்சென்றாள். ஏதோ ஓர் அபார்ட்மெண்ட். ஜொரா வழி காட்ட நானும் சேகரும் பின்தொடர்ந்தோம். 'லிப்டி'ல் பல மாடிகளைக் கடந்து, பல திருப்பங்களில் திரும்பி ஏதோ ஓர் அறைக்குள் நுழைந்தோம்.

படுக்கையில் கிடந்த மெலிந்த உருவத்தின் உச்சிப் பொட்டில் ஜொரா முத்தமிட்டாள்.


''கிரானி! மேஜர் சுந்தரம் இஸ் ஹியர்!''

''ஹௌ ஆர் யூ?'' என்று வினவியபடியே நான் பக்கத்தில் போய் நின்றேன்.

மெலிந்து போய் நோயினால் பீடிக்கப்பட்ட அந்த மூதாட்டி விழிகளை மட்டும் உயர்த்தி என்னைப் பார்த்தாள். எனக்கு அடையாளம் தெரியவில்லை.

பக்கத்து நாற்காலியில் உட்காரச் சொல்லி என்னை ஜாடை காட்டினாள். நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தேன்.

''என்னை உங்களுக்கு நினைவிருக்காது.... ஆனால் நான் உங்களைத் தெரிந்து கொண்டுவிட்டேன். உங்கள் மீசையும்



'' இறப்பு விழாவுக்கு எட்ட இருந்தே 'ஸ்விட்ச்' போடச் சொன்னால்...விட்டே போய் விட்டார்!''

முடியும்தான் உங்கள் வயது கூடிவிட்டதற்கு அடையாளம். மற்றபடி பழைய சுந்தரமே நீங்கள்....'' மெதுவாக ஆனால் அழுத்தமாகவும் புரியும்படியும் பேசினாள் அவள்.

''என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். தோற்றம் மாறவில்லையே தவிர ஞாபகசக்தி அடியோடு மங்கிவிட்டது. நாம் இதற்கு முன்பு எப்பொழுது எங்கே சந்தித்திருக்கிறோமென்று ஞாபகப்படுத்திக் கொள்ள முயன்று பார்க்கிறேன். என்னால் முடியவில்லை.''

என் பலவீனத்தை ஒப்புக்கொள்ள எனக்கு வெட்கமாக இருக்கிறது.

அவள் சொன்னாள்: ''நம் கடைசிச் சந்திப்பை அத்தனை எளிதில் மறக்க முடியுமா? நைன்டீன் தர்ட்டி செவன் ஜூலை ட்வென்டி தேர்ட்'' என்றாள்.

என் உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரை அத்தனை நரம்புகளும் புடைத்தெழுந்தன. ஒவ்வொரு ரத்த நாளமும் முறுக்கேறுகின்றது. கலங்காத என் விழிகள் நீரில் மிதக்கின்றன. என் பதற்றம் வெளிப்படையாகத் தெரிகிறது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தேழாம் வருஷம் ஜூலை மாதம் இருபத்து மூன்றாம் தேதி என் வாழ்வில் மறக்க முடியாத நாள். என் குடும்ப விளக்கான என் மகன் ரமணனை இழந்த அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த நாள்.

''நீங்கள்... நீங்கள்... மிஸஸ் ப்ரௌனிங் அல்லவா?'' என்கிறேன். ஞாபகம் வந்துவிட்ட பரபரப்பில்.

''ஆமாம், ஆமாம். அப்போது மிஸஸ் ப்ரௌனிங்... இப்போது மிஸஸ் குட்ஹார்ட். ஜான் மறைந்த பிறகு என் கன்னிப் பெயரை மீண்டும் வைத்துக் கொண்டு விட்டேன். அன்று நடந்த சம்பவத்துக்கு மிஸஸ் ப்ரௌனிங் எத்தனை வருந்தினாள் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா?''

''மறக்குமா என்ன?''

லண்டனில் ரமணன் தங்கியிருந்த சமயம். நானும் அங்கே ஏதோ ஒரு விசேஷப் பயிற்சிக்காகப் போயிருந்தேன். ராணுவத்தில் என் கூடப் பணியாற்றிய கர்னல் மில்ஸ் என்பவரின் வீட்டில்தான் ரமணன் தங்கியிருந்தான். அந்த வீட்டின் மாடியில் இன்று

மொரு குடும்பம். மிஸ்டர் அண்ட் மிஸஸ் ப்ரௌனிங். அவர்கள் குமாரி மேரி. மிஸ்டர் ப்ரௌனிங் ஒரு நோயாளி. அதுமட்டுமல்ல: இரவில் நல்ல தூக்கத்தில் தம்மை யுமறியாமல் நடக்கும் பழக்கம் உள்ளவர். தென்னாப்பிரிக்கக் காடுகளில், 'ஸர்வீஸ்' பார்த்து விட்டுத் திரும்பி வந்தார். ரமணன் அவருக்குச் சில மாதங்களாகக் குடும்ப டாக்டர்.

நான் அங்கு தங்கியிருந்த சில மாதங்களில் மிஸஸ் ப்ரௌனிங் திடீரென்று நடு இரவில் கூச்சல் போடுவாள். எல்லோரும் ஓடிப் போய்த் தேடுவோம். உறங்கிய நிலையில் எங்கோ நடந்து போய்க் கொண்டிருக்கும் மிஸ்டர் ப்ரௌனிங்கைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து சேர்ப்போம்.

மறக்க முடியாத அந்த நாள். முப்பத்தி ஏழு ஜூலை இருபத்தொன்று — அயர்ந்து உறங்கிக் கொண்டு இருந்த நான் விழித்துக் கொண்டேன். நீட்டிய கைகளுடன் மிஸ்டர் பிரௌனிங் — உறக்க நிலையில் மாடி ஏறிப் போவது என் பார்வையில் படுகிறது. ரமணனை எழுப்ப அவன் அறைக்குள் நான் ஓடினேன். கட்டிலின் மேல் ரமணன். இரண்டு கைகளும் விகாரமாகத் தொங்கிக் கிடக்கின்றன. அவன் முகத்தின் மேல் அழுத்தப்பட்ட ஒரு தலையணை.... அதை எடுத்துப் பார்த்த போது..... ஐயோ !....

என்ன சொல்வேன்? எப்படிச் சொல்வேன்.... என் பிள்ளை — என் குல விளக்கு— பிணமாகக் கிடந்தான்.

''மிஸ்டர் பிரௌனிங் !'' என்று நான் அலறி விட்டேன். மாடிக்குத் தம் அறையில் போய்ப் படுத்து நிம்மதியான உறக்கத்தில் ஆழ்ந்திருந்த அவரை உலுக்கி எழுப்பினேன்.

சுய நினைவுக்கு அவர் திரும்பிய பின்னர் — தூக்கக் கலக்கத்தில் அவர் செய்துவிட்ட அக்கிரமத்தை அவருக்கு விவரித்தேன். ஐயோ! எப்படித் துடித்துப் போனார் அவர் ? என்னை அவர் தேற்ற வேண்டியது போக அவரை அல்லவா நான் தேற்ற வேண்டி வந்தது ? மிஸஸ் பிரௌனிங் தான் பெற்ற பிள்ளை மறைந்தது போல் துடித்துப் போனாள்.

போலீஸ் வந்தது. ''என்னை அழைத்துப் போங்கள்! நான் ஒரு கொலைகாரன். என்னைத் தூக்கிலிடுங்கள்!'' என்று கூக்குரல். பிடிக்கு அடங்காமல் அவர் துடித்தார். தூக்க மருந்து கொடுத்துத் தூங்க வைத்த பின்னர்தான் அவர் அடங்கினார்.

என் மனத்திரையில் அந்தக் காட்சிகள் அன்று நடப்பது போல் விரைகின்றன. மிஸஸ் குட்ஹார்ட்டின் மெல்லிய குரல் என் கவனத்தை ஈர்க்கின்றது.

'' துயரமான ஒரு சம்பவத்தின் ஒரு பாதியை நீங்கள் ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பீர்கள்.... இன்னுமொரு பாதியைச் சொல்ல என்னை அனுமதியுங்கள் !'' என்கிறாள் அவள்.

''உங்கள் மகன் ரமணன் நல்ல டாக்டர்.... என் மேரியை உங்களுக்கு நினைவு இருக்கிறதா? ஔராவின் தாயைச் சொல்கிறேன். கிட்டத்தட்ட ஔரா மாதிரிதான் இருப்பாள். ஒரு நாள் உங்கள் மகனையும் என் மகளையும் நெருக்கமான நிலைமையில் என் கணவர் பார்த்து விட்டார். இருவருமே தங்களை மறந்துவிட்ட ஒரு தருணம் அது. மேரியைப் பின்னர் கூப்பிட்டு விசாரித்தபோது, உங்கள் மகனைத் தவிர வேறு யாரையும் மணக்கப் போவதில்லை என்று சொல்லியிருக்கிறாள். என் கணவர் மனம் பதறியிருக்கிறது. நீங்கள் அவருடைய மிக நெருங்கிய நண்பர். உங்கள் பிள்ளை அவருடைய மதிப்புக்குரிய டாக்டர்..... ஆனால் மேஜர்....''

நான் கண்களைக்கூட இமைக்காமல் அவளையே பார்க்கிறேன். சேகரும் ஔராவும் அசையாமல் நிற்கிறார்கள். மிஸஸ் குட்ஹார்ட் தொடர்ந்தார்.

'' நாங்கள் தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பியவர்கள். நிற வேற்றுமை எங்கள் ரத்தத்தில் ஊறிய ஒரு வியாதி. அந்த இடம் டர்பனாக மட்டும் இருந்தால் ரமணனை நேருக்கு நேர் சுட்டிருப்பார். ஆனால் லண்டன் ஆயிற்றே, மேஜர். இப்போது எனக்குச் சொல்லவே கூசுகிறது. ஏகவே, என்னை ரட்சியும்..... என் கணவர் தம் வியாதியை ஓர் அரணாக அமைத்துக் கொண்டு உங்கள் மகனைக் கொலை செய்து விட்டார், மேஜர்.... கொலையே செய்து விட்டார். அன்று உறங்கியது போல் அவர் நடித்தாரே தவிர, உண்மையில் உறக்கம் அவர் கண்களைத் தழுவவேயில்லை.''

என் இருதயத்தில் பேரிடி. என் தலை சுற்றியது. சேகர் தன்னைச் சமாளித்துக் கொள்ளப் பக்கத்தில் மேஜையைப் பிடித்துக் கொண்டான். ஔராவின் முகத்தில் அளவிட முடியாத பீதி. முதலில் தன் சுய நிலையை அடைந்தவன் நான்தான் !

''இதை யெல்லாம் இப்போது — இத்தனை நாட்கள் கழித்து நீங்கள் ஏன் சொல்ல வேண்டும்?'' என்று கேட்டேன், அதிர்ச்சியிலிருந்து முற்றும் மீளாமல்.

''எனக்கும் இது முன்பே தெரியாது மேஜர்! எல்லோரையும் போலவே நானும் அதைத் துர்ப்பாக்கியவசமாக நேர்ந்த ஒரு விபத்தாக எண்ணி வந்தேன். நாட்கள் செல்லச் செல்ல- மனச்சாட்சி என் கணவரை வதைத்து இருக்க வேண்டும் — ஒவ்வொரு கணமும் தன் செய்கையை எண்ணி அவர் வருந்தியிருக்க வேண்டும்.... அளவுக்கு மீறிக் குடிக்க ஆரம்பித்தார். அவர் நாட்களும் அதனால் குறுகியது. அவர் விரும்பியபடி வேறு ஒருவரை மணந்த மேரி அற்பாயுளில் போனதைக் கண்டு கலங்கினார். மனிதர்களுக்கும் அப்பாற்பட்ட சக்தி ஒன்று உண்டு என்பதை உணர்ந்தார். மரணப் படுக்கையில் அவர் என்னிடம் கூறியதை நான் இதுவரையில் மறைத்தேன். அவர் பெயருக்கு அபக்கியாதி, மாக ஏற்படக் கூடாது என்ற என் எண்ணம் காரணமாக இருக்கலாம். ஆனால் இன்று நான் மரணத்தின் வாயிலில் நிற்கிறேன். என் கண் முன் உங்கள் மகனின் மகனும் என் மகளின் மகளும் காதலர்களாக நிற்கிறார்கள். ஆண்டவனின் சித்தம் நம் குடும்பங்கள் இணைய வேண்டியது என்பது போலும் ! உண்மையான கத்தோலிக்கப் பிரஜை நான். என் சுமையை எப்படியாவது ஒரு பாதிரியாரின் முன் இறக்கத்தான் போகிறேன். அப்படியிருக்க, ஏன் பாதிக்கப்பட்ட உங்க

இவரிடமிருப்பது பிரஸ்டிஜ் Prestige இவரிடமிருப்பது ப்ரீத் PREETT



இவர் இருப்பது இந்தியாவில்



இவர் இருப்பது வெளிநாட்டில்


இருவரும் உபயோகிப்பது
ஒரே பிரஷர் குக்கர்தான்
இரண்டுமே டிடி.(பிரைவேட்) லிமிடெட் தயாரிப்புதான்
– பெயர் மட்டுமே வித்தியாசம்

இந்தியாவில் பிரஸ்டிஜ் என்றும், ஏற்றுமதிக்கு ப்ரீத் என்றும் தயாரிக்கப்படும் இரண்டு குக்கர்களும் எவ்வகையிலும் ஒன்றுதான். எட்டு லட்சத்திற்கும் அதிகமான குடும்பத் தலைவிகள் இவற்றை நாள்தோறும், ஆண்டுக்கணக்கில் பயன்படுத்துகிறார்கள்.

உங்கள் பிரஷர் குக்கர் பிரஸ்டிஜானாலும் சரி, ப்ரீத்தானாலும் சரி அவை பயன்படுத்தப் பத்திரமானது. ஆயுள்கால உத்தரவாதம் கொண்டது. நாடெங்கும் விற்பனைக்குப் பின்னரும் பராமரிப்புக்கு வசதியுள்ள பிரஷர் குக்கர் இது ஒன்றே.

சீக்கிரமாயும் சுலபமாயும் சமைக்க உதவுபவை, ப்ரீத் 'ஸ்டீம்-இட்', ஸ்கில்லெட், ஸாஸ்பான் பாத்திரங்கள்.

HTA-TTP-3691



டிடி. (பிரைவேட்) லிமிடெட், பெங்களூர் 16

விடமே என் கணவருக்கு நான் பாவ மன்னிப்பை நாடக் கூடாது ?''

அவள் மூச்சு இரைத்தது. மிகப் பலஹீனமான நிலையில் இருந்தாள் அவள்.

சேகர் இடைமறித்தான். ''இது போதும், மிஸஸ் குட்ஹார்ட் ! இனி நீங்கள் பேசக் கூடாது ! எந்த முக்கியமான விஷயமானாலும் நான் அனுமதிக்க மாட்டேன்......'' அவனுள் இயங்கிய 'வைத்தியன்' அப்போது தான் விழித்துக் கொண்டான் போலும்.

ஸொராவை அங்கேயே விட்டு விட்டு நாங்கள் இருவரும் புறப்பட்டோம். எங்கள் இதயங்கள் கனத்திருந்தன. நானும் சேகரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டோம். என்ன பேசுவது என்ற தெளிவு ஏற்படாத நிலையில் பரிமாறிக் கொண்டது வெறும் சூன்யம் மட்டுமே !

உறக்கம் பிடிக்காமல் புரண்டு கொண்டிருந்த என்னை எழுப்பி சேகர் மிஸஸ் குட்ஹார்ட் அமைதி அடைந்துவிட்ட விவரத்தைக் கூறினான். ஸொராதான் போன் செய்திருந்தாள்.

அடுத்த சில நாட்கள் அந்த ஆத்மா தங்கியிருந்த கூட்டை அடக்கப்படுத்தும் ஏற்பாடுகளில் ஓடியே போயின.

அடுத்து எடுக்க வேண்டிய முடிவு என் பொறுப்பாக ஆகின்றது. நானே சேகரைத் தேடிக் கொண்டு போனேன்.

''ஊரில் உன் பாட்டி தனியாக இருக்கிறாள்.... மேலே நடக்க வேண்டியது பற்றி ஸொராவிடம் பேச வேண்டாமா ?'' என்று ஆரம்பித்தேன்.

'' இத்தனை நடந்த பிறகு எப்படித் தாத்தா இது பற்றி உங்களிடம் நான் பேச்சு எடுக்க முடியும் ?'' என்றான் அவன் நாத் தழுதழுக்க.

அவன் தோள்களை நான் ஆதரவுடன் தட்டிக் கொடுத்தேன்.


'' பைத்தியக்காரத்தனமான உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காதே, சேகர்! இந்த விஷயத்தில் யாரேனும் பாதிக்கப்படக்கூடுமானால் அது நான் ஒருவன் மட்டுமே! என் பரிபூரண ஆசியும் மனப்பூர்வமான ஒத்துழைப்பும் உண்டு !'' என்றேன்.

சேகரின் முகம் மலர்ந்தது. நான் அப்படிப் பேசுவேன் என்று அவன் எதிர்பார்த்திருக்க மாட்டான். இரண்டு பிஞ்சு உள்ளங்களை நசுக்குவதால் எனக்கு என்ன லாபம் ? நானும் மிஸ்டர் ப்ரௌனிங்கா என்ன ?

சேகர் டெலிபோனில் எண்களைச் சுழற்றினான். ஆனால் ஸொரா கிடைக்கவில்லை. மறுநாள் காலை என் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. ஸொராதான் எழுதியிருந்தாள்.

''பெருமரியாதைக்கும் மதிப்புக்கும் உரிய மேஜரை உங்கள் ஸொரா வணங்குகிறேன்.

என் பாட்டனார் உங்கள் மகனைக் கொலை செய்தது பழங் கதை. அது மக்கி மடிந்து மண்ணோடிக் கிடந்தது. அதற்குப் புத்துயிர் ஊட்டும் போது என் பாட்டி அவளையும் அறியாமல் நான் கனவு கண்ட வாழ்க்கையை மிதித்து விட்டுப் போய் விட்டாள்.



''மாப்பிள்ளை - பெண் ரெண்டு பேருமே டாக்டர்களாம்!''

◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊

சென்ற சில நாட்களாக நான் சேகரைச் சந்திக்கவில்லையேதவிர அவர் பற்றிச் சிந்திக்காமல் இல்லை. அவர் நினைவுடன் அவர் தந்தையின் முகமும், நீட்டிய கரங்களுடன் நிற்கும் என் பாட்டனாரின் நிழலும் தொடர்கின்றனவே !

எனக்கே அப்படி இருந்தால், சேகரின் மனநிலை என் ஊகத்துக்குட்பட்டதுதான். பாதிக்கப்பட்டவர் அவர் தந்தை. உணர்ச்சிவசத்தில் இப்போது எல்லாவற்றையும் மறந்து விடத் தயாராக இருக்கலாம். ஆனால், வாழ்க்கை என்பது ஒரு நீண்ட தூரப்பயணம். மனத்தில் சலனம் ஏற்படச் சந்தர்ப்பங்கள் அநேகம். தந்தையின் நினைவு அவருக்கு வரும் போது — ஏன், அவர் உருவப் படத்தைப் பார்க்கும் சில சமயங்களிலாவது — அவர் கொலை செய்யப்பட்டார் என்பதோ — அவர் அருகில் இருக்கும் நான் அந்தப் பாவத்தைச் செய்தவரின் இரத்தக் கலப்புள்ள உறவினர் என்ற எண்ணமும் அவருக்கு எழாமல் போகாது.

என் வாழ்வு செம்மைப்படுவதைவிட, என் உயிரினும் இனிய சேகரின் வருங்காலம் இம்மியும் பாதிக்கப்படக் கூடாது என்ற எண்ணத்தில் நான் விலகிக் கொள்கிறேன். சேகரிடம் நேரில் விடைபெற்றுக் கொள்ள என் மன அலைகள் இடம் கொடுக்க மறுக்கக் கூடும். ஆகையால், கோழையாக அவரிடம் சொல்லாமலேயே ஓடுகிறேன்.

என்னைத் தேடுவதில் பிரயாசைப்படக் கூடாது என்பது என் தாழ்மையான வேண்டுகோள்.''

''சேகர் !'' என்று அலறினேன் நான். அவன் வந்தான். மௌனமாகக் கடிதத்தை நீட்டினேன். அதைப் படித்தவன் வெறி பிடித்தவன் போல் ஓடினான். தன் காரை எடுத்துக் கொண்டு அவளைத் தேடப் புறப்பட்டு விட்டான். வீண் முயற்சி!

என் உடைமைகளைப் பொறுக்கி ஸூட்கேஸில் அடைத்தேன். கீழே விழுந்து உருண்டு ஓடியது, என்னவள் கொடுத்த குங்குமச் சிமிழ். அவளிடமே அதைத் திருப்பிக் கொடுத்து யாரும் அதை உபயோகிக்கவில்லை என்று வருத்தத்துடன் கூறப் போகிறேன்.

அதை உபயோகப்படுத்த யாருக்காவது தகுதி வருமா ?.... சேகர் பிடிவாதக்காரன்! காலம்தான் என் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும் ?


நேர்மை அளித்த பரிசு!



சர்வர் கொண்டு வந்து வைத்த பில்லை எடுத்துக் கொண்டு கல்லாவை நோக்கி நடந்தேன். அப்போது தான் ஒரு ரூபாய் நாற்பது பைசாவுக்குப் பதில் ஒரு ரூபாய் பதினைந்து பைசா என்று எழுதப்பட்டிருப்பதைப் பார்த்தேன். சர்வரைக் காணாததால் கல்லாவிலிருந்தவரிடமே மேற்படி இருபத்தைந்து பைசாவைக் கொடுத்து விட்டு, அவருடைய பாராட்டுதலுடனே வெளியே வந்தேன். சில நாட்கள் கழித்து மீண்டும் அந்த ஹோட்டலுக்குச் சென்ற பொழுது, முன்பு தவறுதலாகப் பில் கொடுத்த சர்வர் என்னருகே வந்து, "என் சார், அன்று நான் செய்த தவற்றை முதலாளியிடம் சொன்னீர்கள்? அறியாமல் நான் செய்த தவற்றை நீங்கள் அவரிடம் சொன்னதால், என் சம்பளத்தில் ஒரு ரூபாய் பிடித்துக் கொண்டு விட்டார், தண்டனையாக" என்று சொல்லி முறைத்தவாறே சென்றார். என் மனம் மிகவும் துன்பம் அடைந்தது.

--இரா. வெங்கடராமன்

வேட்டையாடும் மீன்



துப்பாக்கியிலிருந்து குண்டுகள் ஒன்றன் பின் ஒன்றாய் வெளியாவது போல் தன் வாயிலிருந்து தண்ணீர்க் குண்டுகளை உண்டாக்கி இரையின் மேல் வீசும் இம்மீன்.

நீருக்குமேல் ஒரு செடியில் ஒட்டிக் கொண்டிருக்கும் பூச்சியாயிருந்தாலும் சரி, அல்லது கரையோரத்தில் இருக்கும் பூச்சியென்றாலும் சரி, இந்த வேட்டையாடும் மீன் முதலில் இரையை நன்றாகக் குறி பார்த்துக் கொள்ளும். பின்னர் தன்னுடைய நிலையைச் சமன் செய்து கொண்டு வாயை மட்டும் மேலெழுப்பித் தண்ணீர்த் துளிகளை அல்லது தண்ணீர்க் குண்டுகளை ஒன்றன் பின் ஒன்றாய் வீசும். சுமார் நாலடி தூரம் வரையில் உள்ள இரையைப் பிடிக்கும்போது இவற்றின் குறி தப்புவதே இல்லை. சில பெரிய மீன்கள் 12 அடி தூரம் வரையில் குறி பார்க்கும்.

இதன் வாய்க்குள்ளே ஒரு கால்வாய் போன்ற பாதை உண்டு. அந்தக் கால்வாய் போன்ற பாதையின்மேல் இதன் நாக்குப் பொருந்தினால் இடையே குழாய் போன்ற பகுதி உருவாகும். இதனுள் இம்மீன் தண்ணீரை நிரப்பி வைத்துக் கொள்ளும். நாக்கின் நுனி ஒரு 'வால்வ்' போன்று திறந்து மூடி வேலை செய்யும்.

இந்த வேட்டையாடும் மீன்கள் நல்ல நீரிலும் கடலுக்கு அருகில் கழிமுகத்திலும் வாழ்கின்றன. இந்தியாவிலும் பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் காணப்படுகின்றன.

- எஸ். சாரதாம்பாள்

ஒரு கல்லில் இரண்டு மாங்காய்!



ஆஸ்பத்திரியில் ஆபரேஷனுக்காக ஒரு சிறுவன் அனுமதிக்கப்பட்டிருந்தான். ஆபரேஷனுக்கு முதல் நாள் பையனின் தாயார் நர்ஸிடம், "ஆஸ்பத்திரியில் முடிவெட்டுபவர் இருக்கிறாரா?" என்று கேட்டாள். "இருக்கிறார்" என்றாள் நர்ஸ். "அப்படியானால் பையனுக்கு மயக்க மருந்து கொடுத்ததும் அவனுக்கு கிராப்பும் வெட்டிவிடச் சொல்லுங்களேன்!" என்றாள் தாயார்.

'விக்கெண்ட்'--'பாபு'

"மைசூரிலிருந்து எக்ஸ்போ பார்க்கச் சென்றிருந்தார் திரு பொன்னப்பா. ஜப்பானில் ஒரு காமிரா வாங்கினார். ஆனால் அதைத் தொலைத்து விட்டார். இதை ஒரு ஜப்பானிய நண்பரிடம் பேச்சுவாக்கில் சொன்னார். மறுநாள் அந்த ஜப்பானியர் அதே போல ஒரு காமிரா வாங்கி முப்பது மைல் வந்து இவரை



ஹோட்டலில் சந்தித்துப் பரிசாகக் கொடுத்தார். அவர் சொன்னது: "நீங்கள் வாங்கிய காமிரா ஜப்பானில் தான் இருக்கிறது. நீங்கள் ஒரு ஜப்பானிய காமிராவை எடுத்துச் செல்ல ஆசைப்பட்டீர்கள். அதை நிறைவேற்றி வைப்பது எங்கள் பொறுப்பு."

'டெக்கான் ஹெரால்டு' - ராஜாமணி



★ இக்குறிப்பிட்ட கடிதங்களுக்குப் பரிசு பிரிந்து அளிக்கப் படுகிறது


தணிகைப் புராணத்தில், களவுப் படலத்தில் 244-வது பாடலில் மயில் முறை குலத்துரிமை பற்றி வருகிறது. அப்பாடலில் உள்ள அவசியமான இரண்டு வரிகள்:

"பலாவம் பொழிதுறை ஒருதாய் உயிர்த்த பலமயிற்றும்
கலாவம் புனைந்த கனிமயில் மூத்தது!"

"இப்பாடலை ஒரு கம்பராமாயணச் சொற்பொழிவாளரிடம் கேட்டுத் தெரிந்தபின், 'ஸையன்டிபிக் அமெரிக்கன்' பத்திரிகையிலிருந்து மயில்முறைக் குலத்துரிமைக்கு நான் விளக்கம் கண்டு பிடித்து விட்டதாக எனக்கு இருந்த கர்வம் பங்கப்பட்டது" என்று கவிஞர் அவர்களே கூறியிருக்கிறார்கள்.

ஆதாரம்: நாமக்கல் கவிஞர் அவர்கள் எழுதிய "கற்றது கைம்மண் அளவு" என்ற கட்டுரையிலிருந்து.

தங்கவரம்
21–12–70 ப. சால்தான்குட்டிபிள்ளை



வால் இல்லா எலிகள் தண்ணீர் குடிக்கும். குடிக்காது என்று கூறுவது தவறு. மருந்துகளைப் பரிசோதனை செய்து பார்க்க இவ்வெலிகள் பயன்படுகின்றன. இப்பரிசோதனைச்சாலைகளில் இவற்றுக்குக் குடிக்கத் தண்ணீரும் இருக்கிறது. தண்ணீர் வேண்டும்போது ஒரு குழாயில் வாய் வைத்து உறிஞ்சி உட்கொள்கின்றன. மற்ற நேரங்களில் தண்ணீர் கீழே விழாது. தலை கீழாக, சற்றுச் சாய்ந்த நிலையில் இப்பாட்டில் இருக்கும்.

சென்னை — 5
17–12–70 வி. தாமோதரன்

★ **சோ**ஷலிஸ திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்ற அரசியல் சட்டத்தைத் தம் விருப்பப்படி திருத்தத் தமக்கு மக்கள் பெரும்பான்மை பலம் தர வேண்டும் என்று கருதி இந்திரா காந்தி பாராளுமன்றத்தைக் கலைத்திருக்கிறார். இப்பொழுது இந்தியாவில் ஜனநாயகத்தைக் காக்கும் பொறுப்பு மக்களிடமே விடப்பட்டுள்ளது. இந்திரா காந்தி விரும்புகின்ற பெரும்பான்மை பலத்தை நாம் அவருக்குக் கொடுத்து விடுவோமானால், நமது அரசியல் சட்டம் பாழ்பட்டுப் போகும். சர்வாதிகாரத் தனம் வேரூன்றி, அப்புறம் நாம் கம்யூனிச சாத்தானுக்கு அடிமையும் ஆவோம். யானை தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொள்கிற மாதிரி ஆகாமல், இந்திய மக்கள் விழிப்போடு தங்கள் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

அந்தியூர்,
30–12–70 மு. தவசியப்பன்

★ **க**ம்யூனிஸம் என்பது செழித்த கரும்பை அடியிலிருந்து நுனியை நோக்கித் தின்று வருவதற்கு ஒப்பாகும். அதாவது கம்யூனிஸம் முதலில் இனிப்பது போல் தோன்றும். போகப் போக அது மக்களைச் சுதந்திரமற்ற விலங்குகளாக்கி விடும். எனவே, கம்யூனிஸப் பாதையை நோக்கிச் செயல்படும் இந்திரா காந்திக்கு மக்கள் ஆதரவு தரவே கூடாது.

மார்ச்சு மாதத்தில் புதிய நிதி ஆண்டு தொடங்குகிறது. இன்றைய நிலையில் ஏராளமாகத் துண்டு விழும் பட்ஜெட்டைத்தான் இந்திரா அம்மையாரால் சமர்ப்பிக்க முடியும். துண்டு விழுவதைச் சரிக்கட்ட அதிக வரி போட வேண்டி யிருக்கும். இருக்கின்ற வரிகளுக்கு மேல் இன்னும் போட்டால் மக்களுடைய மனம் மாறி, அடுத்த ஆண்டு வரவிருக்கும் தேர்தலில் அவருக்கு எதிராகச் செயல்படுவரே என்ற ஐயத்தினால் பட்ஜெட் தொடக்கத்துக்கு முன்பாகவே இன்னும் ஐந்தாண்டுக்குத் தம்மை ஸ்திரப்படுத்திக்கொள்ள நினைக்கிறார். மக்கள் ஏமாந்து விடக்கூடாது.

காஞ்சி,
30–12–70 ஆ. ஜெயசந்திரன்

★ **த**மிழ் நாடு அரசாங்கச் செய்தித் துறை இயக்குநரால் வெளியிடப்பட்ட புலட்டின் நெம்பர் 37 செய்திச் சுருளைச் சமீபத்தில் ஒரு தியேட்டரில் நான் காண நேர்ந்தது. அதில் வெளிநாடு சென்று திரும்பிய கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு மாபெரும் வரவேற்பு அளிப்பதாகக் காண்பிக்கப்படுகிறது. இந்த வரவேற்புக் காட்சிமட்டும் ஏறக்குறைய ஐந்து நிமிடங்கள் காட்டப் படுகிறது. ஒருசில அமைச்சர்களும், அதிகாரிகளும் தவிர அமைச்சருக்கு மாலையிடுபவரெல்லாம் அவரின் கட்சியைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட மாவட்ட, வட்டச் செயலாளர்கள், நகரசபை உறுப்பினர்கள் இத்தியாதி, இத்தியாதி. நாம் சர்க்காருக்குக் கொட்டிக் கொடுக்கும் வரிப் பணம் ஓர் அரசியல் கட்சியின் முக்கியஸ்தர்களைக் காண்பிக்கவா எனக் கேட்கத் தோன்றுகிறது. வாயளவு நேர்மையைச் செய்கையளவில் எப்போதுதான் நம் அரசியல்வாதிகள் காண்பிக்கப் போகிறார்களோ?

சென்னை — 34
31–12–70 களம்பூர் எஸ். கோபிநாத்

ருக்கு வந்தாள்!

சரோஜா ராமமூர்த்தி

விருந்துச் சாப்பாட்டின் மணம் வாசல் தாழ்வாரம் வரை வீசிக் கொண்டிருந்தது. சமையல் அறையைக் காமா சோமாவென்று போட்டு விடாமல் காமாட்சி துப்புரவாக ஒழித்து வைத்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்குப் பால்யத்தில் நடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வரவே இலேசாகச் சிரிப்பும் வந்தது. சிரித்தவாறு குளியல் அறையிலிருந்து முகம் கழுவித் துடைத்துக்கொண்டே வெளியே வரும் மனைவியைப் பார்த்துச் சிவராமன், "என்ன உனக்குள்ளே ஆனந்தத்தை முக்குளித்துக் கொண்டு? என்னிடமும் சொல்லேன், விஷயத்தை !" என்று கேட்டார்.

கண்ணாடி முன்பு நின்று முகத்துக்கு இலேசாகப் பவுடர் போட்டுக் கொண்டாள். வட்ட வடிவமான குங்குமப் பொட்டை வைத்தவாறு கணவனின் பக்கம் திரும்பி, "உங்களுக்குத் தெரியாத விஷயமா, என்ன? நீங்கவேணு மறந்து போயிருப்பேள். எனக்கு நன்னா ஞாபகம் இருக்கு" என்று பீடிகையுடன் ஆரம்பித்தாள் அவள்.

"இன்னிக்கி நம்ம வீட்டுக்கு சாப்பிட வரா, பாருங்கோ. அதான் என் ஒண்ணுவிட்ட தங்கையும், அவள் புருஷனும், குழந்தைகளும். அவாளைப் பார்த்து ஏழெட்டு வருஷங்களாச்சு. ஆனா அவள் சுபாவம் அப்படியே இருக்கோ, இல்லே மாறியிருக்கோன்னு நெனைச்சுண்டேன். சிரிப்பு வந்தது. எந்தப் பழியையும் பிறத்தியார் மேலே போட்டுட்டுத் தூர நின்னு ரசிச்சுச் சிரிக்கிற குணம் அவளோடது. ஒரு தடவை, அன்னிக்கி வீட்டிலே என்னமோ விசேஷம். பெரியம்மா—அதுதான் அவள் அம்மா — என்னைச் சமைக்கச் சொன்னா. சமையலே முடிச்சுட்டு இன்னிக்கு மாதிரியே முகம் அலம்பக் குளியலறைக்குப் போயிட்டு வந்தேன். எப்பவுமே எனக்கு வேர்த்து விறுவிறுக்க நின்னுப் பிடிக்கிற இல்லே. பளிச்சுனு இருக்கணும். அப்புறமா சாப்பாட்டு நேரத்துலே நானும் அவளுமா பரிமாற ஆரம்பிச்சோம். சாப்பிட உட்கார்ந்தவா மூஞ்சியைப் பார்க்கச் சகிக்கலே. எல்லாத்துலேயும் ஒரே உப்பு. பெரியப்பா என்னை அண்ணாந்து பார்த்து, 'ஏண்டி, பொண்ணே! உம் புக்காத்துப் பக்கத்துலே உப்பளம் இருக்கா என்ன? உப்பை அள்ளிக் கொட்டியிருக்கியே'ன்னு கேலியும், கோவமுமா கேட்டார். அப்போ எல்லாத்துலேயுமா உப்புத் தூக்கலாப் போட்டிருப்பேன்? கண்ணுலே தளும்பற ஜலத்தை மறைச்சுண்டு வெளியே பார்த்தால் இந்தப் பெண் உக்கிராண உள்ளேயிருந்து என்னைப் பார்த்துச் சிரிக்கிறது. அப்பவே புரிஞ்சு போச்சு, எல்லாம் இதன் வேலைதான்னு."

"ருக்குவா அப்படிப் பண்ணினா ?" என்று ஆச்சரியப்படுபவர் போல் சிவராமன் கேட்டார். வெள்ளை வெளேர் என்று மொழுமொழுப்பாய், மூன் உச்சியில் படித்த குழலுடன், பளீர் என்கிற சிரிப்புடன் நிற்கும் ருக்குவை அவர் நினைத்துக் கொண்டாரோ என்னவோ !

" நான் எதுக்குப் பொய் சொல்லப் போறேன்? அவள் சுபாவம் அப்படி. பிறத்தியார் யாரும் அவளை விட உசத்தியாய் இருக்கப்படாது. இன்னும் கேளுங்கோ. அவள் தலை தீபாவளிக்கு என்னை வரச் சொல்லி நான் போயிருந்தேனே ?" என்று சிவராமனுக்கு அந்த விஷயத்தை இலேசாக நினைவுபடுத்திப் பார்த்தாள் காமாட்சி.

ஆண்களின் போக்கே அலாதியானது என்பது அவளுக்கு மறந்து விட்டது. ருக்குவின் வெள்ளை வெளேர் என்ற மொழு மொழுப்பையும், சாட்டை போன்ற பின்னலையும், சுருண்டு தொங்கும் குழற் கற்றைகளையும் நினைவு வைத்திருக்கும் கணவர், ருக்குவின் தலைதீபாவளி சமயத்தில் நடந்ததை மறந்து விட்டிருப்பார் என்று பிரக்ஞையில்லாமல் 'அவள் தீபாவளிக்குப் போயிருந்தேனே?' — என்று கேட்டிருக்கக் கூடாது.

சிவராமன் சாதாரணமாக அவளைப் பார்த்து, "இதெல்லாம் யாருக்கு நினைவு இருக்கு? அவள் தலை தீபாவளிக்கு நீ போயிருந்தியா, என்ன?" என்று கேட்டார்.

காமாட்சி அவரை அதிசயத்துடன் பார்த்தாள். பிறகு, "ஆமாம்! போயிருந்தேன். அப்பவும் அந்தப் பெரியம்மா பட்சணம் செய்யற பொறுப்பை என் தலையிலே போட்டுட்டா. மைசூர்பாகு கிளறி வில்லே போட்டு வைச்சதும் பெரியப்பா அந்தப் பக்கம் வந்தவர், 'ஏண்டி, பொண்ணே ! நெய் வாசனை மூக்கைத் துளைக்கிறதே ! எங்கே, ஒரு வில்லே கொடு பார்க்கலாம்னு கேட்டு வாங்கி விண்டு வாயில் போட்டுண்டார். 'கரைஞ்சு போய் விடறதே. இப்படன்னா இருக்கணும், மைசூர்பாகு! அடியே, நீயும் பண்றயே! கத்தியல்னா தேடணும், நீ பண்ணற மைசூர் பாகை உடைக்க' என்று அவர் பாணியிலேபேசிண்டே நாலஞ்சு வில்லேகளைத் தின்னுண்டிருந்தார். இதைக் கேட்டுண்டு நின்னுண்டிருந்த ருக்கு அப்போ ஒண்ணும் பேசலே. இருந்தாலும் அவள் கெடக்கான்னு நானே வலுவிலே, 'ஏண்டி, ருக்கு! மாடியிலே மாப்பிள்ளைக்கு ரெண்டு வில்லே எடுத்துப் போய்க் கொடேன்'னேன். அவ மூஞ்சியைத் தோளிலே இடிச்சிண்டு, 'ஆமா! இந்த மைசூர்பாகு ரொம்ப அபூர்வம் பாரு! அவர்கள் வீட்டிலே பால் கோவா போடாமெ ஒரு ஸ்வீட்டும் பண்றதில்லையாம். நான் எடுத்துண்டுபோய்க் கொடுத்தால் அவர் எம்மூஞ்சியிலே விட்டெறிவார்'னு இரைஞ்சு சொல்லிண்டிருந்தா. எனக்கு என்னவோ போல இருந்தது. 'ருக்கு! ருக்கு! இரையாதே. மாப்பிள்ளை காதுலே விழப் போறது'ன்னு நான் சொல்லிண்டிருக்கச்சே மாப்பிள்ளை கீழே இறங்கி விட்டிருந்தார். நான் தலையைக் குனிஞ்சுண்டு காரியத்தைப் பார்த்துண்டிருந்தேன். அவர் சமையலறை வாசற்படியிலே நின்னு, "நெய் வாசனை மூக்கைத் துளைச்சுது. மைசூர் பாகா?" என்று கேட்டார். நான் மரி

யாதைக்காவது கொடுக்கணுமேன்னு அங்கிருந்த தட்டிலே ரெண்டு வில்லை வைச்சுக் கொடுத்தேன். ரசிச்சுச் சாப்பிட்டு விட்டு, ''பேஷாயிருக்கு......'' என்று பாராட்டி விட்டுப் போயிட்டார்......''

''அப்புறம்?'' என்று கதை கேட்பது போல் சிவராமன் கேட்டுக் கொண்டு நிமிர்ந்து உட்கார, ''அப்புறம் என்ன? அந்தப் பொறுமை பிடிச்சவ என்னோட பேசவே இல்லே......'' என்றாள் காமாட்சி.

இருவரும் பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனது தெரியவில்லை. மணி பத்தரையைத் தாண்டியிருந்தது.

''பத்து மணிக்கே வரேன்னான். இன்னும் காணுமே?'' என்றபடி காமாட்சி வாசலில் போய்ப் பார்த்தாள். தெரு முனை திரும்பி ருக்குவும், அவள் கணவனும், குழந்தைகள் இரண்டு பேரும் வந்து கொண்டிருந்தார்கள்.

''வாடி, ருக்கு! வாங்க, மாப்பிள்ளே!'' என்று வாய் குளிர அழைத்த காமாட்சி உட்புறம் திரும்பி, ''இங்கே பாருங்கோ ! அவாள்ளாம் வரா......'' என்று குரல் கொடுத்தாள். சிவராமன் எழுந்து வந்து சிரித்தபடி வரவேற்றார். ருக்கு அதே மாதிரி வெளுப்பாக மொழு மொழுப்பாகத்தான் இருந்தாள். முன்னைவிட நல்ல பருமன்; பணத்திலே புரளுகிற பாவம் முகத்திலே தெரிந்தது. கைகளில் புதுசுப் புதுசு வளையல்கள். கழுத்தில் புது மாதிரியான பச்சைக் கல் 'சோக்' நெக்லெஸ். மூக்குத்தி அணியவில்லை. காதுகளில் தாடங்கம் மாதிரி பெரிய வைரத் தோடுகள். பெண்கள் இரண்டு பேரும் சல்வார், கமீஸ் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

''அடே, அம்மா ! உன் வீட்டைக் கண்டு பிடிக்க இத்தனை நாழியாச்சு. இனிமேல் இங்கே வரதுன்னு அத்திம்பேர் கார் எடுத்துண்டு வந்து எங்களை அழைச்சுண்டு போகணும்'' என்றாள் ருக்கு. அவள் கணவன் அதை ஆமோதிப்பவன் போல் சிரித்துக் கொண்டிருந்தான்.

'' எங்கிட்டே கார் இல்லேயேம்மா. வேணுமானால் ஒண்ணு பண்றேன். நீ அடுத்த தடவை வர்றதுக்குள்ளே 'ப்ளேன்' வாங்கிடறேன். வீட்டு வைக்கப் பக்கத்திலே மீனம்பாக்கம் இருக்கு. நீயும் டில்லியிலேயிருந்து நேரா வந்துடலாம்'' என்றார் சிவராமன்.

காமாட்சிக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. இருந்தாலும் சிரித்தபடி உள்ளே போய் எல்லாருக்கும் குளிர் பானங்கள் கொண்டு வந்து வைத்தாள். ருக்கு வீட்டை ஒரு நோட்டம் விட்டாள்.

''வீடு கொஞ்சம் கொஞ்சம் மாறித்தான் இருக்கு. ஆனா, ரொம்ப 'வில்லேஜ் டைப்' இல்லேயா?'' என்று கணவனைப் பார்த்துக் கேட்டாள்.

''இப்படி இருந்தாத்தான் எனக்குப் பிடிக்கிறது. ஜன நெரிசலும், பெட்ரோல் நாற்றமும், இரைச்சலுமா என்ன நகர வாழ்க்கை வேண்டியிருக்கு? வெளிநாட்டிலே ஜனங்கள் வாரக் கடைசியிலே கிராமங்களுக்குப் போயிடுறாளாம். மலைகள், ஆறுகள், கடலோரம் என்று அமைதியா இருந்தால் மனுஷனுக்கு இத்தனை வியாதிகள் எல்லாம் வராது. நமக்கு எப்பவும் ஒரே 'டென்ஷன்' தான் பிடிக்கிறது.... இதப் பாருங்க சார் ! டில்லியிலே ஒரு வருஷம் இருந்துட்டா எனக்கு எப்படாப்பா நம்ப மோகனூருக்குப் போய்



வாய்க்கால்லே குளிச்சிட்டுப் பழையது சாப்பிடப் போறோம்னு இருக்கு.... ஆனா இவள் இனுக வேறே—'' காமாட்சிக்கு ஒரே வியப்பாக இருந்தது. ருக்குவின் கணவன் அவள் எதிரில் இவ்வளவு அப்பட்டமா கிராமங்களை உயர்த்திப் பேசுவதைக் கண்டதும் அவளால் அதை நம்ப முடியவில்லை.

காமாட்சி உள்ளே சென்று நுனி வாழை இலைகளைப் போட்டுத் தம்ளர்களில் ஜலம் எடுத்து வைத்தாள். பிறகு கூடத்துக்கு வந்து, ''எல்லாரும் சாப்பிட வாங்கோ. இப்பவே மணி பதினொண்ணு ஆகிறது.....'' என்றாள்.

''வரச்சேதான் ஹோட்டலிலே டிபன் சாப்பிட்டுட்டு வந்தோம்'' என்று அலட்டிக் கொண்டாள் ருக்கு.

''டிபன்' சாப்பிட்டுட்டு வந்தேன்னு சொல்லு. நான் ஒரு டம்ளர் ஐஸ் வாட்டர் தான் சாப்பிட்டேன். நீ நன்னா ஒரு புடி புடிச்சே....'' என்று வெகுளியாகப் பேசினான் ருக்குவின் கணவன்.

''அப்ப நீ உன் அக்காவோட சாப்பிடேன். நாங்க மொதல்லே சாப்பிடறோம். என்னம்மா ருக்கு?'' என்று கேட்டார் சிவராமன்.

கணவனின் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட ருக்குவின் முகம் ஜிவு ஜிவு என்று சிவந்திருந்தது. 'எதையும் மூடி மறைக்க நாகரிகமாகப் பழகத் தெரியாதவர்' என்று மனத்துக்குள் பொருமிக் கொண்டே ருக்கு 'உர்'ரென்று தன் கணவனைப் பார்த்தபடி, தானும் ஓர் இலையில் போய் உட்கார்ந்தாள்.

முதலில் அக்கார வடிசல் என்கிற வெல்லப் பாயசம் வைக்கப்பட்டது.

''ஐயே! இதென்ன வெல்லமும், இல்லமும். வெல்லப் பாயசம் சாப்பிட்டு ஒரு மாமாங்கம் ஆச்சடி அக்கா. அதெல்லாம் நான் நம்ப ஊரோட விட்டாச்சு. இப்ப வெல்லாம் சர்க்கரை போட்ட 'கீர்'தான் எங்க வீட்டிலே பண்ணறேன். வெல்லவாடையே எங்களுக்குக் கட்டோடு பிடிக்காது.''

அதே வெல்லப் பாயசத்தை ருக்குவின் கணவன் கோப்பை கோப்பையாக வாங்கி உறிஞ்சித் தள்ளுவதைப் பார்த்த ருக்கு முக்கால் சாப்பாட்டில் கையை உதறிக்கொண்டு எழுந்தாள். கூடத்தில் வெற்றிலை போட்டுக் கொண்டிருந்த சிவராமனிடம் சென்று, ''அத்திம்பேரே! இவர் இப்படி வெல்லத்தைக் கரைச்சுக் குடிப்பார்னு தெரிஞ்சிருந்தால் நான் ஊரிலேயிருந்து மணங்கு கணக்கிலே வெல்லம் வரவழைச்சு வைச்சிருப்பேன். ஊருக்குப் போகச்சே ஒரு மணு வெல்லம் வாங்கிக் குடுத்திடுங்கோ!'' என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்தாள்.

கொல்லைப்புறத்தில் கையலம்பிவிட்டுத் திரும்பிய ருக்குவின் கணவன் சமையலறையில் வேலையாக இருந்த காமாட்சியிடம் திரும்பி, ''உங்கள் தங்கை....'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

அவள் சிரித்துக் கொண்டே, ''அவள் மாறவில்லையே. உடம்போடு பிறந்தது எப்படிப் போகும்?'' என்று கூறியவளாகத் தட்டில் வெற்றிலை, பழம், தேங்காயுடன் வந்து தங்கையிடம் கொடுத்து ஆசீர்வதித்து அவர்களை வழி அனுப்பி வைத்தாள்.

''பாயசம் உனக்கு மிச்சம் இருக்கோ, காமாட்சி?'' என்று கேட்டுக் கொண்டே வந்த சிவராமனைப் பார்த்து, ''எப்படி இருக்கும், சொல்லுங்கோ? ருக்குதான் பாயசம் தான் சரியாகச் சாப்பிடல்லேன்னு தூக்குப் பாத்திரத்திலே போட்டு வாங்கிண்டு போயிட்டாளே!'' என்றாள்.

இப்போது இருவரும் சேர்ந்து பெரிதாகச் சிரித்தனர்.

தொண்டர் கோவே

படித்துப் பாருங்கள்

தொண்டர் கோ. வெங்கடாசலபதி அவர்களின் வாழ்க்கை வரலாற்றினைப் படிக்கும்போது, அன்றைய இளைஞர்களின் உத்வேகத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது. காந்தி மகான் நடத்திய அஹிம்சாப் போராட்டத்திலும், கொள்கைகளிலும் ஈடுபட்டு எத்தனை எத்தனையோ பெரியவர்கள், தனவந்தர்கள் தங்கள் வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்துக் கொண்டார்கள். ஆனால் மதுரை ஜில்லாவில் ஒரு சாதாரண நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து பள்ளிக்கும் கல்லூரிக்கும் சென்று கொண்டிருந்த சிறுவனைக் காந்தியக் கொள்கைகள் எப்படிஆட்கொண்டன, அவன் வாழ்க்கையை எப்படிச் செப்பனிட்டன என்பதைப் படிக்கும் போது மெய் சிலிர்க்காமல் இராது.

காந்திமகான், டால்ஸ்டாய் போன்றவர்கள் சொன்ன எளிய வாழ்க்கை உயரிய சிந்தனை என்ற குறிக்கோளுடன் தம் வாழ்க்கை முழுவதும் கழித்தவர் தொண்டர் கோ. வே. அறுபதாண்டு காலம் வாழ்ந்த அவர் பள்ளி ஆசிரியராகவும் கிராமத் தொண்டராகவும் இருந்ததுடன் பல பொறுப்புக்களை, பதவிகளை வகித்திருக்கிறார்.

இறைவன் திருவடியை அடையும் மலர்தான் முழு அழகும் மணமும் பெற்றது என்று சொல்வாரில்லை. காட்டில் யார் கண்ணிலும் படாமல் மலர்ந்து உதிரும் மலரும் அதே அழகும் மணமும் பெற்றிருக்கிறது. காந்தியக் கொள்கைகளில் ஈடுபட்டு ரொம்பப் பிரபல்யமடைந்த தலைவரின் வாழ்வு மட்டும்தான் சிறந்தது என்றில்லை. சாதாரணத் தொண்டனின் வாழ்வும் அதே அளவுக்கு உன்னதமாகத் திகழ்ந்தது என்பதற்குச் சான்றாக விளங்கியது தொண்டர் கோ. வே.யின் வாழ்க்கை. அதைத் தொகுத்து எழுதிய ஆசிரியர் திரு செல்வராஜ் அவர்களுக்குத் தமிழுலகம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது.

பிரசுரம்: கிராம ராஜ்யம், 108, திருப்பரங்குன்றம் ரோடு, மதுரை—1. விலை: ரூ. 2.50.


எம்பிராய்டரி செய்த
துணிகள் எல்லாம்
ஒரே மாதிரியாகத்
தோன்றலாம். ஆனால்
ஹகோபா
எம்பிராய்டர்ட்
துணிவகைகள்
உங்கள் பணத்திற்கு
மிஞ்சிய மதிப்பைத்
தருகின்றன.

தவறான விவரத்தின்

விளைவு என்ன தெரியுமா?

எச்சரிக்கை : தவறான வருமான விவரம் காட்டுதல்; வருமான வரி, சொத்து வரி, வெகுமதி வரிச் சட்டங்களின்படி கடுமையான தண்டனைக் குட்படுத்தக்குரியது. இதற்கான அபராதம் குறிப்பிடாமல் விட்ட வருமானத்தை விடக் கூட அதிகமானதாக இருக்கலாம்.

வருமான வரிச் சட்டத்தின்படி வருமான வரி ஃபாரத்தில் காட்டாமல் விட்ட வருமானத்தைப் போன்றதொரு தொகையோ அல்லது அதைப் போன்ற இரு மடங்கோ அபராதமாகக் கட்ட வேண்டி வரலாம். இதைத் தவிர ஆறு மாதங்களுக்குக் குறையாமல் இரண்டு வருடங்கள் வரை கடும் சிறைத் தண்டனையும் விதிக்கப்படலாம்.

சரியான சொத்து விவரம் கொடுக்காமலிருத்தல், உள்ள சொத்தின் மதிப்பைக் குறைத்துக் காட்டுதல் ஆகியவை சொத்து வரிச் சட்டத்தின்படி கடும் தண்டனைக்குரியது. விவரம் காட்டாமல் விட்ட சொத்தின் மதிப்பு, அல்லது மதிப்பைக் குறைத்துக் காட்டியிருக்கும் சொத்தின் உண்மையான மதிப்புத் தொகைக்கொத்த தொகையை அபராதமாகக் கட்ட நேரலாம். உள்ள கடனை அதிகமாக்கிக் காட்டியிருந்தால், எவ்வளவு தொகை உபரியாகக் காட்டப்பட்டிருக்கிறதோ அவ்வளவு தொகையை அபராதமாகச் செலுத்த நேரலாம். இவ்வபராதம் நீங்கள் காட்டாமல் விட்ட சொத்தின் மதிப்பைவிட இரு மடங்காகக் கூட இருக்கலாம். இதைத் தவிர, ஆறு மாதத்திற்குக் குறையாமல் இரண்டு வருடங்கள் வரை கடும் சிறைத் தண்டனையும் விதிக்கப்படலாம்.

வெகுமதியைப் பற்றி சரியான விவரங்கள் கொடுக்காவிடில், அதற்கான வரியில் 20 சதவிகிதம் அல்லது அதைப்போன்று 1½ மடங்கு அதிகமான தொகை அபராதம் விதிக்கப்படும். இதைத் தவிர, ஒரு வருட காலம் வரையில் சாதாரண சிறைத் தண்டனையோ அல்லது 1000 ரூபாய் வரையில் அபராதமோ அல்லது இரண்டுமேயோ விதிக்கப்படலாம்.

**ஞாபகமிருக்கட்டும்
வருமான வரி
கட்டாமல் இருத்தல்
குற்றம்**

ஏற்கனவே காட்டியுள்ள வருமான விவரங்கள் சரியானதல்லவென்றால், சரியான விவரங்கள் அடங்கிய குறிப்பை இப்பொழுதும் அனுப்பி, தவறான வருமான விவரங்களினால் விளையும் தீமையைத் தவிர்க்கலாம்.

சென்ட்ரல் போர்டு ஆஃப் டைரக்ட் டாக்ஸஸ்
(டிபார்ட்மெண்ட் ஆஃப் ரெவின்யூ அண்ட் இன்ஷூரன்ஸ்) மினிஸ்ட்ரி ஆஃப் பைனான்ஸ்,
கவர்ன்மெண்ட் ஆஃப் இந்தியா.

davp 70/530



மூதறிஞர் ராஜாஜி

சேலம் தந்த ஞானப்பழத்தை — நான்
செந்தமிழ் மூலம் பாடுகிறேன்
காலம் தந்த அந்தத் தெய்வ மகனைக்
கன்னித் தமிழ்க் கவி புனைகின்றேன்

உலகம் போற்றும் மாபெரும் அறிவாளி
உண்மை பேசுபவருக்கெல்லாம் உறவாளி
கலகம் புரிபவருக்கெல்லாம் அவர் எதிராளி
கண்ணியமாக நடப்பவருக்கு அவர் வழிகாட்டி

வாழ்வில் என்றும் எதிர் நீச்சல் போடாதவர் — நீல
வானம்போல் தெளிந்த மனம் படைத்தவர்
கீழ்வானக் கதிரவன்போல் முகம் சிவந்தவர்
கீதைதந்த கலியுகக் கண்ணன்எனப் பேர்
பெற்றவர்

முதுமைநிறைந்த பருவத்திலும் அவர் — என்றும்
முளைத்துக் குலுங்கும் புதுமலர் போன்றவர்
புதுமையான சரித்திரம் படைத்தவர்
புவியில் அழியாக் காவியமானவர்

மதுவிலக்கை ரத்து செய்தவர் — அதனால்
மக்களுக்கு நல்வாழ்வு தந்தவர்
புதுப்புதுக் கருத்தைக் கல்கியின் மூலம் – தந்து
புவி மக்களை நல்வழிக்கு அழைத்துச் செல்பவர்

தருமத்தை உலகில் நிலைநாட்டவந்த பீஷ்மர் —
பாரதத்தைத்
தமிழில் மொழிபெயர்த்துத் தந்த வியாசர்
அருமறையின் வழிதினம் நடப்பவர் — இந்த
அகிலத்தைத் தம் அறிவால் கவர்ந்தவர்

புராணகால ஆழ்வார்களின் மறுபிறவி என
புவி மக்கள்தினம் போற்றிப் பாடுவார்கள்—
ஆதி
நாராயணனின் மறுஅவதாரம் என
நாட்டுமக்கள் தினம் வணங்குவார்கள்

இத்தனை அரிய சிறப்புப் பெற்று — நானே
இதிகாச நாயகனை விளங்கப்போகும்
முத்தமிழ் நாட்டு அரும்பெரும் காவலர்
மூதறிஞர் ராஜாஜி !

— எஸ். மணியன்

தொழிலதிபர் குப்தாவின் அம்பாஸடர் கார் ஹைதராபாத்திலுள்ள 'ஹோட்டல் ரிட்'ஸை அடைந்தது. அவர் ஆரம்பிக்க இருக்கும் தொழிற்சாலைக்கு தொழில் நுணுக்க ஆலோசனை வழங்க ஜப்பானிலிருந்து வந்திருந்த இரு இன்ஜினியர் விருந்தாளிகள் அவருடன் இருந்தார்கள். இன்னும் இரண்டு மணி அவகாசம் அவர்களுடன் கலந்து பேசவேண்டி இருந்ததால் குப்தா தமது டிரைவர் பூமய்யாவிடம் ஒரு ரூபாய் பணம் தந்து அவனது சாப்பாட்டை முடித்துக் கொண்டு கார் 'பார்க்கிங்' இடத்தில் காத்திருக்கும்படி கட்டளையிட்டார்.

காரை உரிய இடத்தில் நிறுத்திப் பூட்டப் போன பூமய்யாவின் கண்களில் பின் ஸீட்டிலிருந்த தோற்பை பட்டது. காலையில் வரும் போது தொழிலாளர் சம்பளப் பட்டுவாடாவுக்காக கனரா பாங்கில் குப்தா செக் மாற்றி ரூ. 29,000 அதில் எடுத்து வந்தது அவன் நினைவுக்கு வந்தது. தொழிற்சாலை சம்பந்தப்பட்ட பிளான் முதலிய காகிதங்களை ஜேம்ஸ்பாண்டில் எடுத்துச் சென்ற குப்தா இதனைக் காரில் வைத்து விட்டது அவனது நல்ல காலமோ?

சத்தியப் பெயரின் சக்தி

அவனது மூளை மளமளவென்று வேலை செய்தது. பல வருடங்கள் இந்த ஸ்டீயரிங்கைப் பிடித்துக் காரைச் செலுத்தியும் அவனது வாழ்க்கைச் சக்கரம் இன்னும் வறுமைத் தடத்திலேயே சென்றது. இந்தப் பணத்தை அவன் ஸ்பரிசிக்கப் போவதில்லை. அவனது எண்ணங்கள் மூன்றாவது கியரில் துரிதமாக இயங்கத் தொடங்கி விட்டன. இதை எடுத்துக் கொண்டு மனைவி குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஓடிவிட்டால்...! முன் செல்லும் வண்டியின் வால்புற விளக்கின் சிவப்பு வண்ணம் அளிக்கும் சமிக்ஞை போல அவனது மனச்சாட்சி எச்சரித்தது. எஜமானத் துரோகமா? கெடுதற சிந்தனைக்குப் பிரேக் போட்டது பீடுற்ற மனச்சான்று. 'ஆமாம் எப்படி எப்படியோ சம்பாதித்த பணம்!' என்று ஒருபுறம் சமாதானம். ஆக்ஸிலேட்டர் அழுத்தப்பட்ட வண்டி போல அவனது மூளை சுறுசுறுப்பாக வேலை செய்தது.

காரைப் பூட்ட வந்தவன் திறந்து முன் ஆசனத்தில் அமர்ந்தான். வண்டி ஓர் அசைவுடன் கிளம்பியது.

"என்னங்க இன்னைக்கு இவ்வளவு சீக்கிரம்?" என்று பூமய்யாவின் மனைவி அதிசயத்துடன் வரவேற்றாள்.

"இந்தா பார், ஜல்தி புறப்படு"—பூமய்யா பரபரத்தான்.

"என்ன அப்படித் தலை போற அவசரம்?"



''பிறகு சொல்கிறேன். மூட்டையைக் கட்டு. எங்கே நம்ம பயல்?''

''என்னங்க... ஒரேயடியாக் கலவரப்படுத் திறீங்களே! எனக்கு என்னவோ செய்யுது. ஏதாவது விபத்தா ?''

''சனியன் பிடிச்சவளே, உன் வாயை மூடு!'' அவனே கிடைச்ச சாமான்களையெல் லாம் கட்டத் ஆரம்பித்தான். மகனையும் தூக்கிக் கொண்டான்.

''புறப்படு!'' வெயிட்டிங் போட்ட டாக்ஸி டிரைவர் பொறுமை இழந்து நீண்ட ஹாரன் சப்திப்பது போல முழங்கினான்.

* * *

குப்தாவின் கார் ; ஆனால் பூமய்யாவின் குடும்பம். கச்சகூடா ஸ்டேஷனுக்கு வெளியே காரை 'பார்க்' செய்துவிட்டுப் பூமய்யாவின் குடும்பம் ஸ்டேஷன் பிளாட்பாரத்துக்குள் நுழைந்தது. இப்போதைக்கு எந்தப் பக்கமும் ரயில் இல்லை. சட்டென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அதிர்ஷ்டதேவதை தன் பக்கம் இருப்பதாக எண்ணினான். 'எல்லாம் நன்மைக்கே' என்று தீர்மானித்து ஒரு ரிக்ஷா வைப் பிடித்துக் கொண்டு அப்ஸல்கஞ் என்ற இடத் துக்கு விரைந்தான். அங்கு நிறைய டாக்ஸி கிடைக்கும். விஜய வாடா சென்றுவிடலாம்.



போலீஸ் தேடினால் கார் நிறுத்திய குதிப் பால் ரயிலில் தேடட்டும்!

அப்ஸல்கஞ்சில் எப்போதும் ஜனநெரிசல். பிள்ளை கையைப் பிடித்துக் கொண்டு தெருவைக் குறுக்கே கடந்தான். மெள்ள அங்கு தான் மனைவியிடம் உண்மை விஷயத் தைக் கூறி ஹைதராபாத்தை விட்டு உடன் வெளியேறுவதன் ரகசியத்தை வெளியிட் டான்.

''இந்தா பாரு! உனக்கு இது நல்லா இருக்கா? உப்புப் போட்டுத் தின்றவன்தானு நீ? சோறு போடற முதலாளிக்கே துரோகம் செய்யலாமா?''

''அட கழுதை! பெரிய சத்தியத்தைக் கண் டுட்டா! அவங்க ஊரைக் கொள்ளை அடிச்சுச் சம்பாதிக்கிறாங்க. இந்தப் பண மூட்டை கிட்டே இருந்து நாம ஒரு முடிச்சு எடுத்தா குறைஞ்சா போயிடும்? கம்மா வா புள்ளே!'' என்றான் பூமய்யா.

பூமய்யா கூட்டத்தைக் கடந்து முன்னே சென்று டாக்ஸி ஸ்டாண்டை அடைந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தான்.

''ஐயோ! என் குழந்தையைக் காணோமே!''

மனைவியின் அலறல் பூமய்யாவைத் திடுக் கிடச் செய்தது.

''நீங்கதானே அவன் கையைப் பிடிச்சு அழைச்சு வந்தீங்க... ஐயோ என் ராசா!'' அவள் ஊரைக் கூட்ட ஆரம்பித்தாள். எதிரில் வாகனம் வரக் கண்டு 'டிம்'மாகும் முன் விளக்குப் போல் அவனது கண்கள் மங்கின. பூமய்யா பரபரவென்று அவளை அடக்கி ஓர் இடத்தில் இருத்தி விட்டுக் குழந்தையைத் தேடிக் கொண்டு வந்த வழியே ஓடினான்; நின்றுவிட்ட காரை விட்டுவிட்டுப் பெட்ரோ லுக்கு டப்பாவுடன் ஓடும் சாரதி போல.

அவனைக் காணோம்!

''என் செல்வத்தை இழந்து விட்டு நான் எங்கும் வரமாட்டேன். இந்த இடத்தை விட்டு அசைய மாட்டேன். ஐயோ, தெய் வமே! காளியாத்தா, என் குழந்தையைக் காப்பாற்று...'' திடீரென்று கார் ஹாரன் இடைவிடாது தொடர்ந்து ஒலிபிட்டுத் தெரு வில் உள்ளவர்கள் கவனத்தைக் கவருவது போல அவள் குரல் பிறரை ஆகர்ஷிக்கத் தொடங்கி விட்டது.

''உன் ஒப்பாரியை அடக்கு!'' பூமய்யா கர்ஜித்தான். 'ஸெல்ப்' வேலை செய்யாமல் புறப்பட மறுக்கும் காரின் கதவை ஓங்கி அடித்தபடி கீழே இறங்கும் டிரைவரின் ஆத் திரத்துடன் அவளுக்கு ஓர் அடி கொடுத்தான்.

''என்னைச் சாக அடிச்சாலும் சரிதான். நான் நகர மாட்டேன். ஐயோ என் செல் வமே! பாழாய்போற காசுக்காக என் கண் ணான புள்ளையைக் காவு கொடுத்திட்டயே...''

டயர் வெடித்த கார் மாதிரி அவள் நடு ரோட்டில் அமர்ந்து விட்டாள். அதற் குள் டிராபிக் போலீஸ் கான்ஸ்டபிள் அருகே வரவே நவலுனை பாதையில் சென்று

பிடிபட்ட லைசென்ஸ் இல்லாத டிரைவர் போன்று பூமய்யா நடுங்கினான்.

''என்னமேன் நக்ரா பண்ணறே?'' 'ளைச்' சரியாக விழாமல் நாராசமாகச் சப்திக்கும் மியர் ஒலி எனக் காவல் துறைக் குரல் அவன் காதில் விழுந்தது.

''பச்சாவைக் காணுங்க...''

''சரி, அந்தாண்டை போலீஸ் ஸ்டேஷ னிலே போய் ரிப்போர்ட் கொடு'' என்று கையைக் காண்பித்துவிட்டுப் போக்கு வரத்து மையத்துக்குச் சென்றுவிட்டார். வைப்பர் போல் பூமய்யாவின் விரல்கள் இயங்கி நெற்றி வியர்வையைத் துடைத்தன.

பூமய்யா மனைவியையும் சாமானையும் இன்னொரு ரிக்ஷாவில் ஏற்றி ஒரு ஹோட்டலை அடைந்து அறையொன்று அமர்த்தி அவளை இருக்கச் செய்தான்.

''நீ இங்கேயே இரு; நான் தேடிப் பிடிச்சு வரேன். சனியன் சரியான நேரத்தில் நம்மைக் காலை வாரிவிடுது...''

''வேண்டாத பணம் வந்து நம்ம குடும் பத்தையே விழுங்கப் பார்க்குது. முதல்லே அதை உங்க முதலாளிகிட்டே விட்டெறியுங்க...''

அளவுக்கு மீறிய பிரயாணிகளின் பாரத் தைத் தாங்க முனகும் ஆலை ஸ்பிரிங்குகள் போல, நிகழ்ச்சிகளின் கனமையால் அவன் மனம் இயங்கிற்று.

ஹோட்டலிலிருந்து வெளிவந்த குப்தா காரைக் காணாமல் திடுக்கிட்டார். வீட்டுக்கும் காரியாலயத்துக்கும் போன் செய்தார். அங்கும் வண்டி வரவில்லை. அவருக்குப் பணப் பெட்டி நினைவு வந்தது. நேரே போலீஸ் கமிஷனரிடம் ஓடினார். மேலிடத்திலிருந்து எஸ். ஓ. எஸ். பறந்தது. வெளியூர் செல்லும் நெடுஞ் சாலைகள் 'சீல்' செய்யப்பட்டன. ஸி. ஐ. டி.க்கள் சல்லடை போட ஆரம்பித் தனர்.

பூமய்யா தன் மகன் சாதாரணமாகச் செல்லக் கூடிய இடங்களில் தேடினான். அகப் படவில்லை.

குப்தாவின் பங்களா பியூன், காவல்காரர் விசாரிக்கப்பட்டனர். பிறகு பூமய்யாவின் பூட்டிய வீடு கண்டுபிடிக்கப்பட்டது. அதில் அவனது புகைப்படம் கைப்பற்றப்பட்டது. பக்கத்தில் உள்ள ஒரு சைக்கிள் கடைக்காரன் பூமய்யாவுக்கு நண்பன் என்ற தகவல் கிடைத்தது.

அதற்குள் கச்சகூடாவில் அம்பாஸடார் ஆளின்றி 'அம்போ' என்று கிடக்கும் செய்தி வந்தது. அங்குள்ள ரிக்ஷாக்காரர்கள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டனர். அப்துல் என் பவன்தான் கிட்டத்தட்ட அந்த மாதிரி ஒரு தம்பதியை ஏற்றிச் சென்றான் எனத் தெரிய வந்தது. தேடு முதலில் அப்துலே?

சைக்கிள் கடைக்காரனைப் போலீசார் விசாரித்தனர். அதற்குள் அவனது பையன் ஓடி வந்தான். பூமய்யா பத்து நிமிடங்களுக்குமுன் தான் வந்து தன்னிடம் தனது நோஸ்தைப் பற்றி விசாரித்துச் சென்றதாகக் கூறினான். போலீஸ் ஜீப் விரைந்தது. அபீர்பேட் அருகே ரிக்ஷாக்காரன் ஒருவனுடன் வாக்குவாதம் புரிந்து கொண்டிருந்த ஆசாமியைப் போலீஸார் கவனித்தனர்.

பூமய்யா கைது செய்யப்பட்டான். அவன் மனைவி ஹோட்டலில் கைது செய்யப் பட்டாள்.

* * *

கதையைக் கூறிய மாஜி போலீஸ் அதிகாரி இந்த இடத்தில் நிறுத்தினார்.

''அந்தப் பையன் அகப்பட்டானா?'' என்று கேட்டேன்.

''ஒரு மாதம் வரை அகப்படவில்லை. அப் புறம் கிடைத்தானோ என்னவோ! ஒரு விசே ஷம். இந்தத் திருட்டு பூர்த்தி பெறாமல் தடுத்த அந்தப் பையன் பெயர் தெரியுமா?''

எனது புருவங்கள் உயர்ந்தன.

''காந்தி ஜயந்தியில் பிறந்த பையனும். காந்தி என்று பெயராம்!''

அந்தச் சத்தியப் பெயருக்கு எத்தனை சக்தி?


பொங்கல் வாழ்த்துக்கள்
சங்கர் சிமெண்ட்
பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது
ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது
இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்.
தன பில்டிங், சென்னை-2
IS: 269
ISI



davp 70/370


Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31

Managing Editor: T. Sadasivam

உட்புறங்களுக்கும், வெளிப்புறங்களுக்கும் ஈடிணையற்ற அழகிற்கும், நிரந்தரத்தன்மைக்கும்...

ஸில்விக்ரீட்

ஏஸிஸி வெள்ளை சிமெண்ட்





ஸில்விக்ரீட் ஏஸிஸி வெள்ளை சிமெண்டை கண்கவர் பாணிகளிலும், வண்ணங்களிலும் அமைத்துக் கொள்ளலாம்; அதைக் கொண்டு டெகோரேடிவ் பேனல்களையும், டைல் அல்லது டெர்ரஸோ தரைகளையும், ஜாலிகளையும், கொடிவிடுகளையும் சுலபமாக அமைத்துக் கொள்ளலாம்.

அசல் போர்ட்லாந்து சிமெண்டின் உறுதியும், நீடித்து நிற்கும் தன்மையும் உடையதாக இருப்பதனால், அது நிரந்தரமானதாக விளங்குகிறது.

ஸில்விக்ரீட் எவ்வளவு வேண்டுமானாலும், அருகிலுள்ள சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட் கிளையிலோ, அவர்களுடைய விநியோகஸ்தர்களிடமோ கிடைக்கிறது.

ஸ்னோஸெம் மற்றும் **கலர்க்ரீட்டின்** தயாரிப்பில் மூலப் பொருளாக இருப்பது **ஸில்விக்ரீட்.**

ஏஸிஸி *தரத்தில் உயர்ந்த தயாரிப்புகளுக்கு நீங்கள் பெறும் உத்தரவாதம்*

தி அஸோஸியேடெட் சிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்.

தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட்.

SISTA'S-CMI-437 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon